வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632


விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.01.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 23 | பக்கங்கள் : 28





08 இலங்கையில் சமஷ்டி முறை குறித்த கலந்துரையாடல்


09 மூன்றெழுத்துக்கு முன்னுதாரணமான மோடி!


10 மாவை தலைமையில் தமிழரசு இல்லாத புதிய கூட்டமைப்பு?


11 அட்டைப் பண்ணை எங்களுக்கு வேண்டும்

# இளைஞர்களின் கோரிக்கைப்படி அரசியல் முறைமையில் மாற்றம்

## புத்தாண்டு வாழ்த்து செய்தியில் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஜனவரி 01

"நாட்டில் உள்ள பெரும்பான்மையான இளைஞர்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையில் மாற்றம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கையைப் புறக்கணிக்கமுடியாது.

எதிர்வரும் தசாப்தத்திற்குள் வளமான இலங்கையை கட்டியெழுப்ப உத்தேசித்துள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை நாம் அவசரமாக நடைமுறைப்படுத்தவேண்டும்."

- இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புத்துணர்ச்சியுடன் புதிய வருடம் ஒன்று பிறக்கிறது. புதிய சிந்தனைகள், திடமான நோக்கு என்பவற்றுடன் எண்ணங்களைப் புதுப்பித்துக் கொள்ள இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

எண்ணிலடங்கா

19




வாசகர்கள், முகவர்கள்
விளம்பரதாரர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## கொழும்பு மேல் நீதிமன்றம் சிவாஜிக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஜன.01

தியாகி தீலிபனின் நினைவு தினத்தை அனுஷ்டித்தமை தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தை 2023 ஜனவரி மாதம் 11ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு சமூகம் அளிக்குமாறு நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டது.

நேற்று எம்.கே சிவாஜிலிங்கத்தின் வீட்டுக்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் நீதிமன்ற கட்டளையை வழங்கினர்.

19

## பேராசிரியர் பத்மநாதனுக்கு 'சாதனைத் தமிழன்'

யாழ்ப்பாணம், ஜன.01

டான் தொலைக்காட்சி குழுமம் வருடாந்தம் வழங்கும் சாதனை தமிழன் விருது இந்த ஆண்டு யாழ். பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்று பேராசிரியருமான சி. பத்மநாதனுக்கு வழங்கப்பட்டது.

இலங்கையின் பிரபலமான தொலைக்காட்சியான டான் தொலைக் காட்சி குழுமம் ஒவ்வொரு வருட நிறைவிலும் 'டிசெம்பர் 31 இன்னிசை இரவு' எனும் இசை

19



## 2 மாதங்களில் தீர்வு என்று நாடகம் ஆடுகிறார் ரணில்!

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 01

"இரண்டு மாதங்களுக்குள் அரசியல் தீர்வை வழங்க முடியுமா? இது ரணிலின் நாடகம் என்று எங்களுக்குத் தெரியும். அதனால்தான் ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டை நாங்கள் புறக்கணித்தோம்."

- இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார். "அரசியல் தீர்வை வழங்குவதற்காக ஜனாதிபதி கூட்டிய சர்வ

19

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த அரசு ஆதரவும் இல்லை; எதிர்ப்பும் இல்லை

கொழும்பு, ஜன.01

"உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு விருப்பத்தைத் தெரிவிக்கவும் இல்லை. எதிர்ப்பைத் தெரிவிக்கவும் இல்லை."

- இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

'அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாதா?' என்று அவரிடம் வினவியபோது,

உண்மையில் தேர் தலை நடத்துவது அரசு அல்ல. தேர்தலை நடத்து வது தேர்தல்கள் ஆணைக் குழுதான். அரசின் பொறுப்பு அதற்கான நிதியை

19

## ராஜபக்ஷக்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது

### கூறுகின்றார் மைத்திரிபால



கொழும்பு, ஜன. 01

நாட்டை படுவீழ்ச்சியடையச் செய்த ராஜபக்ஷக்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

19

## ஓய்வு நிலை பாப்பரசர் பெனடிக்ற் காலமானார்



வத்திக்கான், ஜன. 01

ஓய்வு நிலை பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ற் உடல்நலக்குறைவு காரணமாக 95 வயதில் அவரது வத்திக்கான் இல்லத்தில் நேற்று மரணமடைந்தார் என்று வத்திக்கான் அறிவித்தது.

பாப்பரசர் பதவியில் இருந்து விலகி கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கும் மேலாக வத்திக்கானில் உள்ள எக் லேசியா மடாலயத்தில் தனது

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது.

எழுத ஆரம்பிக்கும்போது, பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

இந்தப் பத்தியை ஈழநாடு பத்திரிகை புலம்பெயர்ந்த பின்னரும் அதன் ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதவேண்டி வந்தது.

யாழ்ப்பாணம் ஈழநாடுவில் பணியாற்றிய, இன்றைய ஈழநாடு குழுமத் தலைவர் குகநாதன், பாரிஸ் நகரத்திற்கு புலம்பெயர்ந்த பின்னர் அங்கிருந்து பாரிஸ் ஈழநாடு என்ற பெயரில் ஈழநாடு பத்திரிகையை வாரம் ஒருதடவை வெளியிட்டு வந்தார்.

அப்போது அந்த பத்திரிகை பாரிஸ், லண்டன், சுவிஸ், ஜேர்மனி, கனடா என்று ஒரேநேரத்தில் ஐந்து நாடுகளில் வெளியாகியது.

அதன் ஆசிரியராக இருந்த குகநாதனின் வேண்டுகோளின் பேரில் அந்தப் பத்திரிகையிலும் இப்படியும் நடக்கின்றது என்று புலம்பெயர் மண்ணில் நடக்கும் சம்பவங்களை மிகச்சிறிய பத்தியாக ஊர்க்குருவி எழுதிக்கொண்டிருந்தார்.

அதனை யார் எழுதுகின்றார் என்பது அப்போதும் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

ஈழநாடுவின் ஆசிரியராக இருந்த குகநாதன் அப்போது சொன்ன செய்திதான் இது.

லண்டனில் சொலிசிற்றராக இருந்த அவரது நண்பர் ஒருவர் அவரை எப்போது கண்டாலும் ஓடிவந்து, 'ஐசே.... உம்மட ஊர்க்குருவி அருமை ஐசே... பேப்பர் கையிலை கிடைச்சதும் நான் அதைத்தான் முதலில் படிக்கிறனான்" என்று பாராட்டத் தவறுவதில்லையாம்.

ஒருநாள், ஒரு விழாவில் அவரை சந்தித்த அந்த சொலிசிற்றர், முகத்தை திருப்பிக்கொண்டு அவரை திட்டியவாறு கடந்து சென்றிருக்கின்றார்.

அப்போதுதான் அவருக்கு அந்த விசயம் ஞாபகத்தத்திற்கு வந்தது. அதற்கு சில வாரங்களுக்கு முன்னர் அந்தப் பத்தியில் அவரைப் பற்றிய ஒரு செய்தியை ஊர்க்குருவி எழுதியிருந்தது.

ஆக, ஒவ்வொரு வாரமும் யாரையாவது ஒருவரை 'கடிக்கின்ற' போது அதனைப் படித்து இரசித்த அந்த சொலிசிற்றருக்கு தன்னைப்பற்றி எழுதியிருந்ததை இரசிக்க முடியவில்லை.

இது சகஜமானதுதான். பக்கத்து வீட்டில் இருவர் சண்டை பிடித்தால்கூட, வேலிக்குள் நின்று விடுப்புப்பார்த்து பழக்கப் பட்டவர்கள் தான் நாம். சண்டை பிடிப்பவர்களிடையே சமாதானம் செய்து வைக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் அல்ல.

அதனால்தான் மற்றவர்களை பற்றி எழுதுகின்றபோது அதனை படித்து இரசிக்கின்ற நமக்கு நம்மைப்பற்றிய ஒரு உண்மையை எழுதினால் இரசிக்க முடிவதில்லை. இரசிக்க மாத்திரமல்ல, ஏற்றுக்கொள்ளவும் முடிவதில்லைத்தான்.

இன்று புத்தாண்டு என்பதை முதலில் ஞாபகப்படுத்தியிருந்தேன். அதனை நினைத்ததும், இன்றும் யார் தவறையாவது சுட்டிக்காட்டி எழுதவேண்டுமா என்ற கேள்விதான் முதலில் வந்தது.

நேற்றையதினம் நண்பர்கள் சிலர் ஒரு றெஸ்ரோறன்ரில் கூடி இரவு உணவு எடுத்துக்கொண்டிருந்தோம். நாட்டு நிலைமைகள், அண்மைக்காலமாக சீன தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து போகின்ற விவகாரம் என்று பலதும் பத்தும் கதைத்துக் கொண்டிருந்தபோது நண்பர் ஒருவர் சொன்னார், தன்னிடம் தனது நண்பர் ஒருவர், இந்த ஊர்க்குருவி பற்றி அண்மையில் கதைத்தாராம். தனக்கு சரி என்று பட்டதை எந்தவித தயக்கமும் இல்லாமல், எழுதுகிறார் என்று ஆச்சரியப்பட்டாராம்.

அதற்கு, தான் அவருக்கு சொன்னாராம், அவருக்கு எந்த தேவையும் இல்லை. யாரிடமும் ஒரு தேவைக்கு செல்ல வேண்டி வரும் என்று நினைப்பவர்தான், ஒன்றைப்பற்றி எழுதுகின்ற போது பலதையும் யோசிக்கவேண்டும். அவருக்கு அப்படியொரு தேவை இல்லை. அதனால் அவர் தனக்கு சரி என்று பட்டதை அப்படியே எழுதுகிறார் போலும் என்று.

உண்மைதான், இந்த ஊர்க்குருவியைப் பொறுத்தவரை இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் எதையாவது நல்லதைச் செய்ய வேண்டும் என்பது மட்டும்தான் எண்ணம். விருப்பம் எல்லாமே.

அதற்காக முடிந்ததை செய்வோம். அது யாரையும் பாதிக்காதவரை. அதற்காக மற்றவர் செய்கின்ற செயல் நமது மக்களுக்கு பாதகமானது என்றால் அதைப்பற்றி எழுதாமலும் இருக்கமுடியாதல்லவா.

இன்றைய தினம் புத்தாண்டு. ஒவ்வொரு புத்தாண்டின் போதும். இந்த ஆண்டிலாவது அது நடக்கவேண்டும் - இது நடக்கவேண்டும் என்று உங்களில் ஒவ்வொருவரிடமும் பல விருப்பங்கள் இருக்கும்.

அவை கிடைக்க வேண்டும் என்பதே இந்த ஊர்க்குருவியின் இன்றைய விருப்பமும்.

இன்றைய இந்த நல்ல நாளில் உங்கள் அனைவருக்கும் உங்கள் உங்கள் தனிப்பட்ட தேவைகள் நிறைவேறவும், நாட்டின் இன்றைய சூழல் நமக்கு சில கதவுகளை திறக்க ஏதுநிலையில் இருக்கின்றது. அதனை சரியாக நமது மக்கள் பிரதிநிதிகள் பயன்படுத்த அவர்களுக்கு நாம் எல்லோரும் நம்பும் இறைவன் வழி காட்டவேண்டும் என்றும் வேண்டுவோம்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**- ஊர்க்குருவி.**

# அரசின் தீர்மானங்களால் பலமாகும் பொருளாதாரம்

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்

*கொழும்பு, ஜன. 01*

அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களினால் பொருளாதாரம் படிப்படியாக ஸ்திரத்தன்மை அடைந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சவாலான தீர்மானங்கள் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையை நோக்கிச் செல்வதாக அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில மாதங்களில் பணவீக்கம் குறைந்திருப்பது பொருளாதாரம் சரியான திசையில் சென்றுகொண்டிருப்பதற்கான அறிகுறி.

நவம்பரில் 61.0 சதவீதமாக இருந்த பணவீக்கம் டிசெம்பரில் 57.2 சதவீதமாகவும் உணவுப் பணவீக்கம் நவம்பரில் 73.7 சதவீதத்திலிருந்து டிசெம்பரில் 64.4 சதவீதமாகக் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# தலைமன்னாரில் இருந்து கொழும்பு சென்ற அரச பஸ்ஸில் ஐஸ் போதைப்பொருள் மீட்பு

*மன்னார், ஜன. 01*

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் இருந்து ஒரு தொகுதி ஐஸ் போதைப் பொருள் பேசாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் இருந்து இரவு 7.30 மணியளவில் அரச பஸ் பயணிகளுடன் கொழும்பு நோக்கி பயணித்தது.

இதன்போது பேசாலை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பொலிஸார் குறித்த பஸ்ஸை இடைநிறுத்திச் சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது குறித்த பஸ்ஸின் பின் ஆசனத்தின் இருக்கையின் கீழ் காணப்பட்ட பொதி ஒன்றை மீட்டு சோதனை செய்தபோது ஐஸ் போதைப் பொருள் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட ஐஸ் போதைப் பொருள் சுமார் 95 கிராம் நிறையுடையது என பேசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 2 மணித்தியாலங்களின் பின்னர் பஸ்ஸில் பயணித்த பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் பயணங்களை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்கள் வங்கி ஏ.ரி.எம். இயந்திரங்களில் கோடிக்கணக்கான பணம் கொள்ளை!

*கொழும்பு, ஜன. 01*

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கள் வங்கி கிளைகளின் ஏ.டி.எம். இயந்திரங்களில் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஹிக்கடுவை, காலி, பத்தேகம பகுதிகளில் உள்ள ஏ.ரி.எம். இயந்திரங்களிலிருந்து முறையே 4680000, 275000 மற்றும் 5700000 ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அதிகாலையில் குறித்த ஏ.ரி.எம். இயந்திரங்களுக்கருகில் வருகை தந்த வெளிநாட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பிரஜைகள், அங்கு காணப்பட்ட சி.சி.ரி.வி. கமராக்களை செயழிக்கச் செய்து, ஏ.ரி.எம். இயந்திர தரவுகளை மாற்றி இவ்வாறு பணத்தைக் கொள்ளையடித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த மூன்று பிரதேசங்களிலுமே ஒரு முறையில் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளமையால், ஒரே தரப்பினரே அனைத்துக் கொள்ளையுடனும் தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அதனை அடிப்படையாகக் கொண்டு ஹிக்கடுவை, காலி, பத்தேகம உள்ளிட்ட பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# சங்கானை கூட்டுறவுச் சங்கத்தின் நலன்புரி நிதியம் அங்குரார்ப்பணம்

*யாழ்ப்பாணம், ஜன. 01*

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நலன்புரி நிதியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. விஜயமோகனராசா கலந்து கொண்டார்.

இதன்போது புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க. பொ.த.உயர்தரப் பரீட்சை போன்ற பரீட்சைகளில் சித்தி எய்திய கூட்டுறவு பணியாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (அ)

# இந்தியா, சீனா, தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## இராஜதந்திர மட்டத்தில் முன்மொழிவுகள்

*கொழும்பு, ஜன. 01*

இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கான முன்மொழிவுகள் இராஜதந்திர மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வைத்த பிரேரணைக்கு தாய்லாந்து மட்டுமே விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் தாய்லாந்து அரசாங்கத்தின் தலைவர்களுடன் ஜனவரி 8ஆம், 9 ஆம் திகதிகளில் கலந்துரையாடப்படவுள்ளது.

இதற்காக தாய்லாந்துக்கு அதிகாரிகள் விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன.

மேலும் கடந்த அரசாங்கத்தின்போது பங்களாதேஷுடன் ஆரம்பித்த பேச்சுவார்த்தையை தொடர்ந்தும் முன்னெடுக்கவும் இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

# 2023ஆம் ஆண்டிலாவது இலங்கை கையேந்தாமல் இருக்கவேண்டும்!



## கொழும்பு பேராயர் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 01

2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடையவேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அதற்காக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய கட்டமைப்பை உருவாக்கத் தவறினால் நாடு அழிந்துவிடும் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரித்துள்ளார்.

இலங்கையுடன் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் முன்னேறியுள்ளபோதும் இலங்கை ஒரு ஏழை நாடு என்ற பிம்பத்தைப் பெற்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு காலங்காலமாக தேசத்தை ஆட்சி செய்தவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே புதிய ஆண்டில் தேசத்தின் நலனுக்காக அனைத்து பிரஜைகளும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும் என பேராயர் கேட்டுக் கொண்டார். (அ)

# ஜனவரி 05 ஆம் திகதி கூடும் பாராளுமன்றம்

கொழும்பு, ஜன. 01

எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றத்தை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழுக் கூட்டத்தின்போது ஜனவரி 5 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு நடைபெறும் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை பாராளுமன்ற விடுமுறைக் காலம் நீடிக்கப்படுவதைக் கருத்தில்கொண்டு, 5 ஆம் திகதியே பாராளுமன்ற அமர்வை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

புனர்வாழ்வுப் பணியக சட்டமூலம் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள வளாகங்களை மீளப் பெறுவதற்கான சட்டமூலங்களின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதமும் வாக்கெடுப்பும் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# தேர்தலை அரசு தாமதப்படுத்துமானால் நீதிமன்று நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கோருகின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜன. 01



அரசாங்கம் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு முயற்சிக்குமானால் அதனை தடுத்து நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கேட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் காலாவதியாகிவிட்ட நிலையில் விரைவில் புதிய ஆட்சி உருவாக தேர்தல் நடைபெற வேண்டும் என அந்தக் கட்சியின் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு தீர்மானித்தன் பின்னர், நீதிமன்றம் அதற்கு முரணான தீர்ப்பை வழங்கினால் அரசாங்கம் படுதோல்வியடையும்.

புதிய உள்ளூராட்சி மன்றங்களும் புதிய பாராளுமன்றமும் தெரிவு செய்யப்பட்டு சர்வதேசத்துடன் தொடர்புகளைப் பேண முடியும்.

அரசாங்கத்தின் மீது சர்வதேசத்திற்கு நம்பிக்கையில்லாத இந்த சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு பின்னர் பொதுத்தேர்தலை நடத்தவேண்டும்-என்றார். (அ)

# பொலிஸ் ஜீப்பை தாக்கியவர் கைது

கொழும்பு, ஜன. 01

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தினுள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பொலிஸ் ஜீப்பை நேற்று சனிக்கிழமை காலை தாக்கி உடைத்த குற்றச்சாட்டில் 36 வயதுடைய வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான வர்த்தகரின் நண்பர் ஒருவர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

இதனையடுத்து குறித்த வர்த்தகர் நேற்று காலை தனது நண்பரை பார்ப்பதற்காக பொலிஸ் நிலையத்துக்கு சென்றபோது, அங்கிருந்த பொலிஸ் ஜீப் மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்போது சந்தேகத்துக்குரிய வர்த்தகர் மதுபோதையில் இருந்தாரா என்பதை அறிய களுபோவில போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்தியரிடம் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# அம்பேவல பண்ணைக்கு ஜனாதிபதி அரச காணியை எப்படி வழங்கலாம்?

## கேள்வி எழுப்புகின்றார் ரட்ணஜீவன் ஹூல்

கொழும்பு, ஜன. 01

அம்பேவலயில் உள்ள தனியார் நிறுவனமொன்றின் பண்ணைக்கு 30 ஏக்கர் அரச காணியை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவு தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த கடிதத்தில், குறித்த காணியை வழங்க வேறு தகுதியானவர்கள் இல்லையா என வும் காணியை வழங்குவதற்காக ஜனாதிபதி இலஞ்சம் பெறவில்லை என்பதை நிரூபிக்க முடியுமா எனவும் ரட்ணஜீவன் ஹூல் வினவியுள்ளார்.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கை வெற்றி பெற வேண்டுமாயின், இவ்வாறு தான்தோன்றித்தனமாக அதிகாரத்தை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# வடக்கு கல்வி பணிப்பாளராக யோன் குயின்ரஸ் நியமனம்!

யாழ்ப்பாணம், ஜன. 01

வடக்கு மாகாணத்தின் ஐந்தாவது மாகாணக் கல்வி பணிப்பாளராக ரி.யோன் குயின்ரஸ் வடமாகாண பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1986 ஆம் ஆண்டு ஆசிரியராக இணைந்து கொண்ட குயின்ரஸ், பாடசாலை அதிபராக, அதன் பின் பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபராக செயற்பட்டார்.

பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், தீவகம், மடு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் செயற்பட்டார்.

பின்னர் 2013 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் ஒன்று அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார்.

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் ஆகியவற்றின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி வகித்த நிலையில் தற்போது வடக்கு மாகாண கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். (அ)

# தீர்வுகளைத் தருகின்ற தீர்க்கமான ஆண்டாக புதிய ஆண்டு மலரட்டும்

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

கொழும்பு, ஜன. 01

தமிழ் மக்கள் சுமந்து நிற்கும் தீராப் பிரச்னைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் தீர்க்கமான ஆண்டாக புதிய ஆண்டு மலரட்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அந்தச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது,

மக்களை தோற்கடித்து அதில் சுயலாப அரசியல் செய்வோர் இன்னும் மாறவே இல்லை. ஒற்றுமை என்கிறார்கள் அக்கணமே உள் முரண்பாடுகள் என்கிறார்கள், மக்களை மறந்து மறுகணமே மத்தியஸ்தம் என்றும் மாற்றுத் திட்டம் என்றும் புலம்பித் தள்ளுகிறார்கள்.

அவர்களை இனியும் நம்பினால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் நடந்தேறாது என பது மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமக்கான அரசியல் இலாபம் தவிர தமிழ் மக்களுக்கு தொடர் தோல்விகளை மட்டுமே பரிசளிக்கும் அவ்வழியை மறந்து, பிறக்கும் புத்தாண்டிலாவது நடைமுறைச் சாத்தியம் எனும் நல் வழி நடந்திட தமிழ் மக்கள் உறுதி ஏற்றிட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிகளுக்கும், வேரோடிவிட்ட அரசியல் பிரச்னைக்கும் நிலையான தீர்வொன்றை கண்டுவிட வேண்டுமென்ற தீர்மானம் ஏற்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பமும் முயற்சிகளும் நாட்டுக்கு விடிவொன்றை கண்டு தரும் என்று நம்புவோம்.

பல தசாப்த கால பிரச்னையான தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு தீர்வொன்றை தருவதென்பது இலகுவான



காரியமல்ல. அதற்கு ஜனாதிபதி தென் இலங்கையில் பல தடைகளை கடக்கும் பலம் பெறவேண்டும்.

அதற்கு தமிழ் மக்களும் தமது நேசக்கரம் நீட்டி புதிய நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

இத்தகைய தீர்க்கமான காலச்சூழலில் ஆரம்பமாகும் புதிய வருடமானது தீர்வுகளைத் தரும் ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும்-என்று கூறியுள்ளார். (அ)

ஈழநாடு



# மருத்துவ உதவியை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, ஜன. 01

இந்த வருடம் ஜனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவ உதவிக்காக 1500 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைத்த 11,000 விண்ணப்பங்களில் 10,360 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் பூர்த்தி செய்யப்படாத எஞ்சிய 642 விண்ணப்பங்கள் தொடர்பான பணப்பரிமாற்றங்கள் எதிர்வரும் சில வாரங்களில் பூர்த்தி செய்யப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளை வழங்கும்போது தற்போது வழங்கப்படும் உதவிகளை அதிகரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்க விசேட வைத்தியர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் பரிந்துரைகள் கிடைத்ததும் மருத்துவ உதவித் தொகையை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# எல்லை நிர்ணயம் மக்களிடையே பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடாது!

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 01

உள்ளூராட்சி மன்ற தேர்தலை மையப்படுத்தியதாக எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது அது மாறாக தமிழ், இஸ்லாமிய மக்களிடையே இனப் பிரச்னைகளை ஏற்படுத்தி விடக்கூடாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

தேசிய எல்லை நிர்ணயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தேசிய எல்லைகள் நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தென்பகுதி மக்களுடன் கிழக்கு மாகாணத்தையும் ஒப்பிட்டு பார்க்க முடியாது. கிழக்கு மாகாணம் யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு பல்வேறு எச்ச குன்றுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாகாணமாகும்.

அத்தோடு வாகரை, கிரான் மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, ஏறாவூர் பற்று, போரதீவுப் பற்று ஆகிய பிரதேசங்கள் அதிக நிலப்பரப்புகளைக் கொண்ட பிரதேசங்களாகவும், மக்கள் தொகை ஐதாக வாழ்கின்ற பிரதேசமாகவும் உள்ளன.

இப்பிரதேசத்தில் சனத் தொகையினை மையமாக வைத்து எல்லைகளை நிர்ணயிக்கின்றபோது அங்கு தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிஊடாக பூரணத்துவமான உள்ளூராட்சி அதிகாரங்களை மக்கள் நுகர முடியாத சூழல் ஏற்படுகின்றது.

இங்கு வட்டாரங்களில் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

மண்முனைப் பற்று, ஏறாவூர் பற்று, கோறளைப் பற்று மண்முனை வடக்கு பிரதேசங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் எல்லைப்புறங்களில் வாழ்வதன் காரணமாக அங்கு அடிக்கடி எல்லைப் பிரச்னைகளும் ஏற்படுகின்றன.

ஆகவே இங்கு இன வீதாசாரம், நில அமைப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டே வட்டார எல்லைகள் அதிகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட வேண்டும்.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேசத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்படுகின்ற போது குறித்த பிரதேசங்களின் சமூக கலாசாரப் பிணைப்புகள் பிரிக்கப்படாத நிலையை கருத்திற் கொள்ளவேண்டும்.

யுத்த சூழ்நிலையின்போது அரச நிர்வாகங்களை மேற்கொள்வதற்கு அருகிலுள்ள பிரதேச செயலகங்களோடு இணைப்புச் செய்யப்பட்ட நிலைமை இன்று வரை நீடிக்கின்றமை விரும்பத்தக்க விடயம் அல்ல.

இவற்றினை சீர் செய்து கொண்டு எல்லை நிர்ணயிக்கப்படவேண்டும்-என்றார். (அ)

# மன்னாரில் மாட்டிறைச்சி கடைகளுக்கு கட்டுப்பாடு

மன்னார், ஜன. 01

மன்னார் நகர சபை எல்லைக்குள் காணப்படும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களில் மாட்டிறைச்சியின் விலை காட்சிப் படுத்தப்படாமல், நிர்ணயிக்கப்பட்ட விலை இன்றி அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் மன்னார் நகரசபைக்கு தெரியப்படுத்துமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று முதலாம் திகதி தொடக்கம் மன்னார் நகர சபை எல்லைக்குள் காணப்படும் பள்ளிமுனை, பெரியகமம் மற்றும் சந்தை மாட்டிறைச்சி கடைகளில் ஒரு கிலோ தனி மாட்டிறைச்சியின் விலை 1500 ரூபாவும் முள்ளுடன் 1200 ரூபாவுக்கும் ஒரு கிலோ ஈரல் 2000 ரூபாவுக்கும் ஆட்டிறைச்சி 2600 ரூபாவுக்கும் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களில் இறைச்சியின் விற்பனை விலை நுகர்வோருக்கு காட்சிப்படுத்து மாறும் குத்தகை காரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு விற்பனை விலை காட்சிப் படுத்தாமல் அதிகூடிய விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்பட்டால் மன்னார் நகரசபை அலுவலகத்தில் நேரடியாக வோ தொலைபேசி ஊடாகவோ முறையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் அனுமதியை மீறி அதிக விலைக்கு விற்பனையில் ஈடுபடும் குத்தகைதாரர்களின் குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்றும் மன்னார் நகர சபை அறிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் மீண்டும் கோவிட் தலைதூக்கக்கூடிய அபாய நிலை

கொழும்பு, ஜன. 01

உலகின் பல நாடுகளில் கோவிட் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், இலங்கையும் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகின் பல நாடுகளில், குறிப்பாக சீனா, இந்தியா மற்றும் பல நாடுகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நாங்கள் அறிவோம். அந்தச் சூழ்நிலையில், இந்த நோயைப் பற்றி ஏதாவது ஒரு வகையில் விழிப்புடன் இருப்பது நமக்கு முக்கியமானதாகிவிட்டது.

கோவிட்-19 நோய் தற்போது ஒரு பாரதூரமான பிரச்சினையாகத் தோன்றவில்லை என்றாலும், அது முடிவுக்கு வராததால் நாட்டில் மீண்டும் தலைதூக்கும் அபாயங்கள் உள்ளன.

இதன் காரணமாக இது வரை பின்பற்றப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களை முன்னரை விடவும் சிறப்பாக பின்பற்ற வேண்டும்-என்றார்.

# சிமெந்து கூட்டுத்தாபனம் அனுமதியின்றி 7 கோடி ரூபாய்க்கும் அதிகமாக முதலீடு!

கொழும்பு, ஜன. 01

சுற்றறிக்கையின் பிரகாரம் அனுமதி பெறாமல் இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் அரச வங்கி ஒன்றின் நிலையான வைப்பு கணக்கில் 7 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை முதலீடு செய்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

2019, டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் மொத்தமாக ஒரு கோடியே 92 லட்சத்து 61,864 ரூபாய் மற்றும் 2020 ஜனவரி மாதம் ஐந்து கோடியே 15 லட்சம் ரூபாயையும் அனுமதியின்றி முதலீடு செய்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் சிமெந்துக் கூட்டுத்தாபனம் தொடர்பாக நடத்திய கணக்காய்வு அறிக்கையிலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# நேற்றுடன் ஓய்வுபெற்ற ரயில் திணைக்கள ஊழியர்களைத் தக்க வைக்க ஆலோசனை



கொழும்பு, ஜன. 01

நேற்றுடன் 60 வயது பூர்த்தியடைந்து ஓய்வு பெறும் ரயில் திணைக்கள உத்தியோகத்தர்களது சேவை அத்தியாவசியமாயின், ஒப்பந்த அடிப்படையில் அவர்களை தக்க வைக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம், ரயில் திணைக்களத்திற்கு, இந்த ஆலோசனையை வழங்கியுள்ளது.

இதனிடையே, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ரயில் நிலைய அதிபர்கள் சங்கம், பல ரயில் நிலையங்களின், கடமைகளுக்கு தடங்கல் ஏற்படக் கூடும் எனத் தெரிவித்துள்ளது.

60 வயது பூர்த்தியடையும், பெருமளவான ஊழியர்கள் ஓய்வு பெறுகின்றமையால், இந்த நிலைக்கு முகங்கொடுக்க நேரிடும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சுற்றுலா விஸாவில் ஜோர்தான் சென்ற குழு ஒன்று குறித்து தீவிர விசாரணை

கொழும்பு, ஜன. 01

சுற்றுலா விஸாவில் இலங்கையைச் சேர்ந்த குழுவொன்று ஜோர்தானில் பணிபுரியச் சென்றமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அண்மைய நாட்களில் இலங்கையர்கள் குழுவொன்று சுற்றுலா விஸாவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் பிரகாரம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் விசாரணை நடத்தியது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளினால் வெளிநாடுகளுக்குச் சென்ற குழுவிடம் இது குறித்து விசாரித்தபோது, குறுகிய விஜயம் ஒன்றிற்காக ஜோர்தானுக்குப் புறப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், ஆட்கடத்தல்காரர்களின் மோசடி நடவடிக்கைகளில் சிக்காமல் இருக்குமாறும், 1989 என்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அவசர இலக்கத்திற்கு அழைத்து தகவல் அறிந்து சரியான வழியில் வெளிநாடு செல்லுமாறு பணியகம் கோரியுள்ளது. (அ)

# இந்தியா வழங்கிய ஜீப் வண்டிகள் சில பொலிஸ் நிலையங்களுக்கு!

கொழும்பு,ஜன. 01

இந்திய உதவியின் கீழ் இலங்கை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ஜீப் ரக வாகனங்களுள், சில மேல் மாகாண பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

பொலிஸ் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் புத்திக சிறிவர்தன தலைமையில் இதற்கான நிகழ்வு நாரஹேன்பிட்டி காவல் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்திய உதவியின் கீழ் இலங்கைக்கு 500 ஜீப் ரக வாகனங்கள் கிடைக்கப்பெறவுள்ளதுடன், அதில் முதல் கட்டமாக 125 ஜீப் ரக வாகனங்கள் அண்மையில் இந்தியாவினால் வழங்கப்பட்டன. (அ)

ஈழநாடு
Eelanadu
01.01.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் எதிர்பார்ப்பு 2023?

தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஒவ்வோர் ஆண்டுகளும் அரசியல் ஏமாற்றங்களுடன் கழிந்திருப்பதே வரலாறு. பொங்கலுக்கு தமிழீழம் என்னும் சுலோகத்துடன் ஆரம்பித்த தமிழ் தேசிய அரசியல் பயணம், தீபாவளிக்கு முன்னர் - சித்திரைக்கு முன்னர் அரசியல் தீர்வென்னும் ஏமாற்று வார்த்தைகளுடனேயே கடந்த பதின் மூன்றாண்டுகள் கழிந்திருக்கின்றன. இந்த பின்புலத்தில் 2023 ஏமாற்றத்துடன் நிறைவுறுமா அல்லது, எதிர்பார்ப்புக்களில் சிறிதளவாவது நிறைவேறிய பெருமிதத்துடன் முற்றுப்பெறுமா? இவற்றுக்கான பதிலுடன் முதல் நாள் நமது படலையை தட்டுகின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை பொறுத்தவரையில் - 2022, வரலாற்றில் தனித்துவமான இடத்தை பதிவு செய்திருக்கின்றது. 69 லட்சம் சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதிக்கு எதிராக - சிங்கள மக்களே கிளர்ந்தெழுந்து, அவரை அதிகாரத்திலிருந்து அகற்றியிருந்தனர். தன்னையொரு சிங்கள பௌத்தனென்று பகிரங்கமாக அறிவித்திருந்த ஜனாதிபதியொருவர் - நான்தான் நீங்கள் (சிங்கள மக்கள்) தேடிய தலைவனென்று பறைசாற்றிய ஜனாதிபதியொருவர் - தன்னை பாதுகாப்பதற்காக நாட்டைவிட்டு தப்பியோடும் நிலைமை உருவாகியது. இத்தனைக்கும் கோட்டபாய ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை தோற்கடித்த தலைவரென்று சிங்களவர்களில் பெரும்பான்மையானவர்கள் நம்பியிருந்தனர். ஆனால் அவ்வாறான ஒருவரை, அதே மக்களே தூக்கிவீசினர். இது இலங்கைக்கு மட்டுமல்ல தெற்காசியாவிற்கே புதிய அரசியல் அனுபவமானது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுபோன்றதொரு கிளர்ச்சி முன்னர் இடம்பெற்றதில்லை. வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி பின்னர் அரசியல் கிளர்சியாக உருவெடுத்து, இறுதியில் 2022ஐ, இலங்கையின் வரலாற்றில் மறக்கமுடியாதவொரு ஆண்டாக நிலைநிறுத்தியிருக்கின்றது.

2023 எவ்வாறு அமையப் போகின்றது? இந்த ஆண்டு - மீண்டும், தென்னிலங்கையின் இனவாத முகத்தை தோலுரித்துக் காட்டப் போகின்றதா - அல்லது, இதுவரை தீர்வு காணமுடியாத சில விடயங்களில் முன்னேற்றகரமான மாற்றங்களை பதிவு செய்யப் போகின்றதா? இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்னர், தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறிவருகின்றார், அவர் எவ்வாறான தீர்வை காணப் போகின்றார்? தமிழ் தேசிய கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? இவற்றுக்கான பதிலை நிச்சயம் இந்த ஆண்டு பதிவு செய்யும். ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்ட - சமஷ்டியடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை ஒரு மாத காலத்திற்குள் காணமுடியுமா? அவ்வாறான அதிசயம் நிகழ்ந்தால், அது கோட்டபாய நாட்டைவிட்டு தப்பியோடிதனைவிடவும் அதிசயமான சம்பவமாகவே வரலாற்றில் பதிவாகும்.

நாடு ஒரு தேர்தலை எதிர்கொள்வதற்கான அறிகுறிகளும் தெரிகின்றன. அவ்வாறானதொரு தேர்தல் ஆரவாரம் ஆரம்பிக்குமாக இருந்தால், புதிய அரசியல் கூட்டணிகள் பலவற்றை காணும் ஆண்டாகவும் 2023 பதிவாகலாம் - அதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு தேர்தலை எதிர்கொள்ளப் போகின்றது - தனிதனிக் கட்சிகளாகவா அல்லது வழமைபோல் இணைந்தா, அல்லது, மேலும் சிலரை இணைத்துக் கொண்டா? இதற்கான பதிலை ஒரு வேளை 2023 தரக்கூடும்.

இந்த ஆண்டை அரசியல் ரீதியில் எவ்வாறு எதிர்கொள்ளலாம்? இந்தக் கேள்விக்கான விடையை, கழிந்துசென்ற ஒவ்வொரு ஆண்டின் அனுபவங்களிலிருந்தும் தமிழ் தேசிய கட்சிகள் சிந்தித்து செயற்படுமாகவிருந்தால், சில மாற்றங்களுக்கான ஆண்டாக இந்த ஆண்டை பயன்படுத்தலாம். இன்றுள்ள அரசியல் சூழலையும், அதிலுள்ள சாதகமான பக்கங்களையும், துல்லியமாக கணித்து செயற்படும் தற்துணிவு, தமிழ் தேசிய கட்சிகளுக்கு - முக்கியமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்குமானால், ஒரு வேளை இந்த ஆண்டு, அரசியல் யதார்த்தங்களை புரிந்துகொண்டு செயலாற்றிய ஆண்டாகவும் வரலாற்றில் பதிவாகலாம்.

# கடற்றொழில் அமைச்சருடன் யாழ்.கட்டளை தளபதி சந்திப்பு



*யாழ்ப்பாணம், ஜன. 01*

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ணா போதோட்ட, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று சனிக்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

(அ)

# வீதி விபத்துக்களைக் குறைக்க பொலிஸார் விசேட நடவடிக்கை



*கொழும்பு, ஜன. 01*

வீதி விபத்துக்களை குறைக்கம் முகமாக பொலிசாரினால் விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று சனிக்கிழமை வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விபத்துக்களை குறைக்கும் முகமாக கனரக வாகனங்கள், பாரவூர்திகள் மற்றும் சைக்கிள்கள் போன்றவற்றுக்கு மின்னொளி ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது.

குறித்த நடவடிக்கையில் பொலிஸ் அதிகாரிகள், சீன அரச கூட்டுத்தாபனத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பெயரைக் கெடுத்துக்கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை

## அறிவித்தது பொதுஜன பெரமுன



*கொழும்பு, ஜன. 01*

நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திக்கொண்ட உள்ளூராட்சிச் சபைகளின் பிரதிநிதிகளுக்கு இம்முறை தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலுக்கு வந்த பின்னர்,தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திக்கொண்டுள்ள பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் கட்சிக்குள் இருக்கின்றனர் என்ற தகவல் கிடைத்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நிறுத்துவதற்கு தகுதியான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காரணமாக நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கு வேட்பு மனுக்களை வழங்குவதில்லை என்ற கொள்கை ரீதியான தீர்மானத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்துள்ளது - என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -62

# உப்புமா வென்ற கதை

**கணபதி சர்வானந்தா**

ஒரு தேர்தலின்போது மக்கள் தொகையில் அதிக தொகையினரின் வாக்குகளைப் பெறும் வாக்காளரே வெற்றி பெறுகிறார். அவர் சார்ந்த கட்சிக்கே அந்த வெற்றி சென்று சேர்கிறது.அவரே அந்த மக்களுக்குரிய பிரதிநிதியாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார். அவர் கருத்தே அந்த மக்களின் கருத்தாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஜனநாயகம் நிலைக்க வேண்டும். மக்களுக்கானவர், மக்களே தமது அரசியல் என்று எண்ணுபவர் ஒருவரை மக்கள் தமது பிரதிநிதியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் மக்கள் தமது சுய விருப்பத்தை விட்டு, மிகவும் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு உதாரணமாக ஒரு கதை. அந்த வகையில் மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து முன்னராகச் சில திட்டங்களை வகுப்பது எப்படி? எப்படி ஒற்றுமையாக இருந்து தமது விருப்பத்தை நிறைவேற்றலாம்? என்பதற்கும் இந்தக் கதை ஒரு முன்னுதாரணமாக இருப்பதைக் கண்டேன்.

நூறு பேர் தங்கும் விடுதி அது. அங்கு தினமும் காலை உணவாக உப்புமா பரிமாறப்படுவது வழக்கம். அந்த நூறு பேரில், எண்பது பேர் உப்புமாவை விரும்பாதவர்கள். உப்புமாவுக்குப் பதிலாக வேறு எதாவது உணவு பரிமாறப்பட வேண்டும் எனக் கோரி வந்தனர். அவர்கள் அதனைப் புகாராகவும் முன்வைத்தனர்.

அதே சமயம் மற்ற இருபது பேரும் உப்புமாவை ருசித்து உண்டு வந்தனர். மீதமுள்ள எண்பது பேரும் உப்புமாவை வெறுப்போடு உண்டு வந்தனர். அதைத் தவிர வேறு ஏதாவது சமைக்க வேண்டும் என்று தமது கோரிக்கையை முன்வைத்தனால் அந்த விடுதியில் ஒரு குழப்ப நிலை உருவாகியது. காலப் போக்கில் அதனை உப்புமாவுக்கு எதிரான ஒரு போராட்டமாக அவர்கள் மாற்றி இருந்தனர்.

அந்தக் குழப்பமான சூழ்நிலையைச் சமாளிக்க விடுதி அதிகாரி தடுமாறினார். உடனடியாக ஒரு முடிவை எடுக்க வேண்டியிருந்தது. உணவு எது என்று தீர்மானிக்க அவர்களிடையே வாக்களிக்கும் முறை நல்லது என்று முன்மொழியப்பட்டது. அதன்படி எந்த உணவு அதிக வாக்குகளைப் பெறுகிறதோ அந்த உணவே காலை உணவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த நூறு பேரில் உப்புமாவைக் காலை உணவாக விருப்போடு உண்டு வந்தவர்கள் இருபது பேரும் தமது விருப்பத்தில் உறுதியாக இருந்தனர். தாம் உப்புமாவுக்கே வாக்களிக்க வேண்டும் என ஒரு தீர்மானத்தைத் தமக்குள் எடுத்துச் செயற்பட்டனர்.

வாக்களிப்பு நடைபெற்றது. அவர்கள் அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். உப்புமாவை விரும்பிய அந்த இருபது மாணவர்களும் துல்லியமாக உப்புமாவுக்கே வாக்களித்தனர்.

மீதமாக இருந்த நூறு பேரில் பதினெட்டுப்பேர் பேர் மசாலா தோசைக்கும், பதினாறுபேர் பேர் கிழங்கு பரோட்டாவுடன் குருமா பரிமாறப்பட வேண்டும் என்றும், பதினான்கு பேர் ரொட்டியுடன் மரக்கறி வேண்டும் என்றும் பன்னிரண்டு பேர் பாணும் பட்டரும் போதும் என்றும், 10 பேர் நூடில்ஸ் எனவும், மீதி 10 பேர் இட்லி சாம்பார் வேண்டும் என்றும் தமது வாக்கைச் செலுத்தியிருந்தனர்.

தேர்தலின் முடிவில் வாக்குகள் எண்ணப்பட்டன. வாக்களிப்பு முடிவுகளின்படி, உப்புமா அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றது, அதனால், அன்று தொட்டு ஒவ்வொரு நாளும் உப்புமாவே வழங்கப்பட வேண்டும் என முடிவாயிற்று. விரும்பியோ விரும்பாமலோ அந்த முடிவை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டது.

அந்த உப்புமா என்ற குழப்பத்துக்குத் தேர்தல்தான் முடிவு என்ற தீர்மானத்தை அவர்கள் எடுக்க முன்பு தமக்கு விரும்பிய உணவை உண்ணக் கூடிய தீர்மானத்தை எட்டப் பல வழிகள் இருந்தன. ஆற அமர இருந்து பேசித் தீர்மானிக்கப் பல வாய்ப்புகள் இருந்தன.

தேர்தல் முறை எப்போது சிறந்தது? ஒட்டு மொத்த மக்கள் தொகையில் அதிகப்படியானவர்கள் ஒரு கொள்கையோடு இயங்குபவர்களாக இருக்குவரை தேர்தல் நல்ல முடிவைத் தரும். மக்கள் சார்பானதொரு முடிவை எட்ட அது வாய்ப்பளிக்கும்.

மக்கள் தொகையில் எண்பது சதவீதமானோர் சுயநலவாதிகளாகவும், பிளவுபட்டவர்களாகவும், சிதறடிக்கப்பட்டவர்களாகவும் இருக்கும் வரை தேர்தல் ஒரு சரியான முறையை எட்ட வழிவகுக்காது என்பதையே மேற்படி கதை எமக்கு உணர்த்துகிறது.

மேற்சொன்ன கதையின்படி மக்கள் தொகை அதிகப்படி உள்ளதொரு சமூகத்தில் தமது கொள்கையில் ஒற்றுமையாகவும், உறுதியாகவும் ஒன்றுபட்டு இருக்கின்ற சிறுபான்மையினரே ஒட்டு மொத்தச் சமூகத்தையும் ஆளுவர்.

அவர்கள் படு முட்டாள்களாகவும் பிழையானதொரு முடிவை எட்டக் கூடியவர்களாகவும் சமூகத்தைச் சீரழிப்பர்களாகவும் கூட இருக்கலாம். வாக்கெடுப்பின்படி பெரும்பான்மையினர் அவர்களே.

மேற்படி சம்பவத்தில் உப்புமாவை ஆதரித்தவர்கள் இருபது சத வீதமானோரே, மிகுதி எண்பது சதவீதமானோர் காலை உணவாக என்னத்தை உண்ண வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்கக் கூடிய வலிமையுள்ளவர்களாக இருந்ததிலிருந்து... என்னத்தைக் கற்றுக் கோண்டோம்?

நாம் ஒற்றுமையில்லாது, ஒரு குடையின் கீழ் அணிதிரளாது, ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டு செயற்படாது போனால் ... மேல் சொன்ன கதையின்படி அந்த இருபது சத வீதமானோரின் விருப்பத்தை மிகுதி எண்பது வீதமானோர் ஏற்றுக் கொள்ள வேண்டிவர்களாக இருப்போம். அந்த இருபது சதவீதமானோரின் விரும்பமே முகுதியானோர் மீது திணிக்கப்படும். இது ஒரு மௌனமான செய்தி.

# இந்தவார ராசிபலன் 01.01.2023 - 06.01.2023

ஜனவரி 01 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 17

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : தசமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நெருக்கடிகள் விலகும். வருமானம் அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவை.எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் போகும், செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் அதன்பின் தொழிலில் லாபம், உத்தியோகத்தில் நன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்ப்புகளைத் தாண்டி நினைத்ததை சாதிப்பீர்கள். நீங்கள் ஈடுபடும் செயல்களில் நன்மைகள் அதிகரிக்கும். லாப நிலை உருவாகும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

முயற்சிகள் வெற்றியாகும். செயல்களில் லாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். திடீர் செலவுகளும் வருமானத்தில் தடையும் உண்டாகும். அதன்பின் நிலைமை சீராகும். விருப்பங்கள் நிறைவேறும், தொழில், உத்தியோகம் சிறப்பை தரும், நெருக்கடிகளை சந்திப்பீர்கள். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். மனம் மகிழும்படியான நிலை உண்டாகும். எதிர்பாராத செலவுகளும் அலைச்சலும் உண்டாகும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

கடந்த வாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும் செலவுகளில் கவனம் தேவை. விருப்பங்கள் நிறைவேறும், வியாபாரத்தில் லாபம் ஏற்படும். எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். அதன்பின் வீண் அலைச்சலும் செலவுகளும் உண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாரம் இது. வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். புதிய முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

முயற்சி நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். சந்திராஷ்டமம் தொடங்குவதால் கவனம் தேவை. எதிர்ப்பு விலகும். செல்வாக்கு உயரும். நினைத்ததை அடைவீர்கள். செயல்களில் தடுமாற்றம் நெருக்கடி உண்டாகும். வேலைகளை திட்டமிட்டபடி முடிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சிகள் இழுபறியாகும். செயல்களில் சங்கடங்கள் தோன்றும். அதன்பின் நிலைமை சீராகும் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும், தொழில் உத்தியோகத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும்.எதிர்பார்ப்புகள் இழுபறியாகும். அதன்பின் நிலை மாறும். வருமானம் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றியை உண்டாகும். துணிச்சலுடன் செயல்பட்டு உங்கள் வாழ்க்கைக்கு வேண்டியதை அடைவீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உங்கள் செயல்கள் வெற்றியாகும். அரசு வழியிலான முயற்சிகள் நன்மையாகும். புதிய முயற்சிகள் வேண்டாம். வார்த்தைகளில் நிதானத்தைக் கடை பிடியுங்கள். விருப்பங்கள் நிறைவேறும். செயல்கள் லாபமாகும். எதிர்பாராத நெருக்கடியும் சங்கடங்களும் தோன்றும். தடைகள் விலகும். நீண்ட நாள் திட்டங்களை நிறைவேற்றி ஆதாயம் காண்பீர்கள். அதன்பின் அலைச்சலும் செயல்களில் இழுபறியும் உண்டாகும். உங்கள் செயல்கள் லாபமாகும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் தேவைகள் நிறைவேறும். செயல்களில் கவனம் தேவை. செயல் களில் லாபம் தோன்றும். முயற்சிகள் பலிதமாகும். விருப்பங்கள் நிறைவேறும். உழைப்பிற்கேற்ற வெற்றியை அடைவீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். விழிப்புணர்வு அவசியம். தடைகள் விலகும், வருமானம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நினைத்ததை அடைவீர்கள். அரசு வழியிலான முயற்சிகள் அனுகூலமாகும். செயல்களில் கவனம் தேவை. குடும்பத்தின் முன்னேற்றத்திற்குரிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மகிழ்ச்சியும் அதிகரிக்கும். சில சங்கடங்கள் தோன்றும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். வருமானம் கூடும். உங்கள் நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். நெருக்கடிகள் தோன்றும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். எதிர்பார்ப்பை நிறைவேறும். பண வரவு மகிழ்ச்சி தரும். வியாபாரம் அபிவிருத்தி யாகும். சுறு சுறுப்பாக செயல்பட்டு உங்கள் வேலைகளை முடிப்பீர்கள். வருமானத்திற்குரிய வழிகள் உண்டாகும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

யோசித்து செயல்பட வேண்டிய வாரமிது. வியாபாரம், தொழிலில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்திற்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி உண்டாகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். இழுபறியாக இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். தொழிலில் கூடுதல் கவனம் தேவைப்படும். உடல் நிலையில் கவனம் தேவைப்படும். வாகனப் பயணத்தில் எச்சரிக்கை அவசியம். எதிர்பார்த்த பணம் வரும்.


**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாரம் இது. எண்ணங்கள் நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். பொருளாதார நிலை உயரும். சுறு சுறுப்புடன் செயல்பட்டு நினைத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்பத்தினர் உதவியுடன் நினைத்ததை அடைவீர்கள். தடைபட்டிருந்த செயல்களை முடிப்பீர்கள். உழைப்பிற்கேற்ற லாபம் காண்பீர்கள். செயல்களில் ஆதாயம் உண்டாகும். செல்வாக்கு உயரும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு ஏற்படும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

செலவுகள் அதிகரிக்கும். அதன்பின் நிலை சீராகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். தேவைகள் நிறைவேறும். திடீர் செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். அதன்பின் நிலை சீராகும். உடலில் சில சங்கடங்கள் தோன்றும் என்றாலும் உங்கள் மன வலிமையால் அதை சமாளிப்பீர்கள். உங்கள் முயற்சிகளால் நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். அந்நியர்களால் சில சங்கடங்களுக்கு ஆளாவீர்கள். உடல் நிலையில் சங்கடத்தை உண்டாக்கலாம்.

# ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான இந்திய முதலீடுகள்!



சென்னை மடல்
-பகவான் சிங்-

புத்தாண்டு வாழ்த்துகள். எமது எதிர்காலம் சிறப்பாகவும் இனிமையாகவும் அமைதி

நெறியுடனும் அமையட்டும் என்று கடவுளை வேண்டுகிறேன்.

நடந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால், எவ்வளவு துன்பங்கள், துயரங்கள், ஏமாற்றங்கள், வாடிப்போன ஏக்கங்கள்! அதில் நம் மனிதர்களின் பங்கு எவ்வளவு, இறைவனின் தண்டனையாக அனுபவித்தது எத்தனை என்று உன்னிப்பாக யோசித்தால், கடந்த சோகத்தில் நம் பங்கின் எடை நமக்குப் புரியும். நடந்து முடிந்த விஷயங்களை விட்டுவிடுவோம். ஆனால், அதற்கு முன்பு அவற்றின் தெளிவான பாடங்களை உள்ளுக்குள் ஆழமாக ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தைச் சிறந்த முறையில் அமைக்கப் புத்தாண்டு உறுதிமொழி எடுப்போம். சரியா? ஓகேயா? தற்போது நடந்து வரும் நல்ல விஷயங்களை மனமார ரசிப்போம், கொண்டாடுவோம். அவற்றின் பலனை எப்படி நம் சமுதாயத்தின் நலனுக் காகப் பயன்படுத்த முடியுமென்று ஒன்றாக இணைந்து சித்திப்போம், சாதிப்போம். ஓகேயா? என்னைப்போல் போர்ரணங்களின் உதிர வெள்ளத்தில் அல்லாடிக் கொண்டு கரையைத் தேடத் துடிக்கும் பல உள்ளங களில் கடந்த ஞாயிறன்று சில்லென்று இனிப்புப்பால் பாய்வதுபோல் ஒரு செய்தி கனியாகக் கிடைத்தது, நமது 'ஈழநாடு' இதழின் முதல் பக்கத்தில். சந்தோஷத் தில் ஒரு நீண்ட கால நண்பரிடம் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டேன்.

"ஈழநாடு முதல் பக்கச் செய்தியைப் படித்தேன். மிக்க மகிழ்ச்சி, பெருமையும்கூட. இந்த ஒற்றுமை நீடிக்கட்டும், வலுவடையட்டும். முயற்சிகள் எடுத்த உங்களுக்கு வாழ்த்துகள்" என்றேன். அவரும் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வகையில் சிரித்தார். "நன்றி, நன்றி. எப்படிப் போகுதென்று பார்ப்போம்", சொன்னது, ரெலோ தலைவரும் நாடாளுமன்றத்தில் மூத்த உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன். நான் எந்தச் செய்தியைப் பற்றிச் சொல்கிறேன் என்றும், எந்த நிகழ்வைக் கொண்டாடுகிறேன் என்பதும் இனிய 'ஈழநாடு' நண்பர்களுக்கு நன்றாகவே தெரியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைப்பற்றித்தான்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சிக்கலுக்கும், நாட்டின் குறுகியகால மற்றும் நீண்ட காலப் பிரச்னைகள் பலவற்றுக்குமான நிரந்தரத் தீர்வுக்கு முக்கிய அம்சமாக இருக்கும் தமிழர் பிரச்னைக்கும் விடை காணும் பாதையில் பல தடைகள் இருப்பதை நாம் உணர்கிறோம்.

இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பெரு நாடுகள் மற்றும் சர்வதேச செலாவணி நிதியம், ஐ. நா. அமைப்புகள், உலக வங்கி ஆகியவற்றுக்கு நம்பிக்கையூட்டும் அளவில், ஆரோக்கியமான நேர்மறை அரசியல் சூழலை உருவாக்குவது ஓர் உடனடித் தீர்வாக இருக்கும். இது மட்டுமல்லாமல், ஜனாதிபதியும் அவரது அரசும் நாடாளுமன்றம், அரசியல் கட்சிகள், பௌத்த குருமார்கள் ஆகியோரது முழு ஒத்துழைப்புடன், உணவு, எரி பொருள், மருந்துப் பொருள் தட்டுப்பாட்டை எதிர் கொள்ளும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியது அவசியம்.

சீனாவில் உருவாகி, உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கும் புதிய கோவிட் அலை குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். சில நாட்களுக்கு முன் சீனாவிலிருந்து கேரளா திரும்பிய ஒரு தாயும் மகளும் இந்த வைரஸைச் சுமந்து வந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்தியாவைவிட, இலங்கையில் நிலைமை மோசமடையவும் அதிக வாய்ப்புள்ளது, காரணம், சீனாவிலிருந்து இலங்கைக்கு வந்து போகும் பயணிகளின் எண்ணிக்கை அதிகம். வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில், இந்தியாவில், நாடு தழுவிய மாபெரும் கோவிட் அலை உருவாகி, அதிக உயிரிழப்புகள் நேரலாம் என்று அண்மை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கடந்த ஈராண்டு காலத்தில், டெல்டா, ஓமிக்ரோன் வைரஸ் பரவல் அனுபவத்தால் பாடம் கற்ற இந்தியா, எந்த நிலையையும் ஓரளவுக்குச் சமாளித்துக்கொள்ள முடியும். ஆனால், இலங்கைக்கு இது கடினம். மேலும் பாரத் பயோரெக்கின் கோவக்சின், சீரம் இன்ஸ்டிட்யூட் ஒவ் இந்தியாவின் கோவிஷீல்ட் ஆகிய இரண்டு உள்நாட்டுத் தடுப்பூசிகளின் போதுமான கையிருப்பு இந்தியாவில் உள்ளது. ஆனால், இலங்கையில் இதுபோன்ற எந்த உள்நாட்டுத் தயாரிப்பும் இல்லாததால், எந்த உதவிக்கும் இறக்குமதியை மட்டுமே நம்பியாகவேண்டிய நிலை நீடிக்கிறது. தவிர, மருத்துவமனைப் படுக்கைகள், மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், சுகாதாரத் துறை உள்கட்டமைப்பு ஆகியவற்றில் பெருந் தொற்றுக் காலத்தில் பெரும் பற்றாக்குறையைச் நீங்கள் சந்தித்தீர்கள். மேலும், வைரஸ் பரவல், இலங்கையின் பொருளாதாரத்தை எப்படிச் சீரழித்தது என்பதையும் கண்டீர்கள்.

எனவே, நாம் இப்போதே தயாராவோம். தமிழகத்தில் நாங்கள், வைரஸை எதிர்க்கவும் எதிர்ப்பு சக்தியை

## சுய சார்பு நாடாக மாற கடினமாக உழைப்போம்

அதிகரிக்கவும் அதிகாலையில், கப சுரக் குடிநீர் போன்ற கஷாயங்கள் குடிக்கிறோம். இதுபோன்ற இயற்கை மருந்துகள் இலங்கையிலும் இருக்கும் என்று நம்புகிறேன். கடந்த ஞாயிறன்றுகூட உங்களுடனான எனது உரையாடலின்போது, வருமுன் காப்பதே சிறந்தது, குறிப்பாக, கோவிட் விஷயத்தில், என்று கூறியிருந்தேன். எனவே, முகக் கவசங்கள் அணிந்து, சமூக இடைவெளியைப் பின்பற்றி, மஞ்சள் தூள் சேர்த்துக் கொதிக்க வைத்த நீரைப் பருகி, நம்மை நாம் பாதுகாத்துக்கொள்வோம். அதோடு, பாட்டி வைத்தியர்களிடமும் கேட்டுத் தெளிவோம்.

மற்றொரு விஷயம். இதையும் கடந்த காலங்களில் பலமுறை கூறியுள்ளேன். இந்தப் புதிய கோவிட் அலையை எதிர்கொள்ள, பீஜிங்கும் டில்லியும் அனுப்பும் தடுப்பூசிகளை வரவேற்கும் அதே நேரத்தில், அவற்றின் உற்பத்தி ஆலைகளை இலங்கையில் அமைக் கும் சாத்தியக்கூறுகளையும் அந்த இரு நாடுகளும் பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வையுங்கள். குறிப்பாக, இந்தியாவிற்கு இந்த அழுத்தம் அதிகம் கொடுக்கப்படவேண்டும். காரணம், அதன் இரண்டு

வற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். பாரம்பரியமான தொப்புள்கொடி உறவிருப்பதால் இந்தியாவுடன் இது எளிதாக இருக்கலாம். ஆனால், சீனா முற்றிலும் வணிக நோக்கு கொண்ட நாடு. ஷேக்ஸ்பியரின் 'மெர்சன்ட் ஒவ் வெனிஸ்' நாவலில் வருவதுபோல், தனது நண்பன் பஸானியோவுக்கு உதவுவதற்காகப் பெற்ற கடன் தொகையைத் திரும்பச் செலுத்தாத ஆன்டொனியோவின் சதையை அறுத்து தருமாறு கேட்ட கொடூரப் பேராசைக்கார ஷைலொக் போன்ற நாடு அது. இந்தக் கதையை இதுவரை படித்ததில்லை என்றால் இனி படிக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். இதில் தற்காலத்துக்குத் தேவையான பல பயனுள்ள பாடங்கள் பொதிந்துள்ளன.

தொப்புள்கொடி உறவான அண்டை நாடும்கூட, சீன டிராகன், சற்றே ஆரவாரத்துடன் இலங்கையின் வட பகுதியில் கால் பதித்த பிறகே விழித்துக்கொண்டுள்ளது. அந்தப் பகுதிகள் தென்னிந்தியாவிற்கு மிக அருகாமையில், தமிழகத்திலிருந்து ஒரு மணி நேரப் படகுச் சவாரி தூரத்தில் இருப்பது இப்போதுதான் டில்லிக்காரர்களுக்குத் தெளிவாகியுள்ளது. சர்வதேச செலாவணி நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கடன் தொகையில், இலங்கையில் சீரழிந்திருக்கும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த, இந்தியாவின் கனவு முதலீட்டுத் திட்டப்

## வட இலங்கையில் மின் உற்பத்தி நிலையங்கள்?

தடுப்பூசிகளும் உலக அளவில் பிற நாட்டுத் தயாரிப்புகளுடன் ஒப்பிடும்போது, குறைந்த விலையில், சிறப்பான வெற்றி பெற்றவை.

டில்லிக்கு பைபிளைக் காட்டுங்கள். அதன் புக் ஒவ் மத்யூவில் ஒரு பிரபல வசனம் உள்ளது - "ஒரு மனிதனுக்கு மீனைக் கொடுத்தால், ஒரு வேளைக்கான உணவைக் கொடுக்கிறாய். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தால், வாழ்நாள் உணவுக்கு வழி காட்டுகிறாய்."

இதையும் நான் என் முன்னைய 'ஈழநாடு' கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தேன். புதிய புவிசார் அரசியல் சூழலில், இலங்கையும் ஈழத் தமிழர்களும், இப்பிராந்தியத்தின் இரு பெரும் வல்லரசுகளான சீனா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. உங்கள் தேசிய நலனில் சமரசம் இல்லாமல், இரு நாட்டிடமும் பெறவேண்டிய

பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக, உலகப் புகழ்பெற்ற செய்தி நிறுவனமான றொய்ரர்ஸ், அண்மையில் தெரிவித்துள்ளது. ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான இந்திய முதலீடுகள், பிராந்திய எதிரியான சீனாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இச்செய்தி குறிப்பிடுகிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல், வட இலங்கையில் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் திருகோணமலை துறைமுகத்தின் மாபெரும் வளர்ச்சி உள்ளிட்ட பல பெரிய இந்திய திட்டங்கள் குறித்தும் அதில் பட்டியலிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சிங்கள அரசு பலமுறை குறிப்பிட்டுள்ளதுபோல், இந்திய முதலீடுகளை ஏற்றுக்கொள்வதால், கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக, குறிப்பாக தெற்குப் பகுதியில் செயல்பட்டு வரும் சீனாவின் உள்கட்டமைப்பு முதலீடுகளிலிருந்து இலங்கை விடுபட முடியாது. இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியான 7.4 பில்லியன் டொலர் 2021ஆம் ஆண்டு கணக்கின்படி, சீனாவுக்கான கடன். சீனாவின் கடன் வலையில் இலங்கை வெகு வேகமாகச் சரிந்துபோவதைக் கண்டு வெகுண்ட இந்தியா தனது தென்னண்டை நாட்டுக்கு உதவ, ஆழமான முயற்சிகளை அதிகப்படுத்தியுள்ளது.

சீனாவுக்கான கடன் தொகை மிக அதிகமாகிவிடாமல் ஒரு பாதுகாப்பான அளவில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ள இந்தியா விரும்புகிறது. இலங்கையைவிட மோசமான கடன் நிலையில் பாகிஸ்தான் (77.3 பில்லியன் டொலர்), அங்கோலா (36.3 பில்லியன் டொலர்), எதியோப்பியா (7.9 பில்லியன் டொலர்) மற்றும் கென்யா (7.9 பில்லியன் டொலர்) ஆகிய நாடுகள் உள்ளன. இந்த நாடுகளின் சமூக - அரசியல் கட்டமைப்புகளின் பிடி சீனாவின் கையில் உள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கையைச் சேர்க்க விடமாட்டோம் என்ற புத்தாண்டு சபதத்தை நாம் ஏற்போம்.

நாளடைவில் சீனா, இந்தியா என்று எந்த வெளிநாட்டின் அழுத்தத்துக்கும் ஆளாகாமல், சுய சார்பு கொண்ட நாடாக மாறக் கடினமாக உழைப்போம். அந்த வல்லரசுகள், நம்மை ஒரு தோழமை நாடாகப் பார்க்கவேண்டுமேயன்றி, அவர்களால் ஊட்டம் பெறும் ஒரு தாழ்ந்த நாடாகக் கருதக்கூடாது. இலங்கையின் பணவீக்க விகிதம், வரலாறு காணாத 73.7 சதவிகிதத்தை எட்டியிருப்பதாகவும், உணவு மற்றும் எரிபொருளுக்கான கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதிர்ச்சியூட்டும் செய்திகள் வந்தாலும், இவற்றிலிருந்து மீள்வது எட்டமுடியாத இலக்கன்று.

பல மாதங்களாக நிலவும் இந்தக் குழப்பமான, அழுத்தமளிக்கும் நிகழ்வுகளுக்கு மத்தியிலும் ஒரு மகிழ்ச்சியளிக்கும் செய்தியைப் பார்த்தேன் - 2022ஆம் ஆண்டுக்கான பெருமை மிகு 'புக்கர்' விருதுக்கு சினேஹன் கருணதிலக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் சிங்களவராக இருந்தால் என்ன? இலங்கைவாசி தானே? 2023க்கான சிறந்த சர்வதேச விருதை ஒரு தமிழர் வெல்வதை வரும் ஆண்டு கொண்டாடுவோம்.

மீண்டும் உங்களுடன் புத்தாண்டுப் புன்னகையைப் பகிர்ந்துகொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

### புதிய ஆண்டில் ஒரு சங்கல்பம்!



இந்த சோக காட்சி கடந்த ஆண்டின் கசப்பான பரிசு. இதுபோன்ற துயரங்கள் இனிமேல் நடக்காமல் நம்மை காப்பாற்ற முயற்சிகளை உடனடியாக எடுப்பது நம் புத்தாண்டு உறுதிமொழியாக இருக்கட்டும். நழுவும் அரசியல் தலைவர்களுக்காக காத்திருக்க அவசியமில்லை, அந்நிய நாடுகளின் நிரந்தர பிட்சை எமக்கு ஆரோக்கியமானதல்ல, நம் சுய முயற்சிகளே போதும். உலகமெங்கும் நம் குடும்பங்கள் இருக்கின்றன. நம் உயிர் உள்ளங்கள் வாழ்கின்றன. தாய் நாட்டை மீட்டெடுக்க அவர்களை அன்போடு அழைப்போம், கைகோர்ப்போம் இந்த மாமுயற்சியில். நம் தொப்புள்கொடி உறவுகளோடு இணைந்து, ஒரு 'தாய் உண்டியல்' அமைப்போம். சிறிய படியாக ஆரம்பமாகட்டும். அடுக்கு மாடியென்ன, மகா இமயமே அமைப்போம். இந்த 'தாய் உண்டியல்' ஒரு புத்தாண்டு தொடக்க முயற்சி. அல்ல, இது ஒரு புரட்சியாக இருக்கலாமா? 'அம்மாவின் உண்டியல்', 'Mom's Wallet'. 2023 பரிசு இது - நம் தாய்க்கு, நம் சந்ததியினருக்கு. தொடங்கலாமா? தலா பத்து ரூபா போதும் மாதத்திற்கு யாழில். கனடாவில் பத்து டொலர் மட்டும். இந்த உண்டியலை வழி நடத்துவதுற்கு நம் நம்பிக்கையுள்ள மாமனிதர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் உலகில். தன்னம்பிக்கையை இந்த ஆண்டின் உறுதி மொழியாக ஏற்றுக் கொள்வோம், இது சாத்தியம். என்னை நம்பவேண்டாம், உங்களை நம்புங்கள். ப்ளீஸ்.

# இலங்கையில் ஒன்பது தசாப்தகால வரலாற்றைக் கொண்ட

## சமஷ்டி முறை குறித்த கருத்தாடல்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு வழிமுறைகளை ஆராய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூட்டிய பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டில் தமிழ்க்கட்சிகள் பிரதானமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை பாதிக்கும் பிரச்சினைகளை மூன்று கட்டங்களில் அணுகுவதற்கு யோசனைகளை முன்வைத்தது.

முதலாவது அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனவர்கள் விவகாரம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசினால் கையகப்படுத்தப்பட்ட தனியார் நிலங்களை விடுவித்தல், தொல்பொருளியல் திணைக்களம், வனங்கள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றின் உத்தரவின் பேரில் நிலங்களை சுவீகரிப்பதை நிறுத்துதல்.

இரண்டாவது அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்துதல்.

மூன்றாவது அரசியலமைப்பு சீர்திருத்தத்துடன் சம்பந்தப்பட்டது. புதிய அரசியலமைப்பு ஒன்றின் மூலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி கட்டமைப்பின் கீழ் அதிகாரத்தை பரவலாக்குதல்.

இவற்றில் இறுதி அணுகுமுறையான சமஷ்டி கட்டமைப்பு மூலமான தீர்வு குறித்து கொழும்பு சிங்கள மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் குறிப்பாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் அவதானிகள் கடுமையான எதிர் விமர்சனங்களை முன்வைத்துவருவதை காணக்கூடியதாக இருக்கிறது. அவர்களில் பலரும் சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கும் தமிழ் தேசியவாதிகளின் நிலைப்பாடுகளுக்கு சார்பாக குடிப் பரம்பலோ, புவியியலோ அல்லது பொருளாதாரமோ இல்லை என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள்.

ஆனால், அபூர்வமாக ஒரு சிலர் சமஷ்டி கட்டமைப்புக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா கடந்தவாரம் 'பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும். ஜனாதிபதி எதிர்நோக்கும் இரு பிரதான சவால்கள்" என்ற தலைப்பிலான கட்டுரையில் சமஷ்டி குறித்து குறிப்பிட்ட ஒரு விடயம் கவனத்தை தூண்டுவதாக இருந்தது.

'சிங்கள கிராமத்தைப் பற்றி தரமான நாவல் ஒன்றை எழுதிய பிரிட்டிஷ் காலனித்துவ அதிகாரியான லெனார்ட் வூல்வ் இலங்கை, கிழக்கின் சுவிட்சர்லாந்தாக வரமுடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார். 1938 காலனித்துவ அரசாங்கத்துக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் அவர் இலங்கைக்கு சமஷ்டி முறை உகந்தது என்ற தனது சிபாரிசை நியாயப்படுத்துவதற்கு அன்றைய இலங்கையில் வாழ்ந்த சகல சமூகங்களினதும் சனத்தொகை விபரங்களை சுவிட்சர்லாந்தின் ஒவ்வொரு கன்ரோனின் அளவுடனும் ஒப்பிட்டு விளக்கமளித்தார். உள்ளூர் மட்டத்தில் மாற்றத்தின் முகவர்களாக மக்கள் மாறுவதே அதிகாரம் பரவலாக்கப்பட்ட ஒரு முறைமை யில் அல்லது சமஷ்டி கட்ட மைப்பின் சாராம்சமாகும்" என்று ஜெகான் பெரேரா அதில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த பின்புலத்தில் இலங்கையில் சமஷ்டி பற்றிய வாதப் பிரதிவாதங்களின் வரலாற்றை சுருக்கமாக ஆராய்வது இன்றைய இளஞ்சந்ததி அரசியல் மாணவர்களுக்கு பயனுடையதாக இருக்கும் என்று நம்புகிறோம். சமஷ்டி என்பதை தீண்டத்தகாத ஒரு சொல்லாக தென்னிலங்கை அரசியல் சமுதாயம் நோக்குகின்ற போதிலும், சமஷ்டி முறை யோசனை சுமார் ஒன்பது தசாப்தங்களாக நாட்டின் அரசியல் கருத்தாடல்களில் பேசுபொருளாக இருந்து வருகிறது என்ற வரலாற்று உண்மையை நிராகரிக்க முடியாது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) தமிழரசு கட்சியை (சமஷ்டி கட்சி ) தொடங்கிய பின்னர் மாத்திரமே சமஷ்டி யோசனை அரசியல் ரீதியில் சர்ச்சைக்குரியதாகவும் உணர்ச்சிபூர்வமானதாகவும் மாறியது.

தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி தீர்வுக்காக குரல்கொடுப்பதற்கு வெகு முன்னதாகவே 1920 களின் நடுப்பகுதியில் இளம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சமஷ்டி முறையை ஆதரித்து குரல் கொடுத்தார். அது மாத்திரமல்ல 1920 களின் பிற்பகுதியில் டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த கண்டி சிங்கள பிரதானிகள் இலங்கையில் சமஷ்டி முறையை அறிமுகப்படுத்துமாறு கோரிக்கை முன்வைத்தனர். இதை அரசியல் அறிஞர்களும் ஆய்வாளர்களும் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளனர்.

ஒரு மாகாணமாக வடக்கு - கிழக்கு உட்பட மூன்று மாகாணங்களைக் கொண்ட சமஷ்டி இலங்கை உருவாக்கப்படவேண்டும் என்று கண்டி பிரதானிகள் கோரிக்கை விடுத்தனர் என்பதை இன்றைய சந்ததி நம்பமறுக்கும்.

அம்பாந்தோட்டையில் பல வருடங்களாக உதவி அரசாங்க அதிபராக பதவிவகித்த பிரபலமான பிரிட்டிஷ் சிவில்சேவை அதிகாரி லெனார்ட் வூல்வ், 1930 களிலேயே சுவிஸ் பாணியிலான சமஷ்டி முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று யோசனை முன்வைத்தார். சமஷ்டி பற்றிய அரசியல் கருத்தாடல்களில் இந்த உண்மைகள் இப்போது பெரும்பாலும் நினைவு படுத்தப்படுவதில்லை.

அரசாங்க அதிபராக பணியாற்றியவர் என்ற வகையில் வூல்வினால் தெற்கின் சிங்கள கிராமங்களின் வாழ்வியலை நன்கு விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பிரபலமான 'காட்டுக்குள் ஒரு கிராமம்" (A Village in the Jungle) என்ற நாவலை எழுதினார்.

இங்கிலாந்து திரும்பிய பிறகு வூல்வ் தொழிற்கட்சியின் செயற்பாடுகளில் தீவிர பங்கேற்றதுடன் அதன் முக்கிய ஆலோசகர்களில் ஒருவராகவும் விளங்கினார். முதலாவது உலகப்போருக்கு பின்னர் உடனடியாக இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படவேண்டும்



80 வருடங்களுக்கு முன்னரேயே இலங்கைக்கு சுவிஸ் பாணி சமஷ்டி முறையை சிபாரிசு செய்த காலனித்துவ சிவில்சேவை அதிகாரி லெனார்ட் வூல்வ்

என்று சிபாரிசு செய்தவர்களில் அவரும் ஒருவர் என்று கூறப்பட்டது.

1938 காலனித்துவ அரசாங்கத்துக்கு வூல்வ் அனுப்பிவைத்த மகஜரில் இலங்கைக்கு சுவிஸ் பாணி சமஷ்டி முறையை சிபாரிசு செய்தார். அத்தகைய தீர்வொன்றை எதிர்க்கக்கூடியவர்கள் சமஷ்டி முறையைக் கொண்டிருக்கக்கூடிய அளவுக்கு இலங்கை பெரிய நாடு இல்லை என்ற வாதத்தை முன்வைப்பார்கள் என்பதை முன்னு ணர்ந்து கொண்ட அவர் தனது சிபாரிசை நியாயப்படுத்துவதற்கு அன்றைய இலங்கை யின் சகல சமூகங்களினதும் சனத்தொகை விபரங்களுடன் சுவிட்சர்லாந்தின் ஒவ்வொரு கன்ரோனின் பரப்பளவையும் சனத்தொகையையும் ஒப்பிட்டு தெளிவான விளக்கத்தை அளித்தார்.

அந்த விளக்கத்தை தரும் அவரின் மகஜரின் முக்கிய பந்திகள் வருமாறு:

'சுதேச தமிழ் சிறுபான்மையினங்கள் (Indigenous Tamil minorities) இலங்கைத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் குவிந்து வாழ்கிறார்கள். கரையோர சிங்களவர்களை (Low country Sinhalese) விடவும் பல வழிகளில் மிகவும் வேறுபட்டவர்களான கண்டிய சிங்களவர்கள் (Kandyan Sinhalese) தீவின் மத்திய பகுதியில் ஒரு தனி வகையாக திரளாக வாழ்கிறார்கள்.

'சுவிஸ் பாணியில் குறைந்தது நான்கு கன்ரோன்களை உருவாக்க முடியும்-- கரையோர சிங்கள மாகாணம், கண்டிய சிங்கள மாகாணம், தமிழ் வடக்கு மாகாணம் மற்றும் தமிழ் கிழக்கு மாகா ணம், தேயிலை பெருந்தோட்டங்களில் பெரும்பான்மையானவர்களாக விளங்கும் இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழும் பகுதிகளை உள்ளடக்கி ஐந்தாவது கன் ரோன் ஒன்றையும் கூட உருவாக்கமுடியும்.

'அத்தகைய முறைமையொன்றை கொண்டிருக்கக்கூடிய அளவுக்கு இலங்கையும் அதன் உப பிரிவுகளும் பெரியவையல்ல என்ற ஆட்சேபம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இலங்கை சுவிட்சர்லாந்தை விடவும் பரப்பளவில் (10,000 சதுர மைல்கள் ) பெரியது. இலங்கையின் சனத்தொகை சுமார் 53 இலட்சம். சுவிட்சர்லாந்தின் சனத்தொகை 40 இலட்சம். இலங்கையில் சுவிஸ் சமஷ்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டால் 2 இலட்சத்துக்கும் கூடுதலான சனத்தொகையுடன் சிறிய கன்ரோனாக கிழக்கு மாகாணமே இருக்கும். சுவிட்சர்லாந்தின் சிறிய கன்ரோனின் சனத்தொகை சுமார் 14 ஆயிரம். பெரிய கன்ரோனின் சனத்தொகை சுமார் 7 இலட்சம்.

'இலங்கையை ஒத்த சூழ்நிலைகளில் - அதாவது ஒன்றில் இருந்து மற்றது இனத்தால், மொழியால், மதத்தால் வேறுபட்டதும் மிகவும் வேறுபட்ட அளவுகளில் வாழ்கின்றதுமான சமூகங்கள் ஒற்றையான ஜனநாயக அரசொன்றில் சகவாழ்வு - சுவிஸ் சமஷ்டி கன்ரோன் முறை பிரத்தியேகமான வெற்றியை கண்டிருக்கிறது.


'இலங்கையில் சிங்களவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடக்கூடியதாக அங்கு 27 இலட்சத்து 50 ஆயிரம் சனத்தொகையுடன் ஜேர்மன் மொழி பேசும் மக்கள் இருக்கிறார்கள். தமிழர்களுடன் ஒப்பிடக் கூடியதாக 8 இலட்சத்து 24 ஆயிரம் சனத்தொகையுடன் பிரெஞ்சு மொழிபேசும் மக்களும் சோனகர்களுடன் ஒப்பிடக் கூடியதாக 2 இலட்சத்து 84 ஆயிரம் சனத்தொகையுடன் இத்தாலி மொழிபேசும் மக்களும் இருக்கிறார்கள். ஜனநாயக கன்ரோனும் சமஷ்டி முறையும் சிறுபான்மையினங்களின் நியாய பூர்வமான நலன்களை பேணிப்பாது காக்கின்றன."

லெனார்ட் வூல்வுக்கு சிங்கள மக்கள் மீது அனுதாபம் இருக்கவில்லை என்று அறிவுபூர்வமாக சிந்திக்கும் எவரும் குற்றஞ் சாட்டமாட்டார்கள். அதனால் சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான உரிமைகள் பற்றிய அவரின் கருத்துக்களை எந்த வகையிலும் தமிழர் ஆதரவு சாய்வைக் கொண்டவை என்று கூறமுடியாது. அவை பல வருடங்கள் இலங்கையில் வாழ்ந்து சேவை செய்து அதன் மக்களை நெருக்கமாக அறிந்துகொண்ட ஒரு முற்போக்கான ஆங்கிலேய காலனித்துவ நிருவாகியின் கருத்துக்களாகும்.

நாம் அறிந்தவரையில் தேயிலை பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறையாக அவர்களுக்கென்று தனியான கன்ரோனை சிபாரிசு செய்த ஒரே நபர் லெனார்ட் வூல்வ்தான்.

கரையோர சிங்களவர்களுக்கும் கண்டிய சிங்களவர்களுக்கும் தனித்தனியான கன்ரோன்களை அவர் சிபாரிசு செய்தது இன்றைய சூழ்நிலைகளில் பொருத்தமில்லாததாக இருக்கலாம். ஆனால், சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்புகள் என்று வரும்போது வூல்வ் நிச்சயமாக எதிர்காலத்தை மனதிற்கொண்டு சிந்தித்தார் என்பதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

காட்டுக்குள் ஒரு கிராமம் என்ற நாவலை எழுதிய அந்த ஆங்கிலேயர் எப்போதோ இறந்துபோய்விட்டார். ஆனால், இனப்பிளவின் இரு மருங்கிலும் உள்ள எமது அரசியல் வர்க்கத்திடம் தொலைநோக்கு இல்லாத காரணத்தால் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றுக்கான எந்தவொரு தெளிவான அறிகுறியுமின்றி நாம் இன்னும் அரசியல் வனாந்தரத்தில் நிற்கிறோம்.



# இலங்கைக்கு தமிழ்நாடு அனுப்பிய அரிசி மூட்டைகள் பயன்படுத்த முடியாத நிலையில் மீட்பு



தமிழ்நாடு அரசு இலங்கைக்கு அனுப்பிய அரிசி மூட்டைகள் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளை சந்தித்து, அன்றாட உணவுகளை கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் வாழ்ந்து வந்த சூழ்நிலையில், இலங்கை வாழ் மக்களுக்கான தமிழக அரசாங்கம் கடந்த மே மாதம் பாரிய உதவித் திட்டத்தை வழங்கியிருந்தது.

தமிழகத்திலிருந்து கடந்த மே மாதம் 18ம் தேதி முதற்கட்ட உதவித் திட்டம், சென்னையிலிருந்து கொழும்பிற்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இந்த பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தமிழகத்தினால் இலங்கைக்கு 40,000 மெட்ரிக் டன் அரிசி, 500 மெட்ரிக் டன் பால்மா மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

கொழும்பை வந்தடைந்த பொருட்களை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அப்போது பொறுப்பேற்று, அதனை இலங்கை அதிகாரிகளிடம் கையளித்திருந்தார்.




இவ்வாறு கையளிக்கப்பட்ட பொருட்கள் வடக்கு, கிழக்கு, மலை யகம் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில், வடக்கு பகுதிக்கும் பெருமளவிலான பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்வாறு வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டத்திலுள்ள மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட்ட தமிழக அரசின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பெருந்தொகை அரிசி, பாவனைக்கு உதவாத நிலையில், களஞ்சியசாலை யொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுமார் 1272 கிலோ எடையுடைய அரிசி தொகையே, இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப் பட்ட அரிசி, முழுமையாக பாவனைக்கு உதவாத வகையில் காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - ஆசிகுளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மதுராநகர் கிராமத்திலுள்ள அரச கட்டிடமொன்றிலிருந்தே, இந்த அரிசி மூடைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அரிசி மூடைகளே இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டு, பழுதடைந்த நிலையில் காணப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் இலட்சினை பொறிக்கப்பட்ட, அரிசி மூடைகளே மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட அரிசி மூடைகள் தொடர்பில், பிரதேச மக்கள் வவுனியா பிரதேச செயலாளருக்கு அறிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, குறித்த பகுதிக்கு விரைந்த வவுனியா மாவட்ட செயலக கணக்காய்வு உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலாளர் உள்ளடங்கிய குழுவினர், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், குறித்த அரிசியின் தரம் குறித்து ஆராய்வதற்காக, பொது சுகாதார பரிசோதகர்களும் சம்பவ இடத்திற்கு பிரசன்னமாகியுள்ளனர்.

இதன்படி, குறித்த பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து, 1272 கிலோகிராம் அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட அனைத்து அரிசி மூடைகளையும், பரிசோதனைகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு கொண்டு செல்வதாக, அதிகாரிகள் பிரதேச மக்களிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த மூடைகளிலுள்ள அரிசியை, தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள், பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

# மூன்றெழுத்துக்கு முன்உதாரணமான மோடி!

## காலை 9.30 மணிக்கு தாயின் இறுதிச்சடங்கு
## காலை 11.00 மணிக்கு பணிக்குத் திரும்பினார்



இந்தியப் பிரதமர் மோடியின் தாய் ஹீரா பென், (வயது 99), உடல் நலக்குறைவால் கடந்த வெள்ளியன்று அதிகாலை குஜராத் மாநிலம் ஆமதாபாதில் காலமானார். தகவல் கேள்விப் பட்டதும் உடனடியாக புதுடில்லியில் இருந்து ஆமதாபாதுக்கு வந்த பிரதமர் மோடி, காலை 9:30க்கு தாயின் இறுதிச் சடங்கில் பங்கேற்றார். அடுத்த ஒன்றரை மணி நேரத்திலேயே தன் பணிக்கு திரும்பிய பிரதமர், 'வந்தே பாரத்" ரயில் சேவை துவக்க விழாவில் பங்கேற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். 'கடமை" என்ற மூன்றெழுத்துக்கு முன்னுதாரணமாக பிரதமர் மோடி திகழ்வதாக, நாடு முழுதும் பலரும் பாராட்டி வருகின்றனர்.



பிரதமர் நரேந்திர மோடியின் இளைய சகோதரர் பங்கஜ் மோடியின் வீடு, குஜராத் மாநிலம் காந்திநகர் அருகே ராய்சன் என்ற கிராமத்தில் உள்ளது. பிரதம ரின் தாய் ஹீரா பென், இங்கு தான் வசித்து வந்தார்.

பிரதமர் குஜராத்துக்கு செல்லும்போதும், பிறந்த நாளின்போதும் தன் தாயை சந்தித்து பேசுவதுடன், அவரிடம் ஆசி பெறுவதும் வழக்கம்.

இந்நிலையில், ஹீரா பென்னுக்கு கடந்த சில நாட்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, ஆமதாபாதில் உள்ள யு.என்.மேத்தா மருத்துவமனையில், 28ல் அனுமதிக்கப்பட்டார்.

தகவல் அறிந்த பிரதமர் ஆமதாபாத் வந்து, தன் தாயை பார்த்தார். அவரது உடல்நிலை குறித்து டாக்டர்களிடம் தகவல்களை கேட்டறிந்தார். ஒரு மணி நேரத்துக்குப் பின், அங்கிருந்து புதுடில்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

இந்நிலையில், ஹீரா பென்னின் உடல்நிலை வெள்ளி அதிகாலை மோசமடைந்தது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி, அதிகாலை 3:30க்கு ஹீராபென் காலமானார். இது பற்றி மருத்துவமனை நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது பிரதமர் மோடிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக புதுடில்லியில் இருந்து ஆமதாபாதுக்கு விமானத்தில் வந்த பிரதமர், காந்திநகரில் உள்ள தன் சகோதரர் பங்கஜ் வீட்டுக்கு வந்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த தன் தாய் உடலுக்கு, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பிரதமர், பின் தாய் காலில் விழுந்து வணங்கினார்.

சிறிது நேரத்துக்குப் பின், அந்த வீட்டிலிருந்து பிரதமர் மோடியும், அவரது சகோதரர்களும் சேர்ந்து, துாரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வேனுக்கு, தங்கள் தாயின் உடலை தோளில் சுமந்து வந்தனர்.

ஹீராபென் உடல் வேனில் வைக்கப்பட்டதும், தாயின் உடலுக்கு அருகிலேயே சோகத்துடன், கைகளை கூப்பியபடி பிரதமர் அமர்ந்திருந்தார். இறுதிச் சடங்கிற்காக காந்தி நகரின் புறநகர் பகுதியில் உள்ள மயானத்துக்கு, ஹீராபென்னின் உடல், வேனில் எடுத்துச் செல்லப்பட்டது.

**வழக்கமான பணி**

காலை, 9:30க்கு ஹீரா பென்னின் உடல் மயானத்தை சென்றடைந்ததும், பிரதமரும், அவரது சகோதரர்களும், தாயின் உடலுக்கு இறுதிச் சடங்குளை செய்தனர். மிக எளிமையாக சடங்குகள் நடந்தன.

இதன்பின், பிரதமரும், அவரது சகோதரர்களும், தாயின் உடலுக்கு தீ மூட்டினர். இறுதிச்சடங்கில், பிரதமரின் குடும்பத்தினர், நெருங்கிய உறவினர்கள் மட்டுமே பங்கேற்றனர். குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் உள்ளிட்ட ஒரு சில தலைவர்கள் மட்டுமே வந்திருந்தனர்.

இறுதிச் சடங்கு நடந்து முடிந்த அடுத்த ஒன்றரை மணி நேரத்தில், அதாவது, காலை 11:00 மணிக்கு, பிரதமர் தன் வழக்கமான பணிக்கு திரும்பினார்.

மேற்கு வங்க மாநிலம் கோல்கட்டாவில், 'வந்தே பாரத்' ரயில் சேவையை நேற்று பிரதமர் நேரடியாக துவக்கி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தாயின் மறைவை காரணமாக வைத்து, இந்த நிகழ்ச்சியை ஒத்திவைக்க வேண்டாம் என கூறிய பிரதமர், காலை 11:00 மணிக்கு, 'வீடியோ கான்பரன்ஸ்" வாயிலாக பங்கேற்று, ரயில் சேவையை துவக்கி வைத்தார்.

**கடமை உணர்வு**

ஹீரா பென்னின் இறுதி ஊர்வலத்தில் போலீஸ் கெடுபிடி, போக்குவரத்து நெரிசல், வி.வி.ஐ.பி., வருகை, கோஷங்கள் என எதுவும் இல்லை.

மத்திய அமைச்சர்கள், பா.ஜ., மூத்த தலைவர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களுக்கு தகவல் தெரிந்து, அவர்கள் புறப்பட தயாராவதற்கு முன்பே, ஹீரா பென்னின் இறுதிச் சடங்கு நடந்து முடிந்து, பிரதமரும் தன் வழக்கமான பணிக்கு திரும்பி விட்டார். பிரதமர் மோடியின் இந்த கடமை உணர்வு, அரசியல் வேறுபாடுகளை கடந்து அனைத்து தரப்பினரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

## பிரதமரின் உருக்கமான பதிவு

தன் தாயின் மறைவையொட்டி, சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டதாவது: ஒரு போற்றத்தக்க நுாற்றாண்டு, கடவுளின் காலடியை சென்றடைந்துள்ளது. ஒரு துறவியின் பயணம், தன்னலமற்ற கர்மயோகியின் அடையாளம், அர்ப்பணிப்பான வாழ்க்கை ஆகியவற்றை, என் தாயிடம் உணர்ந்தேன். அவரது பிறந்த நாளன்று அவரை சந்தித்தபோது, 'புத்தி சாலித்தனத்துடன் பணியாற்றுங்கள். துாய்மையான வாழ்க்கையை வாழுங்கள்' என, ஆசி வழங்கினார். அவரது அந்த வார்த்தைகள் எப்போதும் என் நினைவில் இருக்கும். இவ்வாறு பிரதமர் உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

# தமிழரசுத் தலைவர் மாவை தலைமையில் தமிழரசு இல்லாத புதிய கூட்டமைப்பு?

**பனங்காட்டான்**

2022ம் ஆண்டு 'ஒருவாறு' விடைபெற்றுப் போய்விட்டது. ஆனால், இலங்கை அரசியலில் பல தடங்களை அழிக்க முடியாதவாறு பதிவிட்டுள்ளது.

தமிழில் சண்டமாருதம் என்றொரு வார்த்தையுண்டு. கடந்த ஆண்டின் அரசியல் இடிபாடுகள், பதவி பறிப்புகள், பதவி துறப்புகள், கழுத்தறுப்புகள் என்பவற்றை சண்டமாருத அரசியல் என்று சொல்வதே பொருத்தம்.

கடந்த மார்ச் மாதத்தில் 'கோதா கோ ஹோம்' (கோதா வீட்டுக்குப் போ) என்று ஆரம்பமான மக்கள் பேரெழுச்சி, காலிமுகத் திடலை மையமாகக் கொண்டு நாடு முழுவதும் பரவியது.

ராஜபக்ச குடும்பத்தை வேரோடு ஆதிக்க அரசியல் பதவிகளிலிருந்து இப்போராட்டம் அப்புறப்படுத்தியது. 65 லட்சம் மக்களால் தெரிவான ஜனாதிபதி ஒருவரை நாட்டைவிட்டு தப்பியோடச் செய்து, வெளியிலிருந்தவாறு பதவி துறக்கவும் வைத்தது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட 45 வருடகால அரசியல் அனுபவ ரணிலை பிரதமராக்கி, ஜனாதிபதியாக்கியதும் இதே போராட்டம்தான். முன்னர், இரண்டு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு தோல்வி கண்டவர் ரணில். பின்னரான இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வி அச்சத்தால் போட்டியிடாது, தமது கட்சியின் சார்பில் வேறு இருவரை (சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன) போட்டிக்கு நிறுத்திய அசாதாரண அரசியல்வாதியும் ரணில்தான்.

அரசாங்க ஊழியர்களுக்கு 60 வயதில் கட்டாய ஓய்வை சட்டமாக்கி நடைமுறைப்படுத்தும் ரணில், தமது 72 வயதில்தான் முதல்முறையாக ஜனாதிபதியானார் என்றால், இதற்குப் பெயர் 'ஜனநாயக சோசலிஸ அரசியல்'.

இவ்விடயத்தில் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும், இவரது பெறாமகனான ரணிலுக்கும் ஓர் ஒற்றுமையுண்டு. இருவருமே தங்களின் 72வது வயதில்தான் ஜனாதிபதியாகும் வாய்ப்பைப் பெற்றனர். அதற்காக ஜெயவர்த்தன போன்று 11 ஆண்டுகள் (1978 - 1989) ரணிலும் ஜனாதிபதியாக இருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமென்று சொல்ல முடியாது.

இருப்பினும், 2025ல் அல்லது அதற்கு முன்னர் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நேரடியாகத் தெரிவான ஜனாதிபதியாக வேண்டுமென்ற விருப்பில் அரசியல் சதுரங்க விளையாட்டில் அவர் இறங்கியுள்ளார்.

நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளையும் பிளவுபடுத்தி, சின்னாபின்னமாக்கி ஒன்றுடனொன்றை மோதவிட்டு, அதற்கூடாக அறுவடைகளை மேற்கொண்டு தம்மைப் பலப்படுத்துவது இவரது கலை.

சிறுபான்மையினர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்பவராக சர்வதேசத்துக்குக் காட்டியவாறு, அதற்குள் ஆதாயம் தேடி தமிழர் அரசியல் அணிகளை மோதவிடுவது இவரது சமகால இலக்கு.

இப்போதுள்ள அரசியல் நெருக்கடியில் மகிந்த-பசில் தலைமையிலுள்ள பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் ஒருவரை களமிறக்கும் காலநிலையில் இல்லை. அதேசமயம், சஜித் பிரேமதாச தலைமையிலான அரசியல் அணியின் கை ஓங்கக் கூடாது என்பதிலும் இவர்களுக்கு அதீத அக்கறை. இதனால் வேறு வழியின்றி இப்போதைக்கு ரணிலை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்க வேண்டிய கையறு நிலைக்கு பெரமுன தள்ளப்பட்டுள்ளது.




எவரையும் விரும்பியவாறு அமைச்சரவையில் ரணில் சேர்க்கலாமென மகிந்த கூறுவதும், ரணில் நாட்டுக்குரிய நல்ல தலைவரென்று நற்சான்று தெரிவித்துவிட்டு கோதபாய குடும்பத்தோடு நாட்டைவிட்டு சென்றிருப்பதும், ரணிலின் அரசியல் செயற்பாடுகளை வரவேற்கின்ற அதேசமயம் அமைச்சர் பதவி தமக்குத் தேவையில்லையென்று நாமல் ராஜபக்ச அறிவித்து வருவதும் - பெரமுனவின் எதிர்கால அரசியல் அரங்குக்கான தேர்தல் விஞ்ஞாபனங்கள்.

ரணில் ஜனாதிபதியாகிய பின்னர் தமிழர் தரப்பு அரசியல்களம் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. இதனை 'பரிதாபநிலை' என்று ஒரு வார்த்தையில் கூறிவிடலாம். தமிழர் பிரச்சனையை இரண்டு கூறுகளாக பிரித்துள்ள ரணில், பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் - காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் - அரசியல் கைதிகள் விடுதலை போன்றவைகளை ஒரு கூறாகவும், இனப்பிரச்சனைக்கான தீர்வை இன்னொரு கூறாகவும் அடையாளப்படுத்தியுள்ளார். போர்க்குற்ற விசாரணையையும் பொறுப்புக்கூறலையும் நாசூக்காக அப்புறப்படுத்திவிட இது சாதுரியமான செயல்.

அடையாளப்படுத்தப்பட்ட இரு கூறுகளுக்கும் அடுத்த மாத சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வுகாண வேண்டுமென அறிவித்துவிட்டு தமிழர் தரப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளார். தமிழர் தேசிய கட்சிகள் இவ்விடயத்தில் மூன்று பிரிவாக தம்மை வெளிக்காட்டியுள்ளன. சம்பந்தனின் கூட்டமைப்பு பேசித் தீர்க்கலாமென்ற நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறது. சி.வி.விக்னேஸ்வரனின் மக்கள் கூட்டணி முன்னுக்குப்பின் முரணான கருத்துகளை முன்வைத்து நிற்கிறது. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையாக இப்பேச்சுவார்த்தையை ஒதுக்கியுள்ளது.

டிசம்பர் 13ம் திகதி சர்வகட்சித் தலைவர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை, பின்னர் சம்பந்தனுடனும் சுமந்திரனுடனும் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதனை உத்தியோகப் பற்றற்ற பேச்சுவார்த்தையென்று ஜனாதிபதி செயலகம் மழுப்பியுள்ளது.

அடுத்த பேச்சுவார்த்தை இந்த மாதம் 5ம் திகதியென்றும் அதனைத் தொடர்ந்து பத்தாம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு தொடர்ந்து பேச்சு இடம்பெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தை எந்தெந்த அடிப்படையில் இடம்பெற வேண்டுமென புலம்பெயர் அமைப்புகள் சில அறிக்கையூடாக வெளிப்படுத்தியுள்ளன. பேச்சுவார்த்தையில் புலம்பெயர் தமிழரும் இடம்பெற வேண்டுமென அமெரிக்காவிலுள்ள தமிழர் அமைப்பொன்று சம்பந்தனிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, புதிய கூட்டமைப்பொன்று (கூட்டமைப்பு இலக்கம் - 2) பற்றிய விடயம் இப்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. விக்னேஸ்வரனுடைய யாழ்ப்பாண இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்று சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இதில் சுரேஸ் பிரேமச்சந்திரன், என். சிறீகாந்தா ஆகியோருடன் கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் பங்குபற்றினார். முன்னையவர்கள் மூவரும் ஏற்கனவே கூட்டமைப்பின் பங்காளிகளாகவிருந்து வெளியேறியவர்கள்.

> **சம்பந்தனின் இயக்கமற்ற நிலையாலும் சுமந்திரனின் சுயஇச்சையான முடிவுகளாலும் இடறுப்பட்டு வெளியேறிய கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிகளும், இந்நாள் பங்காளிகளும் புதிய கூட்டமைப்பை உருவாக்கி அதன் தலைவராக மாவை சேனாதிராஜவை உள்வாங்க முனைவதால் தமிழர் பிரச்சனையை எந்தளவுக்குத் தீர்க்க வாய்ப்புக் கிடைக்கும். தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை விரைவில் பறிகொடுக்க இருக்கும் மாவையருக்கு புதிய தலைமைப் பதவியொன்று தேவைப்படுகிறதா?**

மாவை சேனாதிராஜா தனி நபரல்ல. சிறை சென்ற செம்மல் என்று பெயர் கொண்ட தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினர். ஏற்கனவே பல தடவை இவ்வாறான பிரச்சனைக்குரிய கூட்டங்களை நடத்தியும் பங்குபற்றியும், தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமைக்கு அழைப்பு விடுத்தவர். இதனால் இவரை 'கட்டாக்காலி' அரசியல்வாதியென்று தமிழரசுப் பிரமுகர் ஒருவர் பட்டம் சூட்டியது ஞாபகமிருக்கிறது.

இப்போது விடயம் அதற்கும் அப்பாற் சென்றுவிட்டது. மாவை தலைமையில் ஒரு கூட்டமைப்பில் தாங்கள் இயங்கத் தயார் என்று விக்னேஸ்வரன் அறிவிக்க, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல் வம் அடைக்கலநாதன் அதனை ஆதரித்து கருத்து வெளியிட்டார். கூட்டமைப்பிலிருந்து முன்னர் வெளியேறியவர்களையும் தற்போது கூட்டமைப்பில் பங்காளிகளாக இருப்பவர்களையும் புதிய கூட்டாக்கி அதற்கு மாவையர் தலைமை தாங்குவதென்பது இன்றைய சூழலில் அதிரடி வைத்தியம் போன்றது.

சுமந்திரனின் சுயஇச்சையில் இயங்கிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பை ஒதுக்கி விட்டு புதிய கூட்டமைப் பொன்றை உருவாக்குவதே விக்னேஸ்வரனின் கூட்டத்தில் பங்குபற்றியவர்களின் பிரதான இலக்கு. முக்கியமாக விரைவில் நடைபெறவிருக்கும் தமிழரசின் மாநாட்டில் மாவையின் தலைமைப் பதவி பறிக்கப்படலாமென்பது நிச்சயமாகிவிட்டது.

தலைமைப் பதவி விடயத்தில் சிறீதரனுக்கும் சுமந்திர னுக்குமிடையில் மௌனயுத்தம் நடை பெறுகிறது. கிழக்கின் வாக்குகளை தம்பக்கமாக்க சாணக்கியனின் தோள்களில் கைகளைப் போட்டவாறு சுமந்திரன் இதற்காகவே கிழக்கு மண்ணில் அலைந்து திரிகிறார்.

தமிழரசுத் தலைமை பதவி போன பின்னர் தமது எதிர்கால அரசியலுக்கு இன்னொரு பதவி மாவையருக்குத் தேவைப்படுகிறது. முக்கியமாக உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல், மாகாண சபைத் தேர்தலின்போது தமது இருப்பை வெளிக்காட்ட மாவையர் தலைமைப் பதவியொன்றை நாடுவது தவிர்க்க முடியாதது. இதனை நன்கறிந்த சுமந்திரன் முளையிலேயே அதனைக் கிள்ளிவிட முனைகிறார்.

கூட்டமைப்பில் புதிதாக எவரையும் இணைத்துக் கொள்வதில்லையென அதன் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக ஓர் அறிவிப்பை சுமந்திரன் வெளியிட்டார். இதற்கான பதிலடி மறுநாளே அரசியல் குழுவின் மற்றொரு உறுப்பினரான பிரபல சட்டத்தரணி கே.வி.தவராஜாவிடமி ருந்து வந்தது. சுமந்திரன் கூறியது போன்று அப்படியான முடிவெதுவும் அரசியல் குழுவில் எடுக்கப்படவில்லையெனவும், உண்மைக்குப் புறம்பாக சுமந்திரன் தெரிவித்துள்ளாரென்றும் அறிவித்து சுமந்திரனின் பொய்ப் பரப்புரைக்கு தவராஜா முடிவு கட்டியுள்ளார்.

இரண்டாவது கூட்டமைப்பின் உருவாக்கமென்பது சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக்கு சவாலாக அமையலாமென்ற அச்சம், சம்பந்தனின் வாரிசாக தம்மை உருவகப்படுத்தி வரும் சுமந்திரனுக்கு ஏற்பட்டுள்ளது. அதனையே அவருடைய பொய் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. அதேசமயம், புதிய கூட்டமைப்பொன்றின் தலைமைப் பதவிக்கு மாவையர் பொருத்தமானவரா என்பதும் கேள்விக்குரியது.

பொதுத் தேர்தலில் படுகுப்புற வீழ்ந்து அரசியலில் நிர்வாணியாக நின்ற ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாகலாம் என்றால், அவர் போன்று தேர்தலில் தோல்வியுற்ற தாமும் ஏன் தமிழ் கூட்டமைப்பொன்றின் தலைவராகி தமிழ்த் தேசிய அரசியலில் புத்தெழுச்சி பெற முடியாதென்று மாவை சேனாதிராஜா நினைக்கிறார் என்றால் அதில் தவறில்லை.

'கலி'கால மாற்றமும், கலிகால அரசியலும் இணைந்தால் எதுவும் நடக்கலாம். இதனால் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சனைகளுக்கு என்ன தீர்வு கிடைக்கும்?.

ஈழநாடு



# அட்டைப் பண்ணை எங்களுக்கு வேண்டும்



அண்மைக் காலமாக வடபகுதியில் கடலட்டைப் பண்ணை தொடர்பில் பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் அதற்கு ஆதரவாகவும், எதிராகவும் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

கடலட்டை பண்ணை அமைப்பதால் கரையோரப் பகுதிகளில் நாளாந்த மீன் பிடி செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் மீன்களின் இனப்பெருக்கமும் பாதிக்கப் பட்டு மீனவர்கள் எதிர் காலத்தில் பெரும் இடர்களைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

மறு புறம் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன் பலருக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைக்கின்றது என்ற ஆதரவுக் குரல்களும் எழுப்பப்படுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கடலட்டை பண்ணைக்கு ஆதரவாக இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட சில வெளியிட்ட கருத்துக்கள் இதோ.

## சுய இலாபத்துக்காக தடுக்கிறார்கள்

**கேதீஸ்**
கடலட்டைப் பண்ணையாளர்



கட்டாயம் கடலட்டை தொழிலுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அட்டைப்பண்ணை அனுமதியை பெற்று தரவேண்டும் என நாங்கள் கடற்தொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுகின்றோம்.

அட்டை பண்ணைக்கு எதிராக விமர்சனங்களை செய்து எமது தொழிலை செய்யவிடாது தடுக்க யோசிக்கின்றார்கள்.

நியாயமாக அனுமதிகளை பெற்று எமது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு நாங்கள் யோசிக்கின்றோம். ஒரு சிலர் தனிப்பட்ட காரணங்களுக்காக எதிர்க்கிறார்கள். அவர்களுடைய பின்னணி என்னவென்று எங்களுக்கு புரியவில்லை.

ஒருவர் இருவருடைய சுயலாபத்திற்காக இந்த அட்டைப் பண்ணையை தடுப்பதற்குரிய வேலையில் ஈடுபடுகின்றார்கள். எனவே இந்த தொழிலை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதால் எமக்கு அட்டைப் பண்ணையை பெற்று தருவதற்கு கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சில தொழில் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்த கோரிக்கைகளை செவிமடுக்காது அட்டைப் பண்ணையைச் செய்வதற்குரிய அனுமதியை அமைச்சர் பெற்று தரவேண்டும்.

இதனால் கடற்தொழிலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. வீணான விமர்சனங்களை மேற்கொண்டு வாழ்வாதாரத்தை முன்னெடுக்க நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள்.

இது தொடர்பில் அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சில மீனவர் சங்கங்கள் விசமப் பிரசாரம்

**மேரி**
கடலட்டைப் பண்ணையாளர்



அல்லைப்பிட்டிப் பகுதியில் குஞ்சு அட்டைகளை வாங்கி இந்த அட்டைப் பண்ணைகளில் விட்டு நாங்கள் வாழ்வாதார முயற்சியை மேற்கொண்டு வருகின்றோம். குறிப்பாக அல்லைப்பட்டிப் பகுதியில் பெரும்பாலான பெண்கள் இவ்வாறான வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். ஆனால் அதனை குழப்பும் முகமாக சில மீனவர் சங்கங்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த பிரசாரங்களை செவிமடுக்காது எமது வாழ்வாதாரத்தை நாங்கள் முன்னெடுக்கவேண்டும்.

பெண்களாகிய நாங்கள் தொழில் முயற்சியில் ஈடுபடும்போது அதற்கு முட்டுக்கட்டையாக சில மீனவர் அமைப்புகள் செயல்படுவது எமக்கு கவலை அளிக்கின்றது. பெண்களும் வாழ்வாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக ஒரு சிறு முயற்சியாக அட்டைக் குஞ்சுகளை வாங்கி அதனை பண்ணைகளில் விட்டு வளர்த்து விற்பனை செய்வதற்குரிய வழிவகைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே கடற்தொழில் அமைச்சர் இந்த அட்டைப் பண்ணைகளை நிறுத்தாமல் நமக்குரிய அனுமதியை உடனடியாக பெற்று தரவேண்டும் என கோரிக்கை விடுகிறோம்.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்



## இது சட்டவிரோத தொழிலல்ல

**ஜஸ்ரின்**
கடலட்டைப் பண்ணையாளர்



மணியந்தோட்டம்,பாசையூர், கொழுப்புத்துறை பகுதிகளில் நாங்கள் தொடர்ச்சியாக இந்த அட்டைப் பண்ணை தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம்.

நாங்கள் சட்ட விரோதமாக இந்த தொழிலில் ஈடுபடவில்லை. கடற் தொழில் சங்கங்கள் மற்றும் கடத்தொழில் நீரியல் வள திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் அனுமதி பெற்று இந்த தொழிலை மேற்கொண்டு வருகின்றோம்.

இதனை விரும்பாத சிலர்-தமக்கு கிடைக்காத சந்தர்ப்பத்தை விரும்பாத பலர் தேவையற்ற விமர்சனத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

குறிப்பாக கடற் தொழில் பற்றி தெரியாதவர்கள் கூட கருத்துக்களை வெளியிட்டார்கள்.

கடற்தொழிலில் ஈடுபடுகின்ற கரையோரப் பகுதிகளில் பண்ணைகளை அமைத்துள்ளோம். எமது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு இது பெரிய உதவியாக இருக்கும். குறிப்பாக கடற்தொழிலை மேற்கொள்வதற்கு எரிபொருள் பிரச்னை மற்றும் ஏனைய பிரச்னைகள் காணப்படுகின்றன.

எனவே இந்த பிரச்னைகளில் இருந்து நாங்கள் விடுபடுவதற்காகவே இவ்வாறான கடலட்டைப் பண்ணை தொழிலில் ஈடுபடுவதற்கு முயற்சிக்கின்றோம்.

அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு தொழில். எமது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு ஒரு பெரும் பங்காற்றுகின்றது.

குறிப்பாக இந்த கடலட்டை பண்ணைகளில் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இது எமது மக்களுக்குத்தான் பயன் பெறப்போகின்றது. சரியான முறையில் உரிய திணைக்களங்கள் களவிஜயம் மேற்கொண்டு உரிய சட்டமுறைப்படி எமக்கு அனுமதியை வழங்கி உள்ளார்கள்.

கடற்தொழில் சமூகத்தைச் சேர்ந்த அன்னராசா போன்றவர்கள் தேவையற்ற போராட்டங்கள், தேவையற்ற ஊர்வலங்களை நடத்தி எமது கடலட்டைப் பண்ணைக்கு எதிராக தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதற்காக ஒரு முயற்சியை மேற்கொள்பவர்களை குழப்பக்கூடாது. இந்த கடலட்டைப் பண்ணைகள் மூலம் கிடைக்கும் வருமானம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் உறுதுணையாக இருக்கும். குறிப்பாக எமது பகுதியில் உள்ள இளைஞர்கள் பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதனை ஏன் குழப்பு முனைகிறார்கள் என்று நமக்கு தெரியவில்லை. ஆனால் கடற்தொழில் அமைச்சர் இதனை பரிசீலித்து மேதிகமாக கடல் அட்டை பண்ணைக்கு கட்டாயமாக அனுமதியை பெற்று தரவேண்டும்.




**திரைப்படம் - டிரைவர் ஜமுனா**
**இயக்கம் - கின்ஸ்லின்**
**இசை - ஜிப்ரான்**
**நடிப்பு - ஐஸ்வர்யா ராஜேஷ், ஆடுகளம் நரேன்**

தமிழ் திரையுலகில் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்கள் அடிக்கடி வருவதில்லை. ஆனால், சமீப காலங்களில் குறிப்பிட்ட இடைவெளியில் அவ்வாறான படங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு கார் சாரதி கதாபாத்திரத்தில் ஒரு கதாநாயகியை நடிக்க வைப்பது தமிழ்த் திரையுலகில் புதியது.

அப்பாவின் கொலைக்கு பிறகு அவர் செய்து வந்த கார் சாரதி வேலையை அவரின் மகளான ஐஸ்வர்யா ராஜேஷ் செய்து வருகிறார். முன்னாள் சட்டமன்றி உறுப்பினரான ஆடுகளம் நரேனை கொலை செய்ய ஒரு கூலிப் படை புறப்படுகிறது. அவர்கள் ஐஸ்வர்யா ராஜேஷின் காரில் செல்ல நேரிடுகிறது. கூலிப்படையைப் பிடிக்க உதவி பொலிஸ் ஆணையாளர் ஒரு பக்கம் துடித்துக் கொண்டிருக்கிறார்.

கூலிப்படையின் பிடியில் ஐஸ்வர்யா சிக்கித் தவிக்கிறார். ஆடுகளம் நரேனைக் கொலை செய்ய உதவியாக அவர் வீட்டுக்குள்ளேயே கூலிப்படை ஆட்கள் இறங்குகிறார்கள். இந்த சூழ்நிலையில் என்ன நடக்கிறது என்பது தான் படத்தின் மீதிக் கதை.

ஒரு கார் பயணத்தை படத்தின் மொத்த திரைக்கதையாக வடிவமைத்திருக்கிறார் இயக்குநர். அதில் இன்னும் பல பரபரப்பான சம்பவங்களைச் சேர்த்திருக்கலாம். ஒரு பெண் கார் சாரதியாக இருப்பதால் ஏற்படும் சாதக, பாதகங்கள் என்ன என்பதை புதிதாகச் சொல்ல நல்ல வாய்ப்பு. அதை இயக்குநர் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டார்.


மற்ற முன்னணி கதாநாயகிகள் தேர்வு செய்து நடிக்கும் கதாபாத்திரங்களிலிருந்து மாறுபட்ட கதாபாத்திரங்களைத் தேர்வு செய்து நடிப்பவர் ஐஸ்வர்யா ராஜேஷ். இந்தப் படத்திலும் அப்படி ஒரு கதாபாத்திரத்தைத் தேர்வு செய்து அதில் பொருத்தமாக நடித்திருக்கிறார். ஆனால், அவருக்கான அழுத்தமான காட்சிகளை இன்னும் வைத்திருக்கலாம். உச்சக்கட்ட காட்சியில் மட்டும்தான் ஐஸ்வர்யாவுக்கு நன்றாக நடிக்க வாய்ப்பு. அதற்கு முன்பு வரை அவரை ஒரு பயத்துடன் இருப்பது போலவே காட்டியிருக்கிறார்கள். ஐஸ்வர்யா பற்றிய பின்னணி கதையை முன்னரே சொல்லி படம் பார்ப்பவர்களைத் தயார்படுத்தி இருந்தால் இன்னும் ஓர் அழுத்தம் கிடைத்திருக்கலாம்.

ஐஸ்வர்யா ராஜேஷ் தவிர, தெரிந்த முகம் என்று பார்த்தால் ஆடுகளம் நரேன் மட்டும்தான் இருக்கிறார். அவரின் மகனாக மணிகண்டன் ராஜேஷ் நடித்திருக்கிறார். ஐஸ்வர்யா காரில் பயணிக்கும் ஓர் இசையமைப்பாளராக நடித்திருக்கும் அபிஷேக் கடுப்பேற்றுகிறார். காரில் உள்ள கூலிப்படையினர் நாடகத்தனமாக நடித்திருக்கிறார்கள்.

ஒரு கார் பயணத்தை படமாக்குவது எளிதான விஷயமல்ல. ஒளிப்பதிவாளர் கோகுல் பெனாய் கடுமையாக உழைத்துள்ளார். ஜிப்ரான் பின்னணி இசை பரவாயில்லை.

ஐஸ்வர்யா கதாபாத்திரம் மீது நமக்கு ஆரம்பத்திலேயே ஓர் அனுதாபம் வரும் அளவுக்கு திரைக்கதை அமைத்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. உச்சக்கட்ட காட்சியில் அவர் சில பல உண்மைகளைச் சொல்லும் போது அவர் மீது நமக்கு பரிதாபம் வராமல் போவதற்கும் அதுதான் காரணம். கொஞ்சம் மாற்றி யோசித்திருக்கலாம்.

# ஷாருக் படத்துக்கு சிக்கல்



பொலிவூட் நடிகர் ஷாருக் கானின் 'பதான்' படத்தின் பாடல்கள் உள்ளிட்ட சில காட்சிகளை மாற்றி மீண்டும் சமர்ப்பிக்குமாறு படக்குழுவுக்கு மத்திய திரைப்பட தணிக்கைக் குழு வலியுறுத்தியுள்ளது.

ஷாருக்கான், தீபிகா படுகோனே நடித்த 'பதான்' திரைப் படத்தின் 'பேஷரம் ரங்' பாடலின் காணொலி அண்மையில் வெளியானது. இதில் தீபிகா படுகோனே காவி நிற பிகினி ஆடையும், ஷாருக்கான் பச்சை நிற ஆடையும் அணிந்தவாறு நடித்துள்ளனர். காவி உடை வேண்டுமென்றே அவமதிக்கப்பட்டதாக இந்திய ஆளும் கட்சியினர் கொந்தளித்தனர்.

இது தொடர்பில் பல விவாதங்கள் எழுந்தன. இந்த நிலையிலேயே இந்தக் காட்சியை மாற்றியமைக்குமாறு தணிக்கைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

# 13 வேடங்களில் சூர்யா

சிறுத்தை', 'வீரம்', 'விஸ்வாசம்', 'அண்ணாத்த' உள்ளிட்ட பல படங்களை இயக்கிய சிவா இயக்கும் படத்தில் சூர்யா தற்போது நடித்து வருகிறார். இந்தப் படத்துக்கு சூர்யா 42 என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தில், பொலிவூட் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இந்தத் திரைப்படம் 3டி முறையில் சரித்திர படமாக 10 மொழி களில் வெளியாகவுள்ளது. அத்துடன், நடிகர் சூர்யா 13 வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்கவுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.



# இயக்குநராக மாறும் நாயகி

ராதிகா ஆப்தே தோனி படம் மூலம் திரையுலகில் அறிமுக மானவர். தமிழ் திரையுலகில் பிரபலமாகி பொலிவூட் சென்ற அவர், துணிச்சலான நடிகை என்று பெயரெடுத்தவர்.

தற்போது அவர் படம் இயக்கப் போகிறார் என்று அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், "திரைப்படம் இயக்க வேண்டும் என்பதற்காகத்தான் திரையுலகுக்கே வந்தேன். சந்தர்ப்ப சூழ்நிலையால் நடிகை ஆகிவிட்டேன். இந்த அனுபவத்தை திரைப்படம் இயக்குவதற்கு பயன்படுத்திக் கொண்டேன். இதுதவிர, முறைப்படி திரைக்கதை எழுதவும் படம் இயக்கவும் கடந்த 3 ஆண்டுகளாக பயிற்சி செய்து வருகிறேன்.

திரைக்கதை எழுதும் கலை பற்றி படிப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. அதில் இன்னும் நான் முழுமையாகத் தேறவில்லை. சில திரைக்கதை எழுத்தாளர்களிடம் இதுபற்றி படித்துக் கொண்டிருக்கிறேன். விரைவில் ஒரு படத்தை எழுதி - இயக்க விரும்புகிறேன். அதற்காக நடிப்பை கைவிடமாட்டேன் - என்று கூறியிருக்கிறார்.



# கே. ஜி. எவ். 3 விரைவில்

பிரசாந்த் நீல் இயக்கத்தில் யஷ் நடிப்பில் வெளியான கே. ஜி. எவ். -1 மற்றும் கே. ஜி. எவ். - 2 ஆகிய இரண்டு படங்களும் வெளியாகி மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றது. இதன் காரணமாகவே கே. ஜி. எவ். -3 படம் குறித்து ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் நிலவி வந்தது.



இந்நிலையில் தற்போது அது குறித்து அப் படத்தின் தயாரிப்பாளர் விஜய் கிரங்கடூர் புதிய தகவலை வெளியிட்டுள்ளார். அதில், கே ஜி எவ் -3 படத்துக்கான கதை மற்றும் திரைக் கதையை பிரசாந்த் நீல் ஏற்கனவே தயார் செய்து விட்டார்.

அந்த கதையில் யஷ்ஷின் இளமைக்காலம் மற்றும் பிளாஷ்பேக் காட்சிகள் இடம் பெறும். தற்போது பிரபாஸ் நடிப்பில் சலார் படத்தை இயக்கி வரும் பிரசாந்த் நீல், அந்த படத்தை முடித்ததும் கே. ஜி. எவ். 3படத்தின் மூன்றாம் பாகத் திற்கான பணிகளை தொடங்கவுள்ளார்.

# ஜான்வியின் புதிய அறிமுகம்

தயாரிப்பாளர் போனி கபூர்- மறைந்த நடிகை சிறீதேவி ஆகியோரின் மூத்த மகள் ஜான்வி கபூர். இவர் 2018ஆம் ஆண்டு வெளியான 'தடக்' என்ற படம் மூலம் நடிகையாக அறிமுகம் ஆனார்.


தொடர்ந்து, தென்னிந்திய மீளுருவாக்கப் படங்களில் கவனம் செலுத்தி வரும் அவர், தமிழ், தெலுங்கு படங்களில் அறிமுகமாக இருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன. ஜூனியர் என்.டி.ஆர் ஜோடியாக அவர் நடிக்க இருப்பதாகவும் கூறப்பட்டது.


இந்நிலையில் அவர் அளித்த பேட்டி ஒன்றில், "தென்னிந்திய சினிமாவில் விரைவில் அறிமுகமாக இருக்கிறேன்" என்று தெரிவித்தார். அது தமிழ் படமா, தெலுங்கு படமா என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

# சாதனைத் தமிழன் விருது வழங்கும் நிகழ்வு 2022
























படங்கள் : ஜெகன்

## கனடா தமிழ் இலக்கியத் தோட்டம்

# இயல் விருதுகள் - 2022


## இம்முறை படைப்பிலக்கியவாதிகள் முருகபூபதிக்கும் பாவண்ணனுக்கும் கிடைக்கிறது

கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத்தோட்டம் வழக்கமாக வருடா வருடம் வழங்கும் இயல்விருது கொவிட் நோய்த் தொற்று காரணமாக 2020 ஆம் வருடம் வழங்கப்படவில்லை. ஆகவே 2022 இல் இரண்டு இயல் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவை 2023 யூன் மாதம் கனடா ரொறொன்ரோவில் வழங்கப்படும்.

இம்முறை இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட வரும் அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றுள்ளவருமான எழுத்தாளர் லெட்சுமணன் முருகபூபதிக்கும், இந்திய எழுத்தாளரான பெங்களூரில் வதியும் பாவண்ணனுக்கும் இயல் விருது வழங்கப்படுகிறது.

குறிப்பிட்ட இயல்விருது தொடர்பான செய்தியறிக்கை பின்வருமாறு:





**லெட்சுமணன் முருகபூபதி**

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண் டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 50 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கி வரும் இலங்கையில் பிறந்த படைப்பிலக் கியவாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு வழங்குகிறது.

1972 இல் எழுத்தாளராக அறிமுகமான இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்தது. வீரகேசரி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் இவர் பணியாற்றியபோது சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் - மாணவர் விழாவில் கலந்து கொண்டார்.

1987 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த இவர், தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, பேட்டி, பயண இலக்கியம் என எழுதி வெளியிட்டு வருகிறார். அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைத்துவரும் இவர், 2011 இல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாள ராக செயல்பட்டார்.

அவுஸ்திரேலியாவில்1988 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், 2004 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் ஆகியனவற்றின் ஆரம்ப உறுப்பினருமாவார்.

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் 13 யூலை 1951 இல் பிறந்த முருகபூபதி , விவேகானந்த வித்தியாலயத்தில் (தற்போது விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி ) தமது ஆரம்ப கல்வியை தொடங்கி பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும், (தற்போது கனகரத்தினம் மத்திய கல்லூரி ) நீர் கொழும்பு அல்கிலால் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

இவருடைய வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ரஸஞானி என்ற ஆவணப்படத்தை 2017 இல் மெல்பேர்ன் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியும், வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டனர்.

இவருடைய சிறுகதை தொகுதிகள் ஏழும், புதின, சிறுவர், பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரை தொகுதிகள் பதினாறும் வெளிவந்துள்ளன.

இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:

- சுமையின் பங்காளிகள் - 1975 ஆம் ஆண்டு சிறந்த சிறுகதை தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.

-பறவைகள் - 2002 ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது.

-அக்கினிக்குஞ்சு இணைய இதழ் 2018 இல் வழங்கிய வாழ்நாள் இலக் கிய சாதனையாளர் விருது.

**இதர விருதுகள்:**

-2002 ஆம் ஆண்டு அவுஸ்திரே லிய தினத்தின்போது விக்ரோரியா மாநில டெறபின் மாநகர சபை வழங்கிய சிறந்த பிரஜைக்கான விருது.

-2011 ஆம் ஆண்டு விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார ஆணை யத்தின் விருது.

-2022 Aust Tamil TV - (Tamil Linguistics Award) விருது.

இவருடைய இலக்கிய, ஊடகத்துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியம் சம்பந்தமான சேவைகளைப் பாராட்டி 2022 ஆம் ஆண்டுக்கான இயல் விருதை வழங்குவதில் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

**பாவண்ணன் ( இயற்பெயர் பலராமன் பாஸ்கரன்)**

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக் கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் பாவண்ணன் அவர்களுக்கு வழங்குகிறது.

பாவண்ணன் 1980 களில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களின் தலைமுறையை சேர்ந்தவர். 'தீபம்' என்னும் இதழில் வெளிவந்த முதல் சிறுகதையை தொடர்ந்து சிற்றிதழ்களிலும், பெரிய இதழ்களிலும் இவர் இன்றுவரை தொடர்ந்து எழுதுகிறார்.

தமிழ் சிறுகதைகளையும், தமிழில் வெளிவந்த பிறமொழிச் சிறுகதைகளையும் முன்வைத்து திண்ணை இணைய இதழில் ‘எனக்குப் பிடித்த கதைகள்’ என்னும் தலைப்பில் இவர் அந்தக் கதைகளில் காணப்பட்ட அழகியலையும் வாழ்வியலையும் இணைத்து புரிந்துகொள்ளும் விதமாக எழுதிய நூறு விமர்சனக் கட்டுரைகள் மிகப்பெரிய வாசக கவனத்தை பெற்றன.

ஐம்பது தமிழ்க் கவிஞர்களின் படைப்புகளை முன்வைத்து ‘உயிரோசை’ இணையதளத்தில் ‘மனம் வரைந்த ஓவியம்’ எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை. ரசனையை அடிப்படையாகக் கொண்டு இவர் எழுதிய பல இலக்கியக் கட்டுரைகள் இவரை தமிழ் அழகியல் விமர்சகர்களின் முன் வரிசையில் வைக்கத் தகுதியாக்கின.

பாவண்ணன், வளவனூர் என்னும் சிற்றூரில் 1958 ஆம் ஆண்டு அக்டோபர் 20 இல் பிறந்தார். பள்ளிக் கல்வியை வளவனூரிலும் புகுமுக வகுப்பை விழுப்புரம் அரசுக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரியிலும் படித்து தேறினார். கோட்டப் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

இவருடைய கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதை தொகுதிகள் 21 , நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரை தொகுப்புகள் 34 , சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் (எல்லாமாக 99 நூல்கள் ) இதுவரை வெளியாகியுள்ளன.

**இவர் பெற்ற இலக்கிய விருதுகள்:**

- புதுச்சேரி அரசு சிறந்த நாவல் விருது - 1987
- இலக்கியச் சிந்தனை சிறந்த நாவல் விருது - 1995.
- கதா அமைப்பு சிறந்த சிறுகதை விருது - 1995.
- சாகித்திய அகாதெமி சிறந்த மொழிபெர்ப்பு விருது - 2005
- தமிழக அரசு சிறந்த குழந்தை இலக்கிய விருது - 2009
- சுஜாதா - உயிர்மை அறக்கட்டளை சிறுகதை தொகுப்பு விருது - 2015
- என்.சி.பி.எச் சிறந்த கட்டுரை தொகுதி விருது - 2015
- இந்திய அமெரிக்க வாசகர் வாழ்நாள் சாதனை விருது - 2018
- விளக்கு அமைப்பு புதுமைப்பித்தன் விருது - 2019
- எம்.வி. வெங்கட்ராம் நூற்றாண்டு நினைவு விருது - 2021

இவருடைய இலக்கிய படைப்புகள் சக எழுத்தாளர்களின் மதிப்பை பெற்றவை. முக்கியமாக இவருடைய மொழிபெயர்ப்புகள் தமிழ் இலக்கியத்தின் வளத்தை பெருக்கின. இவருடைய தமிழ் இலக்கியச் சாதனைகளைப் பாராட்டி 2022 ஆம் ஆண்டுக்கான இயல் விருதை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

---




## வியுக்தியார் பதில்கள்

**ஆர். புஸ்பகாந்த், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இனப் பிரச்னைக்கு தீர்வு பெற்றுத்தருவார்கள் என்று தமிழ் கட்சித் தலைவர்களிடம் எதிர்பார்க்கவேண்டாம் என்று கூட்டமைப்பின் வன்னி எம்.பி. விநோ நோதாரலிங்கம் திரும்பத்திரும்ப கூறிக்கொண்டிருக்கின்றாரே? அவர் தனது கட்சித் தலைவரையும் சேர்த்துத்தானே இப்படி சொல்கிறார்?

**வியுக்தியார்:** அவர் இப்படிச் சொல்வது தனது கட்சித் தலைவரையும் சேர்த்து மாத்திரமல்ல, தன்னையும் சேர்த்துத்தான் சொல்கின்றார். உங்களைப்பற்றி அல்லது உங்களால் என்ன முடியும் என்பது பற்றி உங்களை விட அதிகம் தெரிந்தவர்கள் யாரும் இருக்கமுடியாதுதானே. அதுபோலத்தான் அவர் தன்னை நன்கு அறிந்து வைத்திருப்பதால்தான் அப்படிச் சொல்கிறார் என்று நினைக்கின்றேன். அதைவிட இன்னுமொரு முக்கியமான விசயமும் உண்டு. அதாவது தமிழ் மக்களும் இவர்களைப் போன்றவர்களை தெரிவுசெய்து பாராளுமன்றம் அனுப்புவதும், ஏதோ அவர்கள் பிரச்சினைக்கு தீர்வுபெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் அல்ல என்பதும் மனுசனுக்கு இப்போது புரிந்துவிட்டது என்று நினைககின்றேன். அதுதான் இப்படி அடிக்கடி கூறி தான் ஒரு நேர்மையான ஆள் என்பதையாவது நிரூபிக்க முயற்சிக்கிறார் போலும்.

---

**எஸ். நிதர்சன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை**

**கேள்வி:** நாட்டின் 75ஆவது சுதந்திரதினம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் பெப்ரவரி 17ஆம் திகதி சுதந்திரதின கொண்டாட்டத்தை நடாத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்றதாமே. ஜனாதிபதியும் அதில் கலந்துகொள்ளவிருப்பதாக கூறப்படுகின்றது. கடந்த எழுபத்திஐந்து ஆண்டுகளாக சிறிலங்காவின் சுதந்திர தினத்தை ஒரு துக்க நாளாகவே கொண்டாடிக் கொண்டிருக்கும் யாழ்ப்பபாணம் இந்த ஆண்டு அப்படி இல்லாமல் கொண்டாடும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** உண்மைதான், இலங்கைக்கு பிரிட்டன் சுதந்திரம் வழங்கி எழுபத்தி ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும், தமிழ் மக்கள் தமது சுதந்திரத்திற்காக போராடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை- அதுதான் நமது நாட்டின் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரதின கொண்டாட்டத்திற்கு முன்னதாக தீர்வு கண்டுவிடப்போவதாக நமது ஜனாதிபதி அறிவித்திருக்கிறாரே. நமது தலைவர்களும் முழு நம்பிக்கையோடு அவரோடு பேசத் தொடங்கியிருக்கின்றனர். சிலவேளை பெப்ரவரி நான்காம் திகதிக்கு முதல் நமக்கு சுதந்திரம் கிடைத்துவிடுமோ என்னவோ. எழுபத்தி ஐந்து வருடங்கள் பொறுத்திருந்த நாம், இன்னும் கொஞ்ச நாட்கள் தானே இருக்கின்றது பொறுத்திருந்துதான் பார்ப்போமே.!

---

**த. வினோத், சங்கிலியன் வீதி, நல்லூார்.**

**கேள்வி:** யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணன், தனது பட்ஜட் தோல்வியடைந்ததற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் காரணம் என்று கூறியிருந்தார். ஆனால் யாழ். மாநகர சபையின் பாதீட்டு விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் நோக்கம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு இல்லை எனவும் அதே சமயம் ஈ. பி. டி. பியின் தோளில் ஏறி ஆடவும் விட முடியாது என் றும் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய தலைவராக இருந்த மணிவண்ணனை அவர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றியபோது அவர் மீது இந்த வியுக்தியாருக்கும் ஒரு மரியாதை இருந்தது. ஆனால் அவர் ஈபிடிபியின் ஆதரவுடன் முதல்வராக தெரிவானபோது அவர் மீதான முன்னணியின் குற்றச்சாட்டு சரியானதாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது. இப்போது டக்ளஸ் தேவானந்தாவின் அறிக்கை அல்லது அவரது கருத்து அதை மேலும் உறுதிசெய்திருக்கின்றது. தன்னை முதல்வராக்கிய ஈபிடிபியினர் தனது பட்ஜட்டுக்கு அதரவளிக்க மறுத்ததை மூடிமறைத்துவிட்டு, கூட்டமைப்பு மீது அவர் குற்றம்சாட்டியது ஏற்றுக்கொள்ளமுடியாதது.



கே.எஸ்.சுதாகர்

# பொறி

என்னுடைய வீட்டிற்கு ஒவ்வொரு வருடமும் யூன் மாதமளவில் ஒரு எலி தவறாமல் வந்து போகும். யூன் மாதம் இங்கே குளிர் காலம்.

எலியைப் பற்றி பல எழுத்தாளர்கள் கவிதை கதைகளைப் படைத்திருந்தாலும், சிறுவயதில் படித்த 'The Pied Piper' என்ற கதைதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. சங்ககால இலக்கியங்களில் எலியைப்பற்றி யாரும் எழுதியிருக்கின்றார்களோ தெரியவில்லை.

குட்டி எலி. அதன் உடம்பு நடுவிரல் நீளம் இருக்கும். அவருக்கு எங்கள் வீடு மிகவும் பிடித்திருக்கவேண்டும். நாங்கள் அமைதியாக இருக்கும் தருணங்களில் அவர் சுறுசுறுப்பாகிவிடுவார். வீடு முழுவதும் ஓடித் திரிந்து இம்சை செய்வதுடன் குறுணிக்குறுனிப் புளுக்கைகளை எங்குமே வீசிவிடுவார்.

அதன் மணம் சகிக்க முடிவதில்லை. தொல்லையோ தாங்க முடிவதில்லை. போன வருடத்திற்கு முந்தைய வருடம் வந்த எலியின் வயிறு சாதுவாகப் புடைத்திருந்ததை எனது அப்பா கண்டுகொண்டார். மறுவாரம் எண்ணற்ற பல எலிகள் வீட்டில் துள்ளிக் குதித்தன.

குளிர் காலம் அதன் இனப்பெருக்க காலம் என்றாலும்கூட - 'ஒரு' எலி என்ற கணக்கு எனக்கு சந்தேகத்தைக் கொடுத்தது. கடந்த மூன்று வருடங்களாக வந்து போகும் எலி, போன வருஷத்துடன் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அதுதான் நடக்கவில்லை. இந்த வருடமும் வந்துவிட்டது.

நேற்று நள்ளிரவு ஒரு சத்தம். மெதுவாக நித்திரையில் இருந்து எழுந்து பார்த்தபோது, ஹோலிற்குள் ஒரு 'சிப்ஸ் பைக்கற்' நகர்ந்து கொண்டிருந்தது. ஆளரவம் கேட்டு பாய்ந்து ஓடினார் எலிப்பிள்ளையார்.

'உங்களுக்கு எப்படித் தெரியும் ஒரு எலிதான் வந்து போகின்றது?' என்று நீங்கள் கேட்கக்கூடும்.

நான் ஒருபோதும் ஒன்றுக்கு மேற்பட்ட எலிகளை ஒன்றாகக் காணவில்லை என்பதைத் தவிர வேறெந்தச் சான்றுகளையும் என்னால் தரமுடியாது.

எப்ப கலைத்தாலும் அங்கு இங்கு என்று எங்களைச் சூக்காட்டி கடைசியில் ஹோலிற்குள் இருக்கும் காஸ் ஹீற்றருக்குள் போய் ஒளிந்து கொள்ளும். பின்பு அந்தப் பாதையினூடாகத் திரும்பி வருவதில்லை. ஹீற்றருக்குள்ளால் ஏதாவது கள்ளப்பாதை வைத்திருக்க வேண்டும்.

போன வருடம் ஒருநாள் - தொல்லை தாளாமல் 'அது' வருவதற்கு சற்று முன்னதாக ஹீற்றரைப் போட்டு நன்றாகச் சூடாக்கிவிட்டுக் காத்திருந்தேன். வெளியே வந்தது. சொல்லி வைத்தால் போல நாங்கள் எல்லாரும் சத்தமிட்டபடியே கதகளி குச்சுப்புடி ஆடினோம். அவர் எமது நிகழ்ச்சியைப் பார்த்து மிரண்டு போகாமல், தான் வகுத்த வழியே ஓடி ஹீற்றருக்குள் நுழைந்தார். பின்னர் தன்னுடைய பாஷையில் 'ஐயோ' எனக் கத்தியபடி அங்கேயே சங்கமமாகினார். ஹீற்றர் எலியைச் சரிவர உள்வாங்கியிருந்தால் இந்தமுறை அது வந்திருக்க முடியாது. ஆனால் கரட்டாக யூன் மாதம் வந்து காட்சி தந்தது எமக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தத் தடவை எலி வந்தால் அயலவருடன் கதைப்பது என்று முடிவு செய்திருந்தேன். வெள்ளை இனத்தவரான டேவிட் வீடு சென்று எனது எலி பற்றிய சந்தேகத்தைக் கேட்டேன். அவர் நாடியில் கை வைத்து, எலி ஒன்று பதுங்கி நிற்பதுபோல நின்றார். தீவிர தேடுதலின் பின்னர், "யெஸ்... கரெக்ட்.... என்னுடைய வீட்டிற்கும் ஒவ்வொரு வருஷமும் எலி ஒன்று தவறாது வந்து போகின்றது" என்ற தனது கண்டுபிடிப்பையும் வெளியிட்டார்.

அடுத்து வந்த சனி ஞாயிற்றுக்கிழமைகளில் எல்லா வேலைகளையும் தள்ளி வைத்துவிட்டு இரண்டு விஷயங்கள் செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருந்தேன்.

ஒன்று : ஒரு எலியைப் பிடிப்பதற்காக நிறைய எலிப்பொறிகள் வாங்கி வீடு முழுவதும் வைத்துவிட வேண்டும்.

இரண்டு : செக்யூரிட்டிக் கமராவைப் பார்ப்பது.

எலிப்பொறி வாங்க பணிங்ஸ் என்ற கடைக்குச் சென்றேன். குட்டிக் குட்டி எலிப்பொறிகளாக பத்துப்பொறிகளை எடுத்து வைத் துக்கொண்டிருக்கும்போது என் கைகளிற்கு மேலால் எலி ஒன்று பறந் தோடியது.

வீட்டிற்கு வந்து பொறிகளில் சீஸ் வைத்து வரிசையாக அடுக்கி வைத்தேன். செக்யூரிட்டிக்கமராவை ஒருவாரம் பின்னோக்கி நகர்த்திவிட்டு ஒவ்வொரு நிமிடமாகப் பார்கத் தொடங்கினேன். வெள்ளிக்கிழமை இரவு மூன்று மணி இருக்கும். ஒரு மனிதர் கையில் தூக்குப் பெட்டிகளுடன் வருகின்றார்.

வீட்டிற்கு முன்னால் நின்று பெட்டிகளைத் திறப்பதும் மூடுவதுமாக இருக்கின்றார். அப்படியே ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று எவற்றையோ விநியோகம் செய்கின்றார். எனது கமராவில் மூன்று வீடுகள் பதிவாகி இருந்தன.

அப்போது ஏதோவொன்று என் மூளைக்குள் மின்னலென அடித்தது. கடந்த வாரம் என் தபால்பெட்டிக்கு வந்த துண்டுப்பிரசுரங்களை எடுத்து அலசி ஆராய்ந்தேன். ஒரு கவர்ச்சிகரமான விளம்பரம் என் கண்ணில் பட்டது.

Be "SPIDER FREE" this winter> 23 areas of your property treated> be 100% delighted or the job is FREE.

As s "SPECIAL BONUS" we will treat a second pest at a heavily reduced



price and a third pest (Mice & Rodents) for "FREE"

Call now Mark (Your Local Pest Control Experts

விளம்பரம் சொன்னது இதுதான். மேலும் விளம்பரதாரரின் ரெலிபோன், முகவரியும் அதில் அடங்கியிருந்தது. அவர்களின் முகவரி எமது வீட்டிற்கு அடுத்த தெருவில் இருந்தது.

எலி இலவசமா? அதற்கான மருந்து இலவசமா?

விளம்பரத்தை எடுத்துக் கொண்டு டேவிட் வீடு சென்றேன். வீட்டை விட்டுப் புறம்படும்போதுதான் ஒன்றைக் கவனித்தேன். அடுக்கி வைத்த பத்துப் பொறிகளில் ஒன்றினைக் காணவில்லை. இருவரும் அந்த முகவரி தேடிப் போனோம். அவரின் வீடு பொலிசாரினால் 'சீல்' வைக்கப்பட்டிருந்தது.

அவரது மரப்பலகைகளினாலான வீட்டின் முன்னால் 'ஆயசம ºநளவ ஊழவெசழட நுஒிநசவ' என்று ஒரு பலகையில் எழுதி இருந்தது. அதற்குக் கீழே 'யாரும் உள்ளே போக வேண்டாம்' என்று ஒரு பேப்பரில் எழுதி ஒட்டி இருந்தது. நாங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒரு மனிதர் எங்களை நோக்கி வந்தார்.

'இந்த வீட்டு மனிதர் சில பிராணிகளை உயிரியல் ரீதியாக உற்பத்தி செய்கின்றார். இரவில் அவற்றைக் கொண்டு போய் வீடுகளில் விட்டு விடுகின்றார். பகலில் அவற்றிற்கான மருந்துகளை விற்கின்றார். கறையானுக்கு மருந்து அடிக்கும்போது தந்திரமாக கரப்பான் பூச்சிகளை அங்கே பரப்பி விடுகின்றார். அதேமாதிரி கரப்பான் பூச்சிக்கு மருந்து அடிக்கும்போது கறையானைப் பரப்பிவிடுகின்றார்' என்றார் அந்த மனிதர்.

'ஓ... பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகின்றாரோ'

'தொட்டிலை ஆட்ட ஆட்ட அவருக் குப் பணம் குவிகின்றது' என்றார் டேவிட்.

அங்கிருந்த உயிரினங்களை இரவோடு இரவாக பொலிசார் அப்புறப்படுத்தி விட்டதாக அந்த மனிதர் சொன்னார்.

'அந்த மனிதர் சமீபத்தில்தான் இந்தநாட்டிற்குப் புலம்பெயர்ந்து வந்தார். அவர் ஒரு உயிரியல்துறை விஞ்ஞானி.

கருத்தரிக்கச் செய்யப்பட்ட உயிரிகளை கொண்டு வந்து விட்டுவிடுவார். அவை ஒரு குறிப்பிட்ட காலத்தில், மிக வேகமாக, அதிகளவில் இனப்பெருக்கம் செய்து விடும். அந்தக்காலத்திற்குள் அவற்றை அழிக்காவிடில் அதோ கதிதான்.

இப்ப நாடு சரியான றிசசனிலை (Recession period) உள்ளதாலை இந்த வேலை களைச் செய்து பிழைத்திருக்க வேண் டும். பாவம் அந்த மனிதர். இப்ப கம்பி எண்ணுகின்றார்' என்றார் அந்த மனிதர். அவர் அதைச் சொல்லிக் கொண்டி ருக்கும்போது இரண்டு பெரிய முரட்டு எலிகள் அவரது துர்நாற்ற வாடை வீசும் வீட்டு முகப்பில் இருந்து எங்களை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

# நமீபியா - காலனியாதிக்க இனப் படுகொலை:

## ஜேர்மனியின் மன்னிப்பும் நஷ்ட ஈடு வழங்கலும்.. மேற்குலக கனிமவள சுரண்டலும் பொருளாதார வீழ்ச்சியும்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

நூறு ஆண்டுகளுக்கு முன்பு குடியேற்ற நாடான நமீபியாவில் ஜேர்மனிய பேரரசினால் நடத்தப்பட்ட இனஅழிப்புச் செயல்களை “இனப்படுகொலை” என்று ஜேர்மனிய நாடு ஏற்றுக் கொண்டுள்ளது.

நமீபியப் படுகொலைகளுக்காக ஜேர்மனிய அரசு கடந்த 2002 ஆம் ஆண்டில் மன்னிப்புக் கோரியும் இருந்தது. நமீபியாவில் இழைக்கப்பட்டவைகள் இன்றைய உலகின் கண்ணோட்டத்தில் இனப்படுகொலைகளே என்பதை ஒப்புக்கொள்வதாக ஜெர்மனியின் வெளிவிவகார அமைச்சர் ஹெய்க்கோ மாஸ் 2018இல் தெரிவித்திருந்தார்.

தெற்கு ஆபிரிக்காவில் அட்லாண்டிக் பெருங்கடல் ஓரமாக நமீபியா நாடு உள்ளது. இதன் எல்லைகளில் வடக்கே அங்கோலா, சாம்பியா, கிழக்கே பொட்ஸ்வானா, தெற்கே தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன.

இந்நாடு தென்னாபிரிக்காவிடம் இருந்து 1990 இல் விடுதலை பெற்றது. இதன் தலைநகரம் விந்தோக் ஆகும். ஐநா, தெற்கு ஆபிரிக்கஅபிவிருத்தி ஒன்றியம், ஆபிரிக்க ஒன்றியம், பொது நலவாய நாடுகள் ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்றது. இதன் பெயர் நமீப்பாலை வனத்தின் பெயரைத் தழுவியது.

**ஜெர்மானிய குடியேற்ற ஆக்கிரமிப்பு:**

ஐரோப்பிய நாடுகளில் தங்கள் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட ஜெர்மனிய அரசு, பிரிட்டன் - பிரெஞ்சு படைகளுக்கிடையிலான போரை பயன்படுத்தி ஆப்ரிக்க பிரதேசங்களிலுள்ள தெற்கு பகுதிகளை தன்வசப்படுத்தியது. இதன் பின்னரே இனப்படுகொலை, போர், காலனித்துவம் மற்றும் ஜெர்மானியர்கள் குடியேற்றத்திற்கு வழிவகுத்தது.

இதுபல ஆண்டுகளாக ஏன் இன்றளவும் பூர்வீகமக்களை பெரிதும் பாதித்து வருகிறது. 117 ஆண்டுகளுக்கு பிறகு ஜெர்மனி அரசு நமீபியாவில் நடந்தது இனப்படுகொலை என்று ஒப்புக் கொண்டு அந்நாட்டின் வளர்ச்சிக்காக 1.3பில்லியன் டாலர் நிதியுதவி தருவதாக அதிகாரப்பூர்வ அறிக்கையை மே 27, 2021 அன்று வெளியிட்டதும் அறிந்ததே.

**மனிதநேயமற்ற இனப்படுகொலை:**

இனப்படுகொலை என்பது “மனிதர்களின் பரிணாம வளர்ச்சியின் ஊடாக நாட்டின் பொருளாதார சமூக மேம்பாடு என்ற பெயரால் ஒரு குறிப்பிட்ட தேசிய இன மொழி பேசும் மக்களை, குறிப்பிட்ட சமயத்தை பின்பற்றுபவர்களை ஒட்டு மொத்தமாகவோ அல்லது பகுதி யாக வன்முறையின் மூலம் அழித்தொழிக்கும் மனிதநேய மற்ற துன்பகரமான செயலே ஆகும்.”

உலக நாடுகளிடையே இனப்படுகொலை என்ற சொல் அறிமுகமாகும் முன்னரே இருபதாம் நூற்றாண்டின் முதல் இனப்படுகொலை ஆப்பிரிக்காவில் ஹிட்லரின் நாசி படையால் “ஜெர்மன் தென்மேற்கு ஆப்பிரிக்கா” (தற்போதைய நமீபியா) பகுதியில் அரங்கேறியுள்ளது.

**ஜேர்மனியின் நிதி இழப்பீடு:**

நமீபியஅரசுடன் செய்து கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில் அங்கு இனப்படுகொலையுண்ட ஆதிக்குடி மக்களது பரம்பரையினரது முன்னேற்றத்திற்காகவும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காகவும் ஒரு பில்லியன் ஈரோக்களை வழங்குவதாகவும்ஜேர்மனி அறிவித்திருக்கிறது.



நமீபியாவின்ஆதிக் குடிகளான ஹெரேரோ மற்றும் நாமா இனங்களைச் சேர்ந்தவர்கள் மீது ஜேர்மனிய காலனிப் படைகள் புரிந்தகொடுமைகளை “அளவிடமுடியாத் துன்பம்” என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

1800 களின் இறுதியிலும் 1900 களின் தொடக்கத்திலும் (1884 -1915) நமீபியா உட்பட பலநாடுகள் ஜேர்மனியின் ஒரு பகுதியாக அதன் பேரரசுகளது கட்டுப்பாட்டில் இருந்தன. இன்றைய நமீபியா அச்சமயம் “ஜேர்மன் தெற்கு மேற்கு ஆபிரிக்கா” என்றேஅழைக்கப்பட்டது.

நமீபியாவின் பூர்வீக குடிகளான ஹெரேரோ மற்றும் நாமா இனங்களைச்சேர்ந்தோர் அன்றைய ஜேர்மனியக்குடியேற்ற அதிகார ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். முதலில் ஹெரேரோ இனமக்களும் தொடர்ந்து நாமா இனத்தவரும் நடத்திய கிளர்ச்சிகளை ஜேர்மனியப் பேரரசுப் படைகள் கொடூரமான முறையில் அடக்கி ஒடுக்கின.

ஆண்கள்அனைவரும் தூக்கில் இடப்பட்டனர். பெண்களும் குழந்தைகளும் சிறிதளவு உணவுடன் பாலைவனத்திற்குத் துரத்தப் பட்டு அங்கு தண்ணீர் இன்றிப் பட்டினி மற்றும் வாந்திபேதியால் மடியவிடப் பட்டனர்.

ஆயிரக்கணக்கான ஹெரேரோ இன ஆண்களும் பெண்களும் நமீபியா கரையோரமாக அமைந்துள்ள சுறாத் தீவில் வதை முகாம்களில் அடைக்கப்பட்டனர். ஜேர்மனியப் பேரரசினால் நிறுவப்பட்ட வதை முகாம்கள் பல அமைந்திருந்த காரணத்தால் சுறாதீவு, மரணத் தீவு எனவும் அழைக்கப்பட்டு வந்தது.


**1990 இல் சுதந்திர நாடாக பிரகடனம் :**

ஜெர்மனிய ஆதிக்கத்திற்குப் பின்னர் நமீபியா சுமார் 75 ஆண்டு காலம் தென்னாப்பிரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. தென்ஆப்பிரிக்காவின் மோசமான இனஒதுக்கலால் மீண்டும் அங்கு விடுதலை போராட்டங்கள் 1950ம் ஆண்டில் வெடித்தன.



அரசியல் கோரிக்கையை தென்னாப்பிரிக்க அரசு ஆயுத வழியில் நசுக்க முற்பட்ட போது நமீபிய மக்கள் ஆயுதப்போரட்டத்தையும் அதன் ஒரு பகுதியாக கொரில்லா போரையும் கையிலெடுத்தனர்.

பல் கட்ட போராட்டங்கள், சர்வதேச நாடுகளின் பல்வேறு சதிகள் இவை அனைத்தையும் நமீபியா மக்களின் ஒன்றுபட்ட போராட்ட குணத்தால் ஒன்றும் செய்ய முடியாமல் போக இறுதியில் மார்ச் 21, 1990ல் நமீபியா சுதந்திர நாடாகியது.



பிறகுஹெரேரோ மற்றும் நாமாக்களும் ஒருங்கிணைந்த அரசியல் இயக்கமாகவும் கட்சியாகவும் இணைந்து நமீபியாவில் தங்களுக்கு நடந்த அநீதி இனப்படுகொலையே என ஐக்கிய நாடுகள் முன் அரசியல் கோரிக்கை வைத்தனர். அது மட்டுமல்ல பலஅடையாளப் போராட்டங்களையும் முன்னெடுத்தார்கள்.

2004ல், நமீபியா நாட்டிற்கு வருகை தந்து ஜெர்மனி அமைச்சர் ஹெரேரோ மக்களிடம் மன்னிப்பு கேட்டதை அறிந்த ஜெர்மனி அரசு அந்த அமைச்சரை கண்டித்ததும் உலகறிந்ததே.

2006ல் ஜெர்மனி நமீபியாவில் நடந்தது இனப்படுகொலை என்று ஜெர்மனி தங்கள் அருங்காட்சித்தில் இருக்கும் ஹெரேரொ இன மக்களின் மண்டையோட்டை திருப்பிக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

2015ல் இரண்டு நாடுகளிடையே நடந்த பேச்சுவார்த்தையில், “கடந்த கால காயங்களை குணமாக்குங்கள்” என்ற அடிப்படையில் ஒப்பந்தம் போடப்பட்டு, பிறகு 2018ல் இன அறிவியல் பரிசோதனைக்காக வைத்திருந்த ஒரு டஜன் மண்டையோடுகள் நமீபிய மக்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

**நூற்றாண்டு இனப்படுகொலை:**

ஒரு நூற்றாண்டாக இனப்படுகொலையை ஒப்புக் கொள்ளாத ஜெர்மனிய அரசு, நமீபிய மக்களின் பல கட்ட ஜனநாயக போராட்டங்களுக்கு பிறகு கடந்த மே 28, 2021அன்று நமீபியாவில் நடந்தது இனப்படுகொலை என்றும், தங்கள் முன்னோர்கள் செய்த வரலாற்றுப் பிழையை ஈடுகட்டும் வண்ணம் நமீபிய நாட்டின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கு 1.3 பில்லியன் டாலர் இழப்பீடு தருவதாக ஜெர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹெய்கோ மாஸ் பத்திரிக்கையாளர் சந்திப்பில் அறிவித்தார். இந்த இழப்பீட்டை நமீபிய அரசும் ஒப்புக்கொண்டது.

சுதந்திரத்திற்கு பிறகு நமீபியா நாட்டில் வாழ்ந்து வரும் 7 வீத மேற்குலகை சார்ந்தவர்கள் 60 வீதம் விவசாய நிலத்தை தன் வசம் வைத்துள்ளார்கள். ஆனால்இந்த நவீன 21ம் நூற்றாண்டில் செய்த குற்றத்தை உணர்ந்து பாதிக்கப்பட்ட தரப்பிடம் மன்னிப்பு கோருவது குறைந்தபட்ச அரசியல் ஜனநாயகமாக கருத வேண்டியுள்ளது.

**தொடரும் அநீதியும் நில ஆக்கிரமிப்பும்:**

நமீபியாவில் தொடரும் அநீதியை சர்வதேச சமூகம் தட்டிக் கேட்க முடியாத நிலை உள்ளது. சுதந்திரம், ஜனநாயகம் பேசும் மேற்குலக நாடுகளின் முகமூடி இங்கே கிழிகின்றது. பனிப்போரின் பின்னர் அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய ஐந்துநாடுகள் மத்தியஸ்தம் வகித்தமையினால் தான், நமீபியா சுதந்திரம் அடைந்தது.

அப்போது அவர்கள் ஒரு நிபந்தனை விதித்தார்கள். தனியார் சொத்துரிமை பாதுகாக்கப் பட வேண்டும் என்ற வாக்குறுதியை, புதிய அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டன. இதனை நிச்சயப்படுத்தும், நமீபிய அரசமைப்பு சட்டத்தின் மூன்றாவது பிரிவில் எழுதப்பட்ட வாசகங்களை, எக்காரணம் கொண்டும் மாற்றக் கூடாது என்று உறுதி மொழி வாங்கிக் கொண் டன.

ஆபிரிக்க கறுப்பின மக்கள், தமது இனத்தவரின் ஆட்சி நடப்பதாக பெருமைப்பட ஏதுமில்லை. கறுப்பின அரசாங்கத்தை திரையாகப் பயன்படுத்திக் கொண்டு, இன்னமும் மேற்குலக காலனிய சுரண்டல் தொடர்கின்றது.

**கனிம வளங்கள் நிறைந்த நமீபியா :**

யுரேனியமும், வேறு கனிம வளங்களும் நிறைந்த செல்வம் கொழிக்கும் நமீபியாவில் கனிம வளங்களை அகழும் வேலையில் மேற்கத்திய நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. மிக நீண்ட கடல் எல்லையைக் கொண்ட நமீபியாவின் கடல் வளங்களையும், அவைதான் அள்ளிச் செல்கின்றன.

நமீபியாவின் மொத்த சனத்தொகை வெறும் இரண்டு மில்லியன்கள். ஆயினும், குறைந்தது 50 வீதமான மக்கள், வேலைவாய்ப்பின்றி வறுமையில் வாடுகின்றனர்.

அவர்களில் அநேகமானோர் ஆபிரிக்க கறுப்பின மக்கள். நமீபியாவின் இரண்டு மில்லியன் மக்களின் வாழ்வை மேம்படுத்துவது முடியாத காரியமாக, உண்மையில் அவர்கள் மறைக்க விரும்புவது, பெருமளவு செல்வத்தை ஒரு சிறிய பணக்காரக்கும்பல் மட்டுமே அனுபவிக்கிறது என்பதைத் தான்.

நமீபியாவின் மொத்த சனத்தொகையில் 6 வீதமாக உள்ள மேற்குலக ஐரோப்பியர்கள் 90 வீத தேச உற்பத்தியை கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

# தேர்தலை ஒத்திவைக்கும் தகுதியோ உரிமையோ எவருக்குமே கிடையாது!

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, ஜன. 01

வாக்களிக்கும் உரிமை மக்களின் அடிப்படை உரிமையாக இருப்பதால் தேர்தலை ஒத்திவைக்கும் தகுதியோ உரிமையோ எவருக்கும் இல்லை என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

சிறிது தாமதம் ஏற்பட்டாலும் கூடிய விரைவில் தேர்தல் நடத்தப்படும் என தாம் நம்புவதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தமக்கு விருப்பமான ஆட்சியாளர்களை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு இருக்கவேண்டும் என தெரிவித்த கிரியெல்ல, அதனை தடுப்பது ஜனநாயக விரோதமானது எனவும் கூறினார். (அ)



# சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் நிலையான முடிவு எடுப்பதில்லை

## கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியில்

கொழும்பு, ஜன. 01

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் பொறுப்பான பதவிகளை வகிக்கும் நபர்கள் நிலையான தீர்மானங்களை எடுப்பதில்லை மற்றும் அவர்கள் பின்பற்றும் இரட்டை நிலைப்பாடுகள் காரணமாக அந்த கட்சியின் உறுப்பினர்கள் கடும் வெறுப்புக்கு உள்ளாகியுள்ளனர் என தெரியவருகிறது.

புத்தாண்டில் நடைபெறும் பண்டாரநாயக்க நினைவு தினம் திட்டமிட்ட வகையில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதை காணக்கூடியதாக இல்லை என சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டப்ளியூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவு தினம் ஜனவரி 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதனை கட்சியின் தலைமையகத்தில் நடத்துவது குறித்து தற்போது பேசி வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் பண்டாரநாயக்க நினைவு தின நிகழ்வுகள் காலிமுகத்திடலில் உள்ள அவரது உருவச்சிலைக்கு அருகில் நடத்தப்படும்.

இம்முறை அந்த இடத்தில் பண்டாரநாயக்கவின் நினைவு தின நிகழ்வை நடத்த கட்சியில் இருந்து விலகி சென்றுள்ள 11 பேரின் அணி ஏற்பாடுகளை செய்துள்ளதாக தெரியவருகிறது.

கட்சியின் முடிவுகளை மீறி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் எனக் கூறப்பட்டாலும் இதுவரை அது சம்பந்தமாக எந்த நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லை என்பதும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதிருப்திய டைய காரணமாக அமைந்துள்ளது.

கட்சியின் முடிவுகளை மீறி அரசாங்கத்தில் இணைந்து கொண்ட வர்களுக்கு எதிராக குறைந்தபட்சம் கடிதங்கள் கூட அனுப்பி வைக்கப்படவில்லை. அவர்கள் கட்சியில் வகித்து வந்த பதவிகளில் இருந்து மாத்திரம் நீக்கி விட்டு, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பது தொடர்பிலும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

### திருடரையும் கொலைகாரர்களையும் விரட்ட

# பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்துங்கள்!

கொழும்பு, ஜன. 01

திருடர்களையும் கொலைகாரர்களையும் சேர்த்துக் கொண்டு எப்படி நாட்டைக் கட்டியெழுப்புவது? இவர்களை விரட்டிவிட்டுத்தான் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எனவே, இவர்களை விரட்டியடிக்க முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என ஜே.வி.பி.யின் பரப்புரைச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உண்மையில் பாராளுமன்றத்தைக் கலைத்து இந்த அரசை விரட்டவேண்டும் என்பதுதான் நாட்டு மக்களின் தேவை. அப்படிப் பார்க்கும்போது மக்களுக்குத் தேவை பாராளுமன்றத் தேர்தல்தான். அதையே நாங்களும் கேட்கின்றோம்.

எதிர்க்கட்சியில் உள்ள சிலர் பாராளுமன்றத் தேர்தலை விரும்பவில்லை. அரசில் இருந்து எதிர்க்கட்சி பக்கம் பாய்ந்து சுயாதீன எம்.பிக்கள் என்று கூறிக்கொண்டு இருப்பவர்கள் பாராளுமன்றத் தேர்தலை விரும்பவில்லை.

அவர்கள் தோல்வியடைந்து விடுவார்கள் என அஞ்சுகின்றார்கள்.

ஜனாதிபதி நினைத்தால் அடுத்த வருடம் பெப்ரவரியின் பின் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். ஆனால், அரசு இப்போதைக்கு எந்தத் தேர்தலுக்கும் செல்லாது - என்றார்.

கல்வி tv CHANNEL-1


**01.01.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**01.01.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# நிலவில் உதைபந்தாட்டம் ஆட...!

மோகன ரூபன்

ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவை உள்ளடக்கிய மூன்றாம் உலக நாடுகளில் வாழும் மக்கள் பலருக்கு உலகம் உருண்டை என்பது கூட தெரியாது. ஆனால், உதைபந்து உருண்டை வடிவமானது என்பது அவர்களுக்குத் தெரியும்.

அதுபோல, அவர்களில் பலருக்கு சொந்த நாட்டு ஜனாதிபதியின் பெயர்கூட தெரியாது. ஆனால், பீலே என்ற பெயரைத் தெரியும். அந்த அளவுக்கு ஒரு மந்திர வார்த்தை அது.

ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த மிகப்பெரிய உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவர் மத்தியாஸ் சிந்த்தலர். (Mathias Sindaler). சிண்டி என்பது அவரது இன்னொரு செல்லப்பெயர். இசைக்கு எப்படி இசைமேதை மொசார்ட்டோ அப்படி, உதைபந்தாட்டத்துக்கான மொசார்ட் இந்த சிண்டிதான் என்பார்கள்.

'சிண்டி கால்களில் மூளை உள்ளவர். அந்தக் கால்கள் ஓடும்போது எதிர்பார்க்கவே முடியாத பல அற்புதங்களைச் செய்யும்' என அல்பிரட் போல்கர் என்பவர் பாராட்டியிருக்கிறார். 'கிராண்ட் மாஸ்டர் ஒருவர் சதுரங்கம் ஆடுவது போல மத்தியாஸ் சிந்த்தலர், உதைபந்தாட்டம் ஆடுவார்' என்றுகூட சொல்வார்கள்.

இந்த மத்தியாஸ் சிந்த்தலர், பீலேவுக்கு முன்னால் பிறந்த பிதாமகன். பீலேவுக்கு அவர் முன்னோடி. ஆனால், சிந்த்லரைக்கூட, 'இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய பீலே' என்றுதான் சொல்வார்கள்.

ஆம். அவ்வளவுதான். காலத்தை கி. மு., கி. பி. என்று பிரிப்பது போல உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை எல்லாமே பீலேவுக்கு முன், பீலேவுக்கு பின்தான்.

பிரேசில் அணியில், பீலேவுக்கு முன்பிருந்த மிகப்பெரிய வீரர் லியோனிடாஸ் டா சில்வா. (Leonidas da Silva). கறுப்பு வைரம் என்று அவரது செல்லப்பெயர். ஆனால், உதைபந்தாட்ட களத்தில் பீலே எப்போது கால் பதித்தாரோ, அப்போதிருந்து 'கறுப்பு வைரம்' என்ற செல்லப் பெயர், பீலேவிடம் வந்து ஒட்டிக் கொண்டது.

பீலேயின் அப்பா டோடினோவும் ஒரு தொழில்முறை உதைபந்தாட்ட வீரர்தான். மகன் பிறந்தபோது மகனுக்கு அவர் வைத்த பெயர் எட்சன் அராண்டெஸ் டோ நாசி மென்டோ. இதில், எட்சன் என்ற பெயர், புகழ் பெற்ற அறிவியல் அறிஞரான தோமஸ் அல்வா எடிசனின் நினைவாக சூட்டப்பட்ட பெயர்.

கணவர் டோடினோ உதைபந்தாட்டம் மூலம் பெரிதாக எதையும் சம்பாதிக்கவில்லை. அதனால், பீலேயின் அம்மா, பீலே உதைபந்தாட்டம் ஆடுவதை ஆரம்பத்தில் விரும்பவில்லை. மகனின் உதைபந்தாட்டத்தை அவர் ரசிக்கவோ, உற்சாகப்படுத்தவோ இல்லை.

இருந்தும் சிறந்த வீரராக உருவெடுத்தார் பீலே. பிரேசில் நாட்டின் சாண்டோஸ் அணியில் பீலே இணைந்தபோது அவருக்கு வயது 15! பிரேசில் தேசிய அணிக்காக அவர் ஆடியபோது அவரது வயது பதினாறு. 1958ஆம் ஆண்டு ஸ்வீடனில் நடந்த உலகக்கோப்பையில் பீலே பங்கேற்றபோது 'ஒரு நட்சத்திரம் உதித்துவிட்டது' என்பது அனைவருக்கும் புரிந்து விட்டது. அந்த உலகக் கோப்பைப் போட்டியில் பீலே ஆடியபோது அவருக்கு 17 வயது முடிந்து 249 நாட்கள் ஆகியிருந்தன. உலகக் கோப்பைப் போட்டி ஒன்றில் பங்கேற்ற மிக இளம் வயது வீரர் அப்போது பீலேதான்.

> 'வெற்றி என்பது விபத்து அல்ல. அது கடின உழைப்பு', 'உலகில் எல்லாமே ஒருவகை விளையாட்டு தான்', 'வெற்றி கடினமாக இருந்தால்தான் அதனால் விளையும் மகிழ்ச்சி அதிகமாக இருக்கும்' என்றெல்லாம் பொன்மொழிகள் சொன்னவர் பீலே.

1958 உலகக் கோப்பை இறுதிப்போட் டியில் சுவீடனை 5-2 என வீழ்த்தி பிரேசில், முதல்முறையாக கோப்பையைக் கைப்பற் றியது. இறுதிப்போட்டியில் பீலே 2 கோல்கள் அடித்திருந்தார்.

1962 உலகக்கோப்பைப் போட்டியில் தொடை தசை கிழிந்த காயம் காரணமாக பீலே தொடர்ந்து ஆட முடியவில்லை. இரண்டாவது போட்டியிலேயே அவர் விலகிக் கொண்டார். ஆனால், பிரேசில் அணி இறுதிப் போட்டிக்குப் போகவும், வெற்றி பெறவும் பீலே மிகப்பெரிய உந்து சக்தியாக இருந்தார்.

இறுதிப்போட்டியில் பிரேசில் அணி, செக்கோஸ்லோவேகியாவை 3-1 என தோற்கடித்து உலகக் கோப் பையைத் தக்க வைத்துக் கொண்டது. உருகுவே, இத்தாலி அணிகளுக்குப் பிறகு அடுத்தடுத்து இரு முறை கோப் பையை வென்ற அணி என்ற பெருமையை பிரேசில் பெற்றது.

1966 உலகக் கோப்பைப் போட்டியில் பிரேசில் சோபிக்கவில்லை. ஆனால், 1970ஆண்டு மெக்சிகோவில் நடந்த உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், இத்தாலியை 4-1 என வீழ்த்தி பிரேசில் மூன்றாவது முறையாகக் கோப்பையை வென்று சாதனை படைத்தது. 3 முறை வென்றதால் ஜூல்ஸ் ரிமெட் (Jules Rimet) கோப்பை யைத் தானே வைத்துக் கொள்ளும் பெருமையையும் பிரேசில் பெற்றது. இப்படி பிரேசில் மூன்று முறை உலகக் கோப்பையை வெல்ல உறுதுணையாக இருந்த வர் பீலே.

1974ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் உலகக்கோப்பைப் போட்டி நடந்தபோது, பீலே, நல்ல உடல்தகுதியுடன்தான் இருந்தார். ஆனால், பிரேசில் நாட்டின் இராணுவ சர்வாதிகார ஆட்சியைக் கண்டித்து அவர் ஆடமறுத்து விட்டார். இதற்காக பிரேசில் இராணுவ ஆட்சியாளர்கள் பீலேவை மிரட்டிப் பணிய வைக்கப் பார்த்தனர். ஆனால், பீலே மசிந்து கொடுக்கவில்லை. கடைசிவரை தனது முடிவில் அவர் பிடிவாதமாக இருந்து விட்டார்.

'பிரேசில் நாட்டில் 1964ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அப்படியானால் 1966, 1970ஆம் ஆண்டு உலகக்கோப்பைப் போட்டிகளில் நீங்கள் பங்கேற்றது ஏன்? பிரேசில் நாட்டில் இராணுவ ஆட்சி இருப்பது அப்போது உங்களுக்குத் தெரியாதா?' என்ற கேள்வி பீலேவிடம் கேட்கப்பட்டது.

அப்போது, 'நான் உலகம் அறியாதவனாக இருந்தேன். நாட்டில் அப்போது என்ன நடந்து கொண்டிருந்தது என்பது எனக்குத் தெரியாது' என நேர்மையாகப் பதில் அளித்தார் பீலே.

பீலே பங்கேற்காத பிரேசில் அணி அந்த உலகக்கோப்பை போட்டியில் நான்காம் இடத்தைப் பிடித்தது.

தாய்நாடான பிரேசிலின் தேசிய அணிக்காக 92 போட்டிகளில் ஆடி 77 கோல்களை அடித்தவர் பீலே. சாண்டோஸ் அணிக்காக 659 போட்டி களில், 643 கோல்களை அடித்தவர் அவர். மொத் தமாக 1,363 போட்டிகளில் பீலே அடித்த கோல்கள் 1,279. இது உலகசாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பிடித்துள்ளது. 93 முறை ஹட்ரிக் கோல்களை அடித்து சாதனை புரிந்தவர் பீலே.

பீலே, 100 மீற்றர் தொலைவை 11 நொடிகளில் ஓடிக்கடக்கக்கூடியவர். ஆறடி உயரம் வரை அவரால் ஓங்கல் (டால்பின்) போலதுள்ள முடியும். அந்தரத்தில் பாய்ந்து வரும் பந்தைதலையால் எதிர்கொள்ள எப்போதும் முதல் ஆளாக துள்ளுவார் பீலே. காரணம், மற்றவர்களை சற்று அதிகநேரம் அவரால் அந்தரத்தில் நிற்க முடியும்.

நவம்பர் 19ஆம் திகதி, 'பீலே நாள்' என சாண்டோஸ் அணியினரால் கொண்டாடப்படுவது வழக்கம். 1969ஆம் ஆண்டு அந்த நாளில் தான் தனது ஆயிரமாவது கோலை அடித்தார் பீலே. அந்த கோலை அடித்தபோது, அவரைப் பாராட்ட ஆடுகளத்துக்குள் பலநூறு ரசிகர்கள் புகுந்தததால் ஆட்டம் மீண்டும் தொடங்க அரைமணி நேரத்துக்கும் மேலாகியது.

'வெற்றி என்பது விபத்து அல்ல. அது கடின உழைப்பு', 'உலகில் எல்லாமே ஒருவகை விளையாட்டுதான்', 'வெற்றி கடினமாக இருந்தால்தான் அதனால் விளை யும் மகிழ்ச்சி அதிகமாக இருக்கும்' என்றெல்லாம் பொன்மொழிகள் சொன்னவர் பீலே.

'நான் நிரந்தரமானவன் அழிவ தில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்ற கவியரசரின் வரியைப்போல, 'பீலே ஒரு போதும் இறக்க மாட்டான்' என்றும் பீலே கூறிவந்திருக்கிறார்.

'எனது 80 ஆண்டு வரலாற்றில் நான் செய்யாத ஒன்றே ஒன்று நிலவில் உதைபந்தாட்டம் ஆடாததுதான்' என்பதுகூட பீலே உதிர்ந்த பொன்மொழிதான்.

ஒருவேளை இப்போது அவர் நிலவில் உதைபந்தாட்டம்விளையாட போய்விட்டாரோ என்னவோ?



## 2மாதங்களில்....

கட்சி மாநாட்டில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?" என்று தெற்கு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நீண்டகாலப் பிரச்னையை இரண்டு மாதங்களுக்குள் தீர்க்க முடியுமா? இது பொய் என்று விளங்கவில்லையா? இது சர்வதேசத்தை ஏமாற்றும் செயல்.

உண்மையில் அரசியல் தீர்வை முன்வைப்பதென்றால் புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதனூடாகத்தான் தீர்க்க முடியும்.

உண்மையில் இதைச் செய்வதற்கான வாய்ப்பு 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ரணிலுக்கு இருந்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் நாடாளுமன்றில் இருந்தது. அப்போது செய்யாமல் இப்போது இரண்டு மாதங்களுக்குள் செய்யப் போகின்றேன் என்பதை நம்ப முடியுமா?

அடுத்த சர்வகட்சிக் கூட்டம் இருப்பது ஜனவரி நடுப்பகுதியில். அது முடிந்து பெப்ரவரி நடுப்பகுதியில் எப்படித் தீர்வை வழங்குவது?" - என்று அவர் கேள்வி எழுப்பினார். (அ)

## கொழும்பு....

தியாகி திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு நீதிமன்ற தடையை மீறி திலீபனின் நினைவுதினத்தை அனுஷ்டித்த குற்றச்சாட்டின் கீழ் எம்.கே.சிவாஜிலிங்கம் கோண்டாவில் பகுதியில் அன்னங்கை ஒழுங்கையில் வைத்து 2020 செப்ரெம்பர் 15ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற தடையுத்தரவை மீறியமை மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினரை நினைவு கூர்ந்தமை உள்ளிட்ட குற்றசாட்டின் கீழ் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட எம்.கே. சிவாஜிலிங்கத்தை மன்று எச்சரித்து 2 இலட்ச ரூபாய் கொண்ட சரீரப் பிணையில் விடுவித்திருந்தது.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார். வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரி வித்தபோதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டித்தமை தொடர்பாக கைது செய்து 24 மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தை வழக்கில் புகுத்தக்கூடிய வகையிலே பொலிஸார் முயற்சிகள் எடுத்ததை நான் அறிந்தேன்.

பின்னர் சாதாரண சட்டத்தின் கீழ் நான் முன்னிலைப்படுத்தப்பட்டேன் எது எப்படி இருந்தாலும் கடந்த ஆண்டு நடைபெற்ற விசாரணையின்போது பயங்கரவாத சட்டத்தின் கீழ் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்ய யோசித்து இருக்கின்றோம். சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இதன் கோவை அனுப்பப்பட்டு இருக்கின்றது என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த அடிப்படையில் நேற்று எனது வீட்டிற்கு வந்த பொலிஸார் எனக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிமன்ற கட்டளையை வழங்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செயலுக்காக யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் இருக்கத்தக்கதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நோக்கம் என்ன? பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்தார்களா அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒத்ததாக புலிகளின் மீளுருவாக்கம் போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தப்பட்டிருக்கிறதா என்பது குற்றப்பத்திரிகை வழங்கிய பின்னரே தெரியும். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என கூறப்படும் போது இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.(அ)

## ஓய்வுநிலை....

இறுதிக்காலத்தை கழித்திருந்தார்.

கத்தோலிக்க திருச்சபையை எட்டு ஆண்டுகளுக்கும் குறைவாக வழிநடத்திய அவர், *2013 இல் தனது பதவியை இராஜினாமா செய்ததுடன், 1415 இல் போப்பாண்டவர் 12ஆம் கிறகெரிக்கு பின்னர் இராஜினாமா* செய்த முதல் பாப்பரசராக அறியப்படுகிறார். (அ)

## ராஜபக்ஷக்களை....

அவர் மேலும் தெரிவிக்கையில், கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்திருந்தால் இந்த நாடு மோசமான நிலைக்குச் சென்றிருக்காது.

ராஜபக்ஷக்கள் தங்கள் குடும்ப ஆட்சியில் மாத்திரம் கவனம் செலுத்தியதன் விளைவாகவே இந்த நாடு படுமோசமாக வீழ்ச்சியடைந்தது. இறுதியில் ராஜபக்ஷக்களும் ஆட்சிப்பீடத்திலிருந்து மக்களின் எழுச்சியால் தூக்கி வீசப்பட்டார்கள்.

நாட்டைப் படுவீழ்ச்சியடையச் செய்த ராஜபக்ஷக்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. ராஜபக்ஷக்களின் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் எமது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனிமேல் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூட்டணி அமைக்காது - என்றார். (அ)

## இளைஞர்களின்....

சிரமங்கள், நிச்சயமற்ற சூழ்நிலைகள், ஏமாற் றங்களுடனான ஒரு வருடத்தை முடித்துக்கொண்டு, நாம் 2023 எனும் புதிய ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றோம்.

முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய சுமை மற்றும் நம்மில் பெரும்பாலானோர் சந்தித்த பின்னடைவு ஆகியவற்றை நான் நன்கு அறிவேன். எனினும், நாம் ஏற்கனவே நெருக்கடியான நிலையைக் கடந்துவிட்டதாக கருதுகின்றேன். 2023 புதிய ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறிக்கும் ஒரு தீர்க்கமான ஆண்டாக இருக்கும்.

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனினும் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்த ஏனைய நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை நாம் இன்னும் அடையத் தவறிவிட்டோம். நாட்டில் உள்ள பெரும்பான்மையான இளைஞர்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையில் மாற்றம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது.

எதிர்வரும் தசாப்தத்திற்குள் வளமான இலங்கையை கட்டியெழுப்ப உத்தேசித்துள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை நாம் அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வேலைத்திட்டத்தில் நாட்டை முன்னிலைப்படுத்தி, அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வரும் தீர்க்கமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து இலங்கை மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய நம்பிக்கைகளுடன் நாட்டிற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து, வளமான இலங்கைக்கான கதவுகளைத் திறக்கும் வெற்றிகரமான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமைய வேண்டுமென பிரார்த்திப்பதுடன் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# யாழ்.மாநகரில் வாகனங்களின் தரிப்பிடக் கட்டணம் இல்லை

### பதவி விலகிச்செல்லும் முதல்வர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் வாகனம் நிறுத்துவதற்கு குத்தகை அறவிடும் ஒப்பந்தம் உடனடியாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

நேற்று பதவிவிலகிச் சென்ற யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், உடனடியாக அமுலாகும் வகையில், தனியார் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை இரத்து செய்தார்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட 11 இடங்களில் வீதிகளில் வாகனம் நிறுத்துபவர்களிடம் கட்டணம் அறிவிட, தனியார் நிறுவனம் ஒன்றுக்கு யாழ். மாநகரசபை ஒப்பந்தம் வழங்கியிருந்தது.

இது பலத்த விமர்சனங்களையும், சர்ச்சைகளையும் தோற்றுவித்திருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்பாக வாகனம் நிறுத்துபவர்களுடன், குத்தகை ஒப்பந்தம் பெற்ற தனியார் நிறுவனத்தினர் சர்ச்சையில் ஈடுபடும் சம்பவங்கள் பதிவாகின.

இந்த நிலையில், நேற்று ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த குத்தகை அறிவிடுபவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளரை தாக்கியுள்ளனர்.

ஸ்ரான்லி வீதியில் வாகனத்தை நிறுத்தி விட்டு வர்த்தக நிலையத்திற்குச் சென்ற ஒருவரின் பின்னால் சென்ற குத்தகை அறிவிடுபவர்கள், வர்த்தக நிலையத்திற்குள் வைத்து அவருக்கு பற்றுச்சீட்டு வழங்கியுள்ளனர்.

எனினும், வர்த்தக நிலையத்திலிருந்து வெளியில் வந்த பின்னரே பணம் தருவேன் என அவர் கூறியுள்ளார்.

இதனால் இரு தரப்பிற்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. இரு தரப்பையும் வர்த்தக நிலையத்திற்கு வெளியில் சென்று தர்க்கப்படுமாறு வர்த்தக நிலைய உரிமையாளர் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குத்தகை அறிவிடுபவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளரை தாக்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்த யாழ். மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்து, உடன் அமுலாகும் வகையில் மாநகர சபை பகுதியில் குத்தகை அறவிடும் ஒப்பந்தத்தை உடனடியாக இரத்து செய்தார். (அ)

# யாழில் பெற்றோல் குண்டு வீச்சு நடத்தி வன்முறைக்குழு வாள்களுடன் அடாவடி

யாழ்ப்பாணம், ஜன. 01

அச்சுவேலி பாரதி வீதியிலுள்ள வீடொன்றின் மீதும், அச்சுவேலி தென் மூலையிலுள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தின் மீதும் வன்முறை கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

அச்சுவேலிப் பொலிஸார் இந்த தகவலை தெரிவித்தனர்.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் வாள்கள் சகிதம் இந்த தாக்குதல்களை சில மணி நேரத்துக்குள் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தனிமையிலிருந்த மூதாட்டியின் வீட்டுக் கண்ணாடிகளை அவர்கள் அடித்து உடைத்து, படலையையும் கொத்தி சேதப்படுத்தி, பெற்றோல் குண்டையும் வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

அந்த குழு, மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்துக்குள் புகுந்து, அங்கு நின்ற மோட்டார் சைக்கிள் ஒன்றையும் வாள்களால் கொத்தி சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. (அ)

## உள்ளூராட்சி....

வழங்குவதுதான்.

தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு விருப்பதைத் தெரிவிக்கவும் இல்லை. எதிர்ப்பைத் தெரிவிக்கவும் இல்லை. நாட்டின் பொருளாதார நிலைமையை அரசு மக்களுக்கு விளக்கிக் கூறியுள்ளது.

மக்கள் எப்படிப்பட்ட பொருளாதார சிக்கலில் உள்ளார்கள் என்பதை எல்லோரும் அறிவோம். இருந்தும், பணம் இல்லை, தேர்தலை நடத்தமாட்டோம் என்று அரசு சொல்லவில்லை. தேர்தலுக்காக அரசு ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கி வைத்துள்ளது - என்றார். (அ)

## பேராசிரியர்....

நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது.

*2023 புது வருடத்தை வரவேற்கும் முகமாக நடைபெறும் இந்த நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமானது.*

இந்த நிகழ்வில், டான் தொலைக் காட்சி குழுமம் ஒவ்வோர் ஆண்டும் வழங்கும் சாதனை தமிழன் விருது யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்றுத்துறை பேராசிரியருமான சி. பத்மநாதனுக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் தமிழரின் வரலாற்று தொன்மையை ஆதாரபூர்வமான தகவல்களுடன் நிரூபித்தமையை கௌரவிக்கும் முகமாகவே இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா ஆகியோர் இணைந்து இந்த விருதை வழங்கினார்கள். (அ)

# மின் கட்டணம் குறித்த பிரேரணை நாளை அமைச்சரவையில் சமர்ப்பிப்பு!



கொழும்பு, ஜன. 01

ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணங்கள் தொடர்பான பிரேரணை நாளை திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை ஜனவரி மாதம் குறித்த சட்டமூலத்தில் புதிய கட்டணம் சேர்க்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# அமைச்சுப் பதவி கிடைக்காதமையால் அதிருப்தியில் மொட்டு உறுப்பினர்கள்!

## ஜனாதிபதி வேண்டுமென்றே செய்கிறார் என விசனம்

கொழும்பு, ஜன. 01

**ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை மாத்திரம் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைத்தபோதிலும் பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறித்து அந்தக் கட்சியினரின் அதிருப்தி அதிகரித்துள்ளதாக அரசியல் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அமைச்சரவையில் மாற்றங்களை செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியபோதிலும் நாளுக்கு நாள் அது ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி வேண்டும் என்றே இதனை செய்து வருகிறார் என பொதுஜன பெரமுனவின் மூத்த மற்றும் கனிஷ்ட உறுப்பினர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர் என தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி, பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதாக ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதி அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருந்து வருவதாக மொட்டுக் கட்சியினர் கூறியுள்ளனர்.

அத்துடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள புதிய அமைச்சர்கள் மூலம் தமது பிரதேசங்களுக்கு எந்த வேலைகளையும் செய்ய முடியாமல் இருப்பதால், மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவான நளின் பெர்னாண்டோ போன்ற நபர்களுக்கு நேரடியாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகளை வழங்கி, மொட்டுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை புறந்தள்ளி இருப்பது அவமதிக்கும் செயல் எனக் கூறியுள்ள மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர், "எமக்கு தற்போது அமைச்சுப் பதவி இருந்தாலும் பரவாயில்லை, இல்லாவிட்டாலும் பரவாயில்லை" என்று கூறும் அளவுக்கு கட்சிக்குள் நெருக்கடி உக்கிரமடைந்திருப்பதாக மொட்டுக்கட்சியின் தகவல்கள் கூறுகின்றன. (அ)

# யாழ். மாநகர சபைக்கான மேயர் தேர்வு இனி இல்லை!

யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ். மாநகர சபைக்கு மேயர் தேர்வு இனி இடம்பெறாது என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தனது பதவியை நேற்று சனிக்கிழமை இரவு முதல் இராஜினாமா செய்துள்ளதாக கடிதம் மூலம் யாழ். மாநகர ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் யாழ். மாநகர சபையின் அடுத்த கட்டம் தொடர்பாக கேள்வியெழுப்பியபோது அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி இனி மேயர் தெரிவை மேற்கொள்ள முடியாது. சபையை கலைப்பது தொடர்பாக நான் தீர்மானிக்க முடியாது. அது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும்.

கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ள நிலையில் இன்னமும் அங்கும் பதில் கிடைக்கவில்லை - என்றார். (அ)

# 384 நிறுவனங்களிடமிருந்து மருந்து வகைகள் கொள்வனவை நிறுத்திய சுகாதார அமைச்சு!

கொழும்பு, ஜன. 01

பல்வேறு முறைகேடுகள் காரணமாக 384 நிறுவனங்களிடமிருந்து மருந்துக் கொள்வனவுகளை சுகாதார அமைச்சு இடைநிறுத்தியுள்ளது.

தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபை, அரச மருந்து ஒழுங்குமுறை கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ வழங்கல் திணைக்களம் ஆகியவற்றின் பரிந்துரையின் பேரில், இந்நிறுவனங்களிடமிருந்து மருந்து கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த இடைநிறுத்தம் 2015 ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை செய்யப்பட்டது.

மருந்துகளை இறக்குமதி செய்யும்போது பணம் செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் மருந்துகள் சரியான தரம் இல்லாததால் சுமார் 200 மருந்துகளின் சேவையை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இடைநிறுத்தியுள்ளன. (அ)

# அரச நிறுவனங்களின் செலவினம் நிறுத்தம்

கொழும்பு, ஜன. 01

அரச நிறுவனங்களின் பல்வேறு நிகழ்வுகளுக்கான செலவினங்களை இடைநிறுத்துவது தொடர்பான புதிய சுற்றறிக்கையை நிதியமைச்சு வெளியிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான செலவினங்களை அங்கீகரிக்கும் மற்றும் பொதுச் செலவினங்களை நிர்வகித்தல் என்ற தலைப்பில் இந்த புதிய சுற்றறிக்கையை நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன வெளியிட்டுள்ளார்.

அதன்படி, வருடாந்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டு வரம்புகள் அடுத்த வருடத்திற்கு மிகையாகாத வகையில் செலவுகளை நிர்வகிப்பது அதிகாரிகளின் பொறுப்பு என வலுவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக, 2023 ஆம் ஆண்டு அரசாங்க செலவினங்கள் முன்னெப்போதையும் விட மிகவும் கவனமாக செய்யப்பட வேண்டும் மற்றும் பல்வேறு நிகழ்வுகளுக்கான செலவினங்களை இடைநிறுத்துவதற்கு அரசாங்க நிறுவனங்கள் வழங்கிய சுற்றறிக்கை விதிகளை கண்டிப்பாக பின்பற்றவேண்டும் என்று புதிய சுற்றறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# விருந்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு, ஜன. 01

உடுகம பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மதுபான விருந்து ஒன்றின் போது ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறி சென்றதையடுத்து விருந்துக்கு வந்த நபரொருவரால் விருந்து இடம்பெற்ற வீட்டின் உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாகியாதெனிய பிரதேசத்தை சேர்ந்த 78 வயதான ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலவசமாக போதைப்பொருளை வழங்கி இலங்கையை அழிப்பதற்கு சதித் திட்டம்!

## அச்சம் வெளியிடுகிறார் அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஜன. 01

போதைப் பொருளை இலவசமாக வழங்கி இலங்கையை சர்வதேச ரீதியில் அழிக்கும் சதித்திட்டத்தில் ஏதோ ஒரு குழு ஈடுபட்டுள்ளதோ என்ற சந்தேகம் தமக்கு இருப்பதாக நீதி,சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் வெளியிடும் இந்த சர்ச்சைக்குரிய விடயம் சம்பந்தமாக எப்போதும் அவதானமாக இருக்குமாறு பாதுகாப்பு தரப்பினர் மற்றும் ஊடகவியலாளர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

போதைப் பொருளால் இலங்கை அழிக்கும் சதித்திட்டம் இருப்பதாக நான் கூறுவதை நிரூபிக்க என்னிடம் தற்போது ஆதாரங்கள் இல்லை என்றாலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இது குறித்து கவனம் செலுத்தவில்லை என்றால் எதிர்காலத்தில் இலங்கை பாரதூரமான சம்பவங்களை எதிர்நோக்க நேரிடும்.



இப்படியான சதித்திட்டத்தில் ஈடுபடுவோர் ஹெய்ட்டி நாட்டுக்கு பியரை வழங்கி அந்நாட்டு மக்களின் ஆயுளை 30 ஆக குறைத்து, நாட்டின் வளங்களை சுரண்டினர்.

பியர் அருந்துவதன் மூலம் 30 ஆண்டுகள் வரை வாழ முடிந்தபோதிலும் போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவரின் ஆயுள் காலம் இரண்டு ஆண்டுகள் மாத்திரமே.

சில பொலிஸார் மற்றும் சில அரசியல்வாதிகள் போதைப் பொருள் வியாபாரத்திற்கு உதவி வருகின்றனர். இதனால், அதனை ஒடுக்குவதில் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்படியான சம்பவங்களுடன் தொடர்பில்லாத பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் போதைப் பொருள் வியாபாரத்தை ஒடுக்க மேற்கொண்டு வரும் வேலைத் திட்டம் சம்பந்தமாக அவர்களுக்கு கௌரவத்தை பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 2022 கடந்து வந்த பாதை!



தொகுப்பு
க.ஆ.கோகிலவாணி
■ உதவி- ஆர்.இரவிவர்மன்

## ஜனவரி மாதம்

**01.01.2022**
ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் கல்வி இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

**05.01.2022**



பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு தெமட்டகொடையில் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் தீப்பந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**06.01.2022**
திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் நிதியமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

**07.01.2022**
நாடளாவிய ரீதியில் 12,15 வயதுடைய சிறுவர்களுக்கு கொட்விட் 19 தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**09.01.2022**
கொழும்பு துறைமுக நகரில் நிர்மாணிக்கப்பட்ட மரீனா நடைபாதையும் மற்றும் இலகுரக படகு முற்றமும் திறந்து வைக்கப்பட்டன.

**10.01.2022**
தமிழ் மக்கள் கூட்டணி அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டதான அறிவிப்பை தேர்தல் ஆணைக் குழு அறிவித்தது.

**11.01.2022**
மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக் காலத்தை 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதிவரை நீடித்தார்.
வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக உள்ள கத்தோலிக்க தேவாலய வளாகத்திலிருந்து கைக்குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.
சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் தொடர்பான கடன் சான்றுப்பத்திரத்துக்குரிய 6.0 மில்லியன் டொலர்கள் இலங்கையினால் செலுத்தப்பட்டதையடுத்து சீனாவினால் அதன் கறுப்புப்பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டது.

**12.01.2022**
வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றதாக கூறப்படும் சமூகப் படுகொலைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட மெகஸின் சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் லமாஹேவகே எமில் ரஞ்சனுக் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
கொழும்பு துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தியின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**14.01.2022**
உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம்பெற்று 1000 ஆவது நாள் நிறைவு நிகழ்வு தேவத்தை தேசிய பசிலிக் காவில் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமை யில் நடைபெற்றது.

**17.01.2022**
13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரி தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து தயாரித்த ஆவணத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிப்பதற்காக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கையளிக்கப்பட்டது.

**24.01.2022**
நாடு தழுவிய ரீதியிலான மின்வெட்டு ஆரம்பமானது.

**25.01.2022**
தமிழீழ விடுதலை புலிகளின் ஊடகப்பேச்சாளராக செயற்பட்ட தயாமாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிதிக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கி வவுனியா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**26.01.2022**
மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி.பர்டினாண்டோ பதவி விலகினார்.

**31.01.2022**
கம்பஹா மாவட்டம், கலகெடிஹேன பிரதேசத்தில் வைத்து. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவின் வாகனம் மீது அழுகிய முட்டைகள் மற்றும் கற்களை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

## பெப்ரவரி மாதம்

**01.02.2022**
இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து மீனவர் இருவரின் உயிரிழப்புக்கு நீதி கோரியும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

**02.02.2022**




களனி பல்கலைக்கழகம், ராகம வைத்திய பீடத்தின் ஆண் மாணவர்கள் தங்கும் விடுதிக்குள் அத்துமீறி புகுந்த குழு நடத்திய தாக்குதலில் 4 மாணவர்கள் உள்ளிட்ட ஐவர் காயமடைந்தனர்.
இந்தியாவிலிருந்து எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்காக 500 மில்லியன் டொலர் கடன் வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குமாறு கோரி கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவில் ஆரம்பமானது.

**03.02.2022**
களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்கள் தாக்கப்பட்ட விவகாரம் காரணமாக முன்னாள் அமைச்சர் அருந்திக்க பதவி விலகினார்.
இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிரான பருத்தித்துறை மீனவர்களின் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்தது.

**11.02.2022**
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இருந்த வவுனியா வளாகம் 'வவுனியா பல்கலைக்கழகம்" என்ற பெயரில் தேசிய பல்கலைக்கழகமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

**12.02.2022**
ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
சமூக செயற்பாட்டாளரான ஷெஹான் மாலக கமகே கொழும்பு குற்றப்புலனாய்வ பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

**18.02.2022**
உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் வழக்கு தொடரப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோர் அவர்களுக்கு எதிரான வழக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

**22.02.2023**
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மற்றும் ஆணைக்குழுக்கு அளிக்கப்பட்ட சாட்சியம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

**24.02.2022**
வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

**25.02.2022**
பொறுப்புக்கூறலை தவிர்க்கிறது அரசாங்கம் என்று கடும் விசனத்துடன் இலங்கை குறித்த அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் பச்லெட் வெளியிட்டார்.

## மார்ச்

**03.03.2022**
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகித்த உதய கம்மன் பில, விமல் வீரவன்ச ஆகி யோர் அமைச்சுக்களிலிருந்து நீக்கப்பட்டனர்.

**07.03.2022**
ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தின் மீது முட்டை வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

**09.03.2023**
தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

**18.03.2022**
எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிற்பது தீவிர நிலைமையை அடைந்தது.
மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி ஜே.வி.பியின் சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.



**15.03.2022**
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தது. ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் சவப்பெட்டியும் எரிக்கப்பட்டது.

**20.03.2022**
கண்டி, கடவத்தை ஆகிய பிரதேசங்களில் வரிசையில் காத்திருந்த இருவர் உயிரிழந்தனர்.

**21.03.2022**
நிட்டம்புவ பிரதேசத்தில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். அதேபோன்று எரிபொருள் வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் மரணமடைந்தார். எரிபொருள் வரிசைக்கான மூன்றாவது மரணமாக இந்த மரணம் பதிவானது.

**23.03.2022**
சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. இந்த மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் புறக்கணித்தன. இந்த மாநாட்டில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்துக்கள் பேசுபொருளானது.

**25.03.2022**
பிரகாசமான எதிர்காலம் மற்றும் தேசிய ஒற்றுமை எனும் தொனிப்பொருளில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அக்கட்சியின் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் சத்தியாக்கிர போராட்டத்தை நடத்தினர்.

(மறுபக்கம் பார்க்க...)

# 2022 கடந்து வந்த பாதை!

**28.03.2022**
பலதுறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி மாநாடு ஆரம்பமாகி இரு தினங்கள் இடம்பெற்றன.

**29.03.2022**
இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளில் கலப்பு மின்சக்தி திட்டங்களை இந்திய உதவியின் கீழ் முன்னெடுப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை உட்பட ஆறு ஒப்பந்தங்களில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன.
ஜனவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 28 ஆம் திகதி வரையான இரு மாத காலத்துக்குள் இலங்கை மத்திய வங்கி 216470 மில்லியன் ரூபாயை அச்சிட்டதாக முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

**31.03.2022**



எரிபொருள் தட்டுப்பாடு, மின்துண்டிப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நுகேகொடை பொலிஸ் வலயத்துக்கு உட்பட்ட மிரிஹான பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு அருகில் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் ஆர்ப்பாட்டமானது குறிப்பிட்ட நேரத்தில் கலவரமாக மாறியது.
கொழும்பு மாவட்டம் முழுவதும் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.
தாக்குதல்களில் 39 சிவிலியன்கள், 4 ஊடகவியலாளர்கள், கடும் காயமடைந்தனர். இரு பஸ் வண்டிகள் பொலிஸ் ஜீப், 2 மோட்டார் சைக்கிள்கள், 2 முச்சக்கர வண்டிகள் தீக்கிரையாகின.
ஆர்ப்பாட்டம் வன்முறைகள் தொடர்பில் 53 பேரை பொலிஸார் கைதுசெய்தனர். இந்த சம்பவம் தொடர்பில் 3 விசேட பிரிவுகள் ஊடாக விசாரணைகள் ஆரம்பமாகின.
அமைச்சரவை அமைச்சர்கள் கூட்டாகப் பதவி விலகினர்.
அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது.
மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பிரேம லால் ஜயசேகர உட்பட மூவரை, அவர்களுக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



## ஏப்ரல்

**02.04.2022**
ஊரடங்குசட்டத்துக்கு மத்தியிலும் எதிர்க்கட்சி சுதந்திர சதுக்கம் நோக்கி .
இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கான கருத்தாடல்கள் ஆரம்பம்.
சமூக வலைத்தளங்கள் முழுமையாக முடக்கப்பட்டன.

**04.04.2022**
4 அமைச்சர்கள் கொண்ட இடைக்கால அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபயவால் அமைப்பு.
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமா.

**05.04.2022**
பொதுஜன பெரமுனவின் 42 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயேச்சையாக செயல்படுவதாக அறிவித்தனர்.
பிரதமர் மகிந்தவின் விஜயராம இல்லம் முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம்

**09.04.2022**
நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்த கொழும்பு காலிமுகத்திடலில் கோட்டா கோ கம ஆரம்பமானது.



**12.04.2022**
இடைக்கால அரசாங்கம் குறித்த பேச்சுக்களில் பங்கேற்கமாட்டோம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு
சர்வதேச கடன் மீள்செலுத்துகை தற்காலிகமாக இடைநிறுத்தம்.

**18.04.2022**
சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்காக இலங்கை குழு வாஷிங்டனுக்கு சென்றது.

**18.04.2022**
பிரதமராக மகிந்த ராஜபக்ஷ தலைமையில்19 பேர் கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது.
எரிபொருள் விலைகளை ஐந்தாவது தடவையாக ஐ.ஓ.சி அதிகரித்தது.

**19.04.2022**
எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து கேகாலை ரம்புக்கனையில் போராட்டம் வெடித்தது. பொலிஸார் சுட்டதில் ஒருவர் பலி. போராட்டம் பல நகர்களுக்கும் பரவியது




**22.04.2022**
கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை 61 பேருடன் வத்திக்கான் சென்றார்.

**24.04.2022**
காலிமுகத்திடலுக்கு செல்வதற்கு பொலிஸார் இரும்புத் தடை: பிரதமர் இல்லம் முற்றுகை.
21ஆவது திருத்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

**25.04.2022**
இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம்.

**26.04.2022**
அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் கண்டியிலிருந்து கொழும்புக்கான பாதயாத்திரையை ஆரம்பித்தது.
21ஆவது திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி
மைனா கோ கம போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

**28.04.2022**
ஆயிரத்துக்கும் அதிக தொழிற்சங்கங்கள் நாடு முழுவதும் பகிஷ்கரிப்பை முன்னெடுத்தன.

## மே மாதம்

**02.05.2022**
காலிமுகத்திடலில் பொலிஸார் கூடாரங்களை அகற்றுவதற்கு முயற்சி

**03.05.2022**
பெரும் புள்ளிகளின் மோசடிகள் தொடர்பில் 500க்கும் மேற்பட்ட ஆவணங்களை ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார வெளியிட்டார்.
ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க்கட்சி தலைவர் சபாநாயகரிடம் வழங்கினார்.

**04.05.2022**
மைனா கோ கம போராட்ட கூடாரங்களை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது.
ஜனாதிபதியை பதவி விலகுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம்.
பிரதி சபாநாயகராக மீண்டும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவானார்

**06.05.2022**
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் ஹர்த்தால்.
அவசரகால சட்டம் மீண்டும் அமுல்.
அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற வளாக சூழலில் உள்ளாடைப் போராட்டம்.
பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறித்த பதவியிலிருந்து மீண்டும் விலகினார்.
தியத்த உயன ஆர்ப்பாட்டத்தின் மீது கண்ணீர் புகை பிரயோகம்.

**08.05.2022**
முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்வின் அநுராதபுர விஜயத்துக்கு மக்கள் எதிர்ப்பு
சகல கட்சிகளையும் இணைத்து சர்வகட்சி அரசாங்கம் அமைக் நான்கு பௌத்த மகா பீடங்களும் கூட்டாக வலியுறுத்தின.

**09.05.2022**
கலவர பூமியானது காலிமுகத்திடல்: கோட்டா கோ கம மைனா கோ கம போராட்டங்களின் மீது ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் தாக்குதல்.
பிரமதர் மகிந்த ராஜபக்ஷ உட்பட முழு அமைச்சரவையும் பதவி விலகல்.
ஆளுங்கட்சி பிரமுகர்களின் வீடுகள் மீது மக்கள் தாக்குதல் மேற்கொண்டனர். பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.
டி.ஏ.ராஜபக்ஷ ஞாபகார்த்த சின்னம் தரைமட்டமானது.
பொலன்னறுவை மாட்ட எம்.பி அமரகீர்த்தி அத்துக்கோரளவும் அவரின் மெய்ப்பாதுகாவலரும் ஆர்ப்பாட்டக்காரரால் கொலை.
வன்முறைகளில் 09 பேர் உயிரிழந்தனர்: 88 வாகனங்கள், 103 வீடுகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன. 250 பேர் காயமடைந்தனர். சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போர் மீது துபாக்கிச்சூடு நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**10.05.2022**
மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

**11.05.2022**
19ஆவது திருத்தத்தை மீள கொண்டுவருவதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்தார்.
பாதுகாப்புக் கருதி திருமலை கடற்படை முகாமில் மகிந்த தங்கியுள்ளார் என்று அறிவிப்பு.
ஐ.தே. க. தலைவர் ரணில் ஜனாதிபதி கோட்டாபய சந்திப்பு

**12.05.2022**
இலங்கையின் 26ஆவது பிரதமராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

**13.05.2022**
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கடமைகளை பிரதமர் அலுவலகத்தில் உத்தியோகப்பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

**15.05.2022**
காலிமுகத்திடல் போராட்டங்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்.

**17.05.2022**
ஜனாதிபதி மீதான அதிருப்தி பிரேரணைக்கான வாக்கெடுப்பு தோல்வி கண்டது.

**18.05.2022**
தமிழ் இனப் படுகொலை நாளானா முள்ளிவாய்க்கால் 13ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் கோட்டா கோ கமவிலும் அனுஷ்டிப்பு.
போராட்டங்களால் தலைமறைவாகியிருந்த முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அவரது மகன் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றனர்.

**19.05.2022**
தமிழினப்படுகொலை நினைவு நாளாக மே 18ஐ பிரகடனப்படுத்தும் தீர்மானம் கனேடிய பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**20.05.2022**
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது
மிரிஹானை ஆர்ப்பாட்டம் ஆரம்பம்

**22.05.2022**
தமிழகத்தின் மனிதாபிமான உதவி பொருட்கள் இலங்கை வந்தன.

**23.05.2022**
21ஆவது திருத்தச் சட்டமூல வரைவு அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்டது.
மேலும் 8 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

**26.05.2022**
கோட்டா கோ கம போராட்ட களம்மீதான தாக்குதல் தொடர்பில் மகிந்தவிடம் விசாரணை.

**27.05.2022**
விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்கு இரண்டு வருட கடூழிய சிறைதண்டனை .

(மறு பக்கம் பார்க்க...)

# 2022 கடந்து வந்த பாதை!

## மே மாதம்

**30.05.2022**
சிறுமி ஆயிஷாவின் படுகொலை விசாரணைகள் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டன.
**31.05.2022**
துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியளித்த பொது மன்னிப்பை உயர்நீதிமன்றம் இடைநிறுத்தியது.

## ஜூன்

**01.06.2022**
24ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே நியமனம்.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.
**05.06.2022**
தோல்வியடைந்த ஜனாதிபதியாக தான் பதவியை விட்டு செல்ல போவதில்லை என்று கோட்டாபய தெரிவித்தார்.
ரஷ்யாவின் எரோபுளொட் மீதான தடை நீக்கம்.
**07.05.2022**
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சிறை.
**08.09.2022**
பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க அறிவித்தார்.
**09.06.2022**
நிதி அமைச்சர் பதவியிலிருந்து பஸில் விலகல்.
**10.06.2022**
தம்மிக பெரேரா பாராளுமன்ற உறுப்பினரானார்.
**12.06.2022**
குருந்தூர் மலையில் புத்தர் சிலை நிறுவும் முயற்சி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் நிறுத்தப்பட்டது.
**14.06.2022**
அரச உத்தியோகத்தர்களுக்கு மூன்று மாதங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.
**20.06.2022**
ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷவுக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்துக்கு நுழைவாயிலில் போராட்டம்.
21ஆவது திருத்த வரைபுக்கு அமைச்சரவை அங்கீகாரம்.
**27.06.2022**
டோக்கன் முறையில் எரிபொருள் வழங்கல் ஆரம்பம்.
**29.06.2022**
கந்தக்காடு போதை புனர்வாழ்வு முகாமிலிருந்து 600 பேர் தப்பியோடினர்.

## ஜூலை

**01.07.2022**
எரிபொருள் தட்டுப்பாடு தீவிரம். பாடசாலைகளுக்கு விடுமுறை.
**09.07.2022**
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு தீ வைக்கப்பட்டது.
**12.07.2022**
பஸில் வெளிநாடு செல்லும் முயற்சி விமான நிலையங்களில் தடை
**13.07.2022**
மக்கள் போராட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய மாலைதீவு சென்றார்.
பிரதமர் அலுவலகம் போராட்டக்காரர்களால் கைப் பற்றப்பட்டது.
பதில் ஜனாதிபதியாக ரணில் அறிவிக்கப்பட்டார்.
**14.07.2022**
கோட்டாபய பதவி விலகல். -மாலைத்தீவிலிருந்து சிங்கப்பூர் சென்றார்.
போராட்டக்காரர்கள் தாம் கைப்பற்றிய ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகைளை மீளக் கையளித்தனர்.
ஜனாதிபதி தெரிவுக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித், டலஸ் அழகபெரும, அனுரகுமார திசாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் போட்டியிட முன்வந்தனர்.
**19.07.2022**
ஜனாதிபதி தெரிவுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகபெரும, அனுரகுமார திசாநாயக்க ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.
**20.07.2022**
நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானார்.
**22.07.2022**
கொழும்பு ஜனாதிபதி செயலக வளாகத்தில் பல நாட்களாக போராட்டம் நடத்தியவர்கள் படையினரால் அடித்து விரட்டப்பட்டனர்.
புதிய பிரதமராக தினேஷ் குணவர்த்தன நியமனம்.
**24.07.2022**
கோட்டாபயவை கைது செய்யுமாறு சிங்கப்பூர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
**25.07.2022**
சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுகள் ஆரம்பமாகின.
**26.07.2022**
தேசிய எரிபொருள் அனுமதி அட்டை நடைமுறைக்கு வந்தது.
**27.07.2022**
அவசரகால சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## ஓகஸ்ட்

**03.08.2022**
இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது.
வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவேன் என்று தனது முதலாவது உரையில் ஜனாதிபதி உறுதியளித்தார்.
சீன உளவுக் கப்பலின் வருகையால் சலசலப்பு ஏற்பட்டது.
**04.08.2022**
காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் முழுமையாக வெளியேறினர்.



**07.08.2022**
சர்ச்சைக்குரிய சீன கண்காணிப்பு கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு சீனாவிடம் இலங்கை கோரிக்கை
**08.08.2022**
இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பிணையில் விடுவிக்கப் பட்டார்.
**10.08.2022**
மின்சாரக் கட்டணங்கள் 75 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன.
**11.08.2022**
சிங்கப்பூரில் இருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்து சென்றார்.
அரசியலமைப்பின் 22ஆவது சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு
**12.08.2022**
நீதிப்பொறிமுறையின் முன் கோட்டாபய ராஜபக்ஷவை நிறுத்துமாறு ஜெனிவாவுக்கான கூட்டறிக்கையில் ஐந்து கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
**14.08.2022**
சர்ச்சைகளை ஏற்படுத்திய சீன யுவான் வாங் 5 அம்பாந்தோட்டை வந்தது.
தடைசெய்யப்பட்ட 6 புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கம்.
**15.08.2022**
இந்தியா டோனியர் 228 எனும் கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இலங்கைக்கு வழங்கியது.
**18.08.2022**
அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷாந்த ஜீவந்த குணத்திலக்க உள்ளிட்ட நால்வர் கைது
மன்னார் பூநகரியில் காற்றாலை மின்திட்டம் அமைப்பதற்கு இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு அனுமதி.
**23.08.2022**
கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முன்னாள் ஜனாதிபதிக்கான சலுகைகளை அனுபவிக்க அனுமதி.
வட்டுவாகலில் கடற்படைக்கு காணி அபகரிப்பது மக்கள் போராட்டத்தால் தடுப்பு.
தற்காலிகமாக 300க்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது.
**26.08.2022**
ரஞ்சன் ராமநாயக்க நிபந்தனைகளுடன் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை.

**30.08.2022**
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற முறையில் இடைக்கால வரவு - செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.
**31.08.2022**
ஜீ. எல். பீரிஸ், டலஸ் உள்ளிட்ட 13 எம். பிக்கள் அரசிலிருந்து பிரிந்து சுயாதீனமாக இயங்குவதாக அறிவிப்பு.
2.49 பில்லியன் டொலர் இலங்கைக்கு வழங்க ஐ. எம். எவ். இணக்கம்
**02.09.2022**
இடைக்கால வரவு செலவு திட்டம் 115 மேலிதக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
**03.09.2022**
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினார்.
**05.09.2022**
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தலைமையில் மேலவை இலங்கை கூட்டணி உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம்
**05.09.2022**
இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவதை இலகுபடுத்த விசேட குழு நியமிக்கப் பட்டது.
**07.09.2022**
நடிகை தமித்தா அபேரத்ன கைதுசெய்யப்பட்டார்.
**08.09.2022**
37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.
**12.09.2022**
மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துமாறு ஜெனிவாவில் வலியுறுத்தியது இந்தியா.
**13.09.2022**
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணைக்கான வரைபு வெளியிடப்பட்டது.
**15.09.2022**
கொழும்பு தாமரை கோபுரம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.
**16.09.2022**
அடிமைத்தனத்தின் சமகால வடிவமாக மலையக தமிழர்கள் வாழ்கின்றனர் என்று ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் ஜெனிவாவில் எடுத்துரைத்தார்.
**18.09.2022**
எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கை முன்னிட்டு விசேட அரச விடுமுறை வழங்கப்பட்டது.
**20.09.2022**
இலங்கைக்கு உதவுமாறு புலம்பெயர் இலங்கையருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.
தேசிய சபை அமைக்கும் பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்
**21.09.2022**
காணி அபகரிப்புக்கு முயற்சிகளுக்கு எதிராக குருந்தூர்மலையில் போராட்டம். விகாரைக்கான கட்டுமானப் பணிகளுக்கும் கடும் எதிர்ப்பு
**22.09.2022**
இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட புதிய பிரேரணையின் இறுதி வரைபு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.
திருகோணமலை ஆலய விவகாரம் சபையில் சூடுபிடித்தது.
**24.09.2022**
தேசிய சபையின் உறுப்பினர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டன.
**26.09.2022**
குருந்தூர் மலை சிங்களவர்களுடையது என்று கூறி பௌத்த பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.
**28.09.2022**
கொழும்பு, கிரேண்ட்பாஸ் கஜூமா தோட்டத்தில் தீவிபத்து 80 வீடுகள் தீக்கிரையாகின.
(மறுபக்கம் பார்க்க....)



# 2022 கடந்து வந்த பாதை!

## ஒக்டோபர்

**01.10.2022**



திருகோணேஸ்வரர் ஆலய வளர்ச்சிக்கு இந்தியா உதவும் என்று இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

அதி உயர் பாதுகாப்பு வலய வர்த்தமானி இரத்து

**05.10.2022**

முல்லைத்தீவில் ஏட்டிக்குப்போட்டியாக போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தமக்குள் மோதிக்கொண்டமையால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான தீர்மானத்தை நிராகரிப்பதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தது.

**06.10.2022**

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட புதிய பிரேரணை, 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது

**08.10.2022**

உலகளாவிய ரீதியில் பட்டினி வலயங்கள் என உலக உணவுத்திட்டத்தினால் பெயரிடப்பட்டுள்ள 48 நாடுகளில் இலங்கையும் உள்வாங்கப்பட்டது.

**10.10.2022**

குறைந்த காபன் வளர்ச்சி பங்காண்மைக்கான இணைந்த கடன் பொறிமுறை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ரஷ்யா எரோ புளொட் விமான சேவை நிறுவன மானது இலங்கைக்கான விமான சேவையை 4 மாதங்களுக்கு பிறகு ஆரம்பித்தது.

**11.10.2022**

திருக்கோணேஸ்வர ஆலய வியாபார நிலைய விவகாரம்: அமைச்சர்களான விதுர விக்கரமநாயக்க, டக்ளஸ் தேவானந்த ஆகியோர் நேரடி விஜயம்.

**12.10.2022**



ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசக ராக எரிக் சொல்ஹெயம் நியமிக்கப்பட்டார்.

**19.10.2022**

வவுனியா நெடுங்கேனி பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

ஆங்கிலத்தில் மட்டும் சட்டக்கல்லூரி பரீட்சை என்ற விடயமானது பூதாகரமானது.

**21.10.2022**

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த சட்டம் 178 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் காலமானார்.

**24.10.2022**

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் எட்டு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

**29.10.2022**

மலையக தமிழர்களை இலங்கை சமூகத்துடன் மேலும் எவ்வாறு இணைப்பது என்பது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

**31.10.2022**

குருந்தூரில் புனரமைப்பு பணிகளுக்கு தடை ஏற்படுத்துவது தவறு என்று கூறி 46 அமைப்புகள் நீதிமன்றத்துக்கு செல்வதாக அறிவித்தன.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச்சட்ட மூலம் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தமாக அமுலுக்கு வந்தது.

## நவம்பர்

**02.11.2022**

ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் விடுதலை.

**04.11.2022**

நாட்டில் முதன் முறையாக குரங்கம்மை நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இனங்காணப்பட்டார்.

**06.11.2022**

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் தனுஷ்க குணத்திலக்க கைது.

**07.11.2022**

பொலநறுவை வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 150 பேர் தப்பியோட்டம்.

**08.11.2022**

வியட்நாமிய தீவுக்கு அப்பால் நடுக்கடலில் மூழ்கிக்கொண்டிருந்த படகிலிருந்து 303 இங்கையர்கள் மீட்கப்பட்டனர்.

**09.11.2022**

வடக்கு மக்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பேன் என்று ஜனாதிபதி ரணில் உரை.

**11.11.2022**



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்து வந்த நளினி, முருகன், ரவிச்சந்திரன், ரொபட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் உள்ளிட்ட அறுவரையும் விடுதலை செய்து இந்தியா உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**14.11.2022**

2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டது.

**16.11.2022**

இலங்கையை சேர்ந்த 12 பெண்கள் வீட்டுப்பணிக்காக அபுதாபிக்கு அழைத்து செல்லப்பட்டு ஓமானில் நடைபெற்ற விழாவொன்றில் பாலியல் தொழிலுக்காக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட விடயம் வெளிக்கொணரப்பட்டது.

**20.11.2022**

அமெரிக்காவுக்கான தனிப்பட்ட பயணம் மேற்கொண்டிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினன் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷ நாட்டை வந்தடைந்தார்.

**22.11.2022**

சட்டம் மதற்றும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி பாடசாலைக்கு சேலையின்றி



வேறு ஆடைகளில் சென்ற ஆசிரியைகள் சர்ச்சையில் சிக்கினர்.

**26.11.2022**

வடக்கு கிழக்கில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது. துயிலும் இல்லங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தினர்.

## டிசெம்பர்



**07.12.2022**

'யாழ்ப்பாணம் வரவேற்பு வளைவு அருகில் ஏழு அடி உயரமான சிவலிங்கம் பிரதிஷ்டை.

**08.12.2022**

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் நிறைவேற்றம்.

காற்று மாசடைவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

**10.12.2022**

கடும் குளிரால் வடக்கு கிழக்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன.

**12.12.2022**

பலாலி விமான நிலையத்துக்கான சென்னைக்கான விமான சேவை ஆரம்பமாகியது.

**13.12.2022**

இந்திய புலனாய்வு பிரிவான ரோவின் தலைவரை சந்தித்தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவும் தெரிவித்தனர்.

சர்வக்கட்சி குழுக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

**15.12.2022**

முட்டை கட்டுப்பாட்டு விலை வர்த்தமானி ரத்து செய்யப்பட்டது.

**16.12.2022**

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் படுகொலை செய்யப்பட்டார

**18.12.2022**

யாழ்ப்பாண கடற்பகுதியில் பழுதடைந்த நிலையில் தத்தளித்த படகொன்றில் இருந்து 104



ரொஹிங்கியர் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

இலங்கை தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு தொடக்கவிழா கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

**21.12.2022**

யாழ்.மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் ஏழு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

**27.12.2022**

கனாடவுக்கு படகில் சட்டவிரோதமாக சென்று கடலில் காப்பாற்றப்பட்டு வியட்நாம் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்ட இலங்கையை சேர்ந்த 303 பேரில் 151 பேர் இலங்கை திரும்பினர்.

**29.12.2022**

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் கடலட்டை பதனிடும் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது.



# 2022 சர்வதேசம்



தொகுப்பு
**க.ஆ.கோகிலவாணி**
■ உதவி- ஆர்.இரவிவர்மன்




## ஜனவரி மாதம்

**02.01.2022**

பிரான்ஸின் புதுவருட தினத்தில் 874 கார்களுக்கு தீ வைக்கப்பட்டு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது.

ஐரோப்பியாவில் வானவெடிகளைப் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்ட போதிலும், அந்தத் தடையையும் மீறி வானவெடிகள் வெடித்ததால் 3 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

**03.01.2022**

சூடானிய பிரதமர் அப்டல்லா தனது பதவியை இராஜினாமா செய்தார்.

**08.01.2022**

கஸகஸ்தானில் மக்கள் புரட்சி, வன்முறையாக மாறியதில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு தீ வைத்தனர்.

**10.01.2022**

ஐரோப்பிய பாராளுமன்றத் தலைவர் டேவிட் சஷ்ஸோலி தனது 65 ஆவது வயதில் காலமானார்.

## பெப்ரவரி மாதம்

**04.02.2022**

வட சிரியாவில் அமெரிக்கப்படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் ஐ.எஸ்.தீவிரவாத குழுவின் தலைவர் குண்டை வெடிக்க வைத்து தனது குடும்பத்தினருடன் தற்கொலை செய்துகொண்டதாக அமெரிக்க அதிகாரிகள் அறிவித்தனர்.

**06.02.2022**



உலக புகழ்பெற்ற இந்திய பாடகி லதா மங்கேஷ்கர் தனது 92 ஆவது வயதில் காலமானார்.

பிரித்தானியாவின் அடுத்த மகாராணி அந்தஸ்து கமீலா வுக்கு என்பதை எலிஸபெத் மகாராணியார் உறுதிப்படுத்தினார்.

**11.02.2022**

உக்ரேனிலுள்ள அமெரிக்க பிரஜைகளை அந்நாட்டை விட்டு உடனடியாக வெளியேற அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் வலியுறுத்தினார்.



**14.02.2022**

மத்திய பாகிஸ்தானில் புனித நூலின் பக்கங்களை எரித்து மத நிந்தனையில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்குள்ளான நபரொருவரை கும்பலொன்று தாக்கிக் கொன்றுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் அறிவித்தனர்.

**22.02.2022**

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரேனின் கிழக்கில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிராந்தியங்களை சுதந்திர குடியரசுகளாக அங்கிகரித்தார்.

**24.02.2022**

உக்ரேன் ரஷ்ய மோதல் வெடித்தது

**25.02.2022**

உக்ரேன் மீதான படையெடுப்பை அடுத்து, ரஷ்யாவுக்கு எதிராக பரந்தளவான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதித்தது. இந்த தடைகளானது ரஷ்யாவின் நிதித்துறை, சக்திவளம், போக்குவரத்து, ரஷ்ய அதிகாரிகளுக்கான விசாக்கள் என்பவற்றை இலக்கு வைத்து விதிக்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தது.

## மார்ச் மாதம்

**03.03.2022**

மூன்றாம் உலக போரொன்று கிளர்ந்தெழுந்தால் அது பேரழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதப் போரொன்றாகவே இருக்கும் என்று ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் கெர்கேயி லாவ்ரோவ் தெரிவித்தார்.

தாய்வான் ஜனாதிபதி தஸாங் இங் வென், தானும் உப ஜனாதிபதி வில்லியம் லாயும் பிரதமர் ஸு தஸெங் சாங்கும் தமது ஒரு மாத ஊதியத்தை போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரேனுக்கான மனிதாபிமான நிவாரண உதவிகளுக்கு வழங்கவுள்ளதாக அறிவித்தனர்.



**04.03.2023**

உக்ரேன் ஜனாதிபதி வோலோடிமைர் ஜெலன்ஸிகியை கொலை செய்வதற்கு நடந்த 3 முயற்சிகளை அந்நாட்டு அதிகாரிகள் முறியடித்துள்ளனர்.

**09.03.2022**

தாங்கள் சரணடைய போவதில்லை என்று உக்ரேனிய ஜனாதிபதி பிரித்தானிய பாராளுமன்றத்தில் காணொளி தொடர்பாடல் மூலம் உரையாற்றினார்.

132 பேருடன் பயணித்த சீனாவின் போயிங் 737 விமானம் விபத்துக்குள்ளாகி வனப் பிராந்திய மலை பிரதேசத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

**28.03.2022**



ஒஸ்கார் விருது வழங்கும் வைபவத்தின்போது அமெரிக்க நகைச்சுவை நடிகரான கிரிஸ் ரொக் பிரபல ஹொலிவூட் நடிகரான வில் ஸ்மித்தின் மனைவி ஜடா பிஸ்கெட் ஸ்மித் தொடர்பில் வேடிக்கையாக மேடையில் விமர்சிக்கவும் சினமடைந்த வில் ஸ்மித் அவரை தாக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## ஏப்ரல் மாதம்

**03.04.2022**

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் ஆலோசனையின் பிரகாரம் அந்நாட்டு ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தார்.

**07.04.2022**

பாப்பரசர் பிரான்சிஸ் உக்ரேனிய புசா நகரில் இடம்பெற்ற கொடூர படுகொலைக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், புசா நகரிலிருந்து கொண்டுவரப்பட்ட உக்ரேனிய தேசிய கொடியை முத்தமிட்டார்.



அல்கொய்தா தீவிரவாத குழுவின் தலைவர் அய்மான் ஸவாஹ்ரி 2020ஆம் ஆண்டில் இறந்துவிட்டதாக வதந்திகள் பரவிய நிலையில் அவர் உயிருடன் தோன்றும் புதிய காணொளி காட்சி வெளியானது.

**08.04.2022**

சீனாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் உத்தியோகபூர்வமாக இறப்பதற்கு முன்னர் அவர்களது இதயங்களை இருதய மாற்று அறுவைச் சிகிச்சைக்காக வெட்டி எடுத்ததான குற்றச்சாட்டு வெளியானது.

**10.04.2022**

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது தலைமைத்துவம் தொடர்பில் நடத்தப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பில் தோல்வியை தழுவியதையடுத்து பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

**11.04.2022**

பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராக பி.எம்.எல்.என். கட்சியின் தலைவர் ஷபாஸ் ஷெரீப் தெரிவுசெய்யப்பட்டார்.

**22.04.2022**

உக்ரேனிய நகருக்கு அண்மையில் பெருந்தொகையான கல்லறைகள் இருப்பது செய்மதிப் புகைப்படங்களில் சான்றுகளான வெளியாகின.

ஹெய்ட்டியில் வீதியில் விழுந்து விமானம் விபத்துக்குள்ளானது: 6 பேர் பலியாகினர்.



**25.04.2022**

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்கோன் தேர்தலில் போட்டியிட்டு மீளவும் வெற்றிபெற்றார்.

**26.04.2022**

கோடிஸ்வர தொழிலாதிபரான எலொன் மஸ்க் டுவிட்டர் சமூக வலைத்தள நிறுவனத்தை 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார்.

## மே மாதம்

**01.05.2022**

கினியா மூன்று வருடங்களுக்கு பின்னர் மக்கள் ஆட்சிக்கு திரும்பியது.

**05.05.2022**

சீனாவில் சாங்க்ஷா பிராந்தியத்தில் பகுதியாக இடிந்து விழுந்த கட்டடமொன்றின் இடிபாடுகளின் கீழ் சிக்கியிருந்த பெண் அதிசயத்தக்க வகையில் 6 நாட்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

**07.05.2022**

ஆப்கானிஸ்தானிலுள்ள பெண்கள் பொது இடத்தில் தமது முகத்தை மூடி ஆடை அணிய வேண்டும என்று தலி பான்கள் உத்தரவிட்டனர்.

**09.05.2022**

கனேடிய பிரமதர், அமெரிக்க முதல் பெண்மணி உக்ரேனுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டனர்.

**10.05.2022**

கொரிய தீபகற்பத்தில் நிலவிய பதற்றமான சூழலுக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட நிலத்தடி பதுங்கு குழியிலிருந்து தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியான யூன் சுக்யோல் தனது பணியை தொடங்கினார்.

**13.05.2022**

ஐக்கிய அரபு இராஜ்ஜிய ஜனாதிபதி ஷெய்க் கலிபா பின் ஸேயத் அல் நஹ்யன் தனது 73ஆவது வயதில் காலமானார். புதிய ஜனாதிபதியாக ஷெய்க் மொஹமட் பின்ஸேயத் அல் நஹ்யன் தெரிவுசெய்யப்பட்டார்.

**16.05.2022**

சோமாலியாவின் புதிய ஜனாதிபதியாக ஹஸன் ஷெயின் மொஹமட்டை தெரிவுசெய்தனர்.

**22.05.2022**

அவுஸ்திரேலியாவின் 31ஆவது பிரதமராக அந்தோனி அல்பானிஸ் அந்நாட்டின் 31ஆவது பிரதமராக பொறுப்பேற்றார்.

குரங்கு அம்மை வைரஸ் 14 நாடுகளில் பரவியமை கண்டறியப்பட்டது.

## ஜூன் மாதம்

**05.06.2022**

நைஜீரியா தலைநகர் அபுஜாவில் மதகுரு ஒருவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டமைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட நபரொருவர் அந்த மதகுருவின் ஆதரவாளர்களால் உயிருடன் தீ வைத்து கொல்லப்பட்டார்.

**12.06.2022**

அமெரிக்காவில் அடுத்தடுத்து இடம்பெற்ற இரு பிரதான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களையடுத்து துப்பாக்கிப் பாவனை தொடர்பான சட்டங்களை கடுமையாக்க வலியுறுத்தி பல்லாயிரக்கணக்கானோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

**20.06.2022**

கொலம்பிய ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் கிளர்ச்சித் தலைவர் குஸ்ட ஈவோ பெட்ரோ 50.5 சதவீத வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார்.

பிலிப்பைன்ஸ் உபஜனாதிபதியாக ரொட்றிக்கோ டுதெர்ட்டின் மகள் பதவியேற்பு

**21.06.2022**

ரஷ்யாவின் சுயாதீன பத்திரிகையாளரான நோவயா கஸெட்டாவின் தலைமை ஆசிரியர் திமித்ரி முதாதோவ் தனது சமாதானத்துக்கான நோபல் பரிசு பதக்கத்தை 103.5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

ஹொங்கொங்கில் கடந்த சுமார் 50 வருட காலமாக பிரபல அடையாளமொன்றாக விளங்கி வந்த மிதக்கும் உணவகமொன்று துறைமுகத்திலிருந்து இழுத்து செல்லப்பட்டு ஒரிரு நாட்களில் மூழ்கியது.

**22.06.2022**

ஆப்கானை உலுக்கிய 6.1 ரிச்டர் பூமியதர்ச்சியில் சிக்கி 1000 பேர் உயிரிழந்தனர். 1,500 பேர் காணாமல் போயினர்.

**23.06.2022**

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு உக்ரேனால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அந்த ஒன்றியம் அங்கீகாரம் வழங்கியது. **(மறு பக்கம் பார்க்க...)**




# 2022 சர்வதேசம்

## ஜீலை மாதம்

**01.07.2022**

பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி மார்கோஸின் மகன் பெர்டினாண்ட் மார்கோஸ் அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார்.

**08.7.2022**

பிரித்தானிய பிரதமர் பதவி விலகுவதாக அறிவித்தார்.

**14.07.2022**

வத்திக்கான் ஆலோசனை சபைக்கு முதல் தடவையாக பெண்கள் மூவர் நியமிக்கப்பட்டனர்.

## செப்டெம்பர் மாதம்

**08.09.2022**

பிரித்தானிய புதிய பிரதமர் லிஸ் ட்ராஸால் அமைச்சரவை முழுமையாக மறுசீரமைப்பு செய்யப்பட்டது. நட்பு வட்டாரத்தை சேர்ந்தவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்பட்டன.



**11.09.2022**

பிரித்தானிய மன்னராக சார்ள்ஸ் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

மகராணியாரது பூதவுடல் லண்டனுக்கு எடுத்து செல்லப் பட்டது: எடின்போர்க் விமான நிலையத்துக்கு செல்லும் வழி யில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி அஞ்சலி செலுத் தினர்.

**12.09.2022**

பிரித்தானிய பாராளுமன்றத்தில் முதல் தடவையாக மன் னர் சார்ள்ஸ் உரை நிகழ்த்தினார்.

**17.09.2022**

மகாராணியின் பூதவுடலுக்கு எட்டு பேரப்பிள்ளைகள் அஞ் சலி செலுத்தினர்.



## ஒக்டோர் மாதம்

**01.10.2022**



அமெரிக்க புளோரிடா மாநிலத்தை தாக்கிய இயன் சூறாவளியால் அந்த மாநிலத்தின் உட்கட்டமைப்புகளுக்கு கடும் சேதங்கள் ஏற்பட்டன.

**05.10.2022**

உலகின் மிக நீளமான லொலிபொப் வரிசையை உரு வாக்கி தென் ஆபிரிக்காவிலுள்ள தொண்டர் அமைப்பு புதிய கின்னஸ் சாதனையை படைத்தது.



**06.10.2022**

வட கிழக்கு தாய்லாந்தில் சிறுவர்கள் பராமரிப்பு நிலையமொன்றில் நபரொருவர் நடத்திய தாக்குதலில் குறைந்தது 38 பேர் பலியாகினர். பலியானவர்களில் 38 பேர் சிறுவர்களாவர்.

**10.10.2022**

அயர்லாந்து குடியரசில் பெற்றோல் நிலையமொன்றில் ஏற்பட்ட பாரிய வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 10 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர்.

**12.10.2022**

நேபாளத்தின் வட மேற்கேயுள்ள கார்னாலி மாகாணத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி குறைந்தது 33 பேர் பலியாகினர்.

**20.10.2022**

பிரித்தானியப் பிரதமர் லிஸ் ட்ரஸ் பிரதமர் பதவியலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

**24.10.2022**

பிரித்தானியாவின் புதிய பிரதமராகவதற்கான போட்டியில் இந்திய வம்வாவளியை சேர்ந்த ரிஷி சுனக் வெற்றிபெற்றால்.

## நவம்பர் மாதம்

**01.11.2022**

அமெரிக்கா தென்கொரியாவுடன் இணைந்து வானில் இராணுவப் பயிற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாயின் கடும் பதிலடி கொடுக்கப்படும் என்று வடகொரிய அறிவித்தது.



**03.11.2022**

பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான் வாசிரிபாத் நகரில் நடந்த போராட்டப் பேரணியில் வைத்து சுடப்பட்டார்.

**06.11.2022**

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான 13 நாட்கள் உச்சிமாநாடு எகிப்தில் எல் ஷெய்க்கிலுள் செங்கடல் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

**09.11.2022**

உகண்டாவில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் எபோலா வைரஸ் தொற்று பரவியுள்ளமை கண்டறியப்பட்ட தையடுத்து அந்நாடெங்குமுள்ள பாடசாலைகள் மூடப்பட்டன.

**25.11.2022**

பெரு பிரதமர் அணிபாஸ் ரொர்ரெஸ் தனது பதவியை இராஜினமா செய்தார்.

## டிசெம்பர் மாதம்



**01.12.2022**

கட்டாரில் இந்த ஆண்டுக்கான கால்பந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்ற நிலையில், போட்டிகள் குறித்தான பணிகளின் போது 400க்கும் 500க்கும் இடைப்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாக அந்தப் போட்டியுடன் தொடர்புப்பட்ட உயர்மட்ட அதிகாரி தெரிவித்தார்.

**08.12.2022**

ஜேர்மனியில் அரசாங்கத்தை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் 25 பேரை அந்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்தனர்.

**21.12.2022**

தலிபான்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள பல்கலைக்கழ கங்களில் பெண்கள் கல்வி கற்பதற்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடைவிதித்தனர்.

# 2022 கடந்து வந்த பாதை! விளையாட்டு



தொகுப்பு
க.ஆ.கோகிலவாணி
■ உதவி- ஆர்.இரவிவர்மன்

## ஜனவரி மாதம்

**01.01.2022**

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான குயின்டன் டி கொக் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

**03.01.2022**



பர்மிங்ஹாம் 2002 கொமன்வெல்த் போட்டிக ளுக்கான எலிசபெத் மகாராணியின் செய்தி அடங் கிய கோல் இலங்கையை வந்தடைந்தது. மகார ணியின் கோலை கொமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சந்தன விதானகே மற்றும் டினுஸா கோமஸ் ஆகியோர் விமானத்திலிருந்து பொறுப்பேற்றனர்.

**05.01.2022**



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரராக திகழ்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்தி வந்த பானுக்க ராஜபக்ஷ, சர்வதேச கிரிக் கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெறுவதாக அறி வித்தார்.

**06.01.2022**



இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இருந்த கொமன்வெல்த் போட்டிகளுக்கான மகா ராணி யின் செய்தியை ஏந்திய கோல் தனது இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு பங்களாதேஷ் நோக்கி புறப்பட்டு சென்றது.

**11.01.2022**

ஐ.பி.எல். ஏலத்தில் மிகவும் அதிக தொகைக்கு ஏலம் போனவர் என்ற பெருமை பெற்ற கிறிஸ் மோரிஸ் அனைத்து வடிவ கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெற்றார்.



**27.01.2022**

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான டில்ருவன் பெரேரா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற தீர்மானித்தார்.

## பெப்ரவரி மாதம்

**04.02.2022**



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்ப மாகின.

அனைத்து வகை யான கிரிக்கெட் போட்டிகளில் இருந் தும் ஓய்வுபெறவுள்ள தாக இலங்கையின் முன்னாள் டெஸ்ட் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான சுரங்க லக்மால் தெரிவித்துள்ளார்.

**06.02.2022**

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் பயிற் சியாளர் பதவியிலிருந்து ஜஸ்டின் லாங்கர் இரா ஜினாமா செய்தார்.

**16.02.2022**



ரஷ்யாவின் 15 வயதான பிகர் ஸ்கேட்டிங் இளம் வீராங்கனை கமிலா வலீவா, தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து பயன்படுத்தியது உறுதியாகியது.

**22.02.2022**

பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியில் நடை பெற்ற ஆட்டத்தில் லாகூர் குலாண்டர்ஸ் அணி வீரர் கம்ரான் குலாம், ஓர் பிடியை தவறவிட் டதால், சக வீரரும், வேகப்பந்து வீச்சாளருமான ஹாரிஸ் ரவூப் அவரின் கன்னத்தில் அறைந்தார்.

**27.02.2022**

இலங்கை தேசிய கால்ப்பந்தட்ட அணி வீரரான டக்ஸன் பியூஸ்லஸ் மாலைத்தீவில் அகால மரணமடைந்தார்.

உக்ரேன் டென்னிஸ் வீரர் செர்க்கி ஸ்டா கோவ்ஸ்கி ரஷ்யாவுக்கு எதிராக போரிட தனது நாட்டு இராணுவத்தில் இணைந்துக் கொண்டார்.

உலகக் கிண்ண கால்பந்து தகுதி சுற்றில் ரஷ் யாவுக்கு எதிரான ஆட்டத்தில் விளையாட மட்டோம் என்று போலந்து கால்பந்து சம்மே ளனம் அறிவித்தது.

**28.02.2022**

பரிசுத்த பாப்பரசர் மற்றும் கர்தினால் மெல் கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோருக்கு இடையி லான சந்திப்பு வத்திக்கானில் இடம்பெற்றது.

## மார்ச் மாதம்

ரஷ்ய கால்ப்பந்து அணி பங்கேற்கும் போட்டிகளில் அந்நாட்டு கொடி அல்லது தேசிய கீதம் பயன்படுத்தப்படமாட்டாது என்று சர்வதேச கால்பந்து சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இலங்கை கிரிக்கெட் அணியை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸிலிருந்து இரண்டு தோட்டாக்களை சண்டிகர் பொலிஸார் கண்டு பிடித்தனர். சண்டிகரில் உள்ள ஹோட்டலி லிருந்து மொஹாலியில் உள்ள பிந்த்ரா கிரிக்கெட் மைதானத்துக்கு வீரர்கள் பயிற்சிக்காக பயன் படுத்தி பஸ்ஸின் லக்கேஜ் பெட்டியில் வழக்க மான சோதனையின் போது இரண்டு தோட்டாக் கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**02.03.2022**

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பையடுத்து ரஷ்யா மற்றும் அதன் ஆதரவு நாடான பெலாரஸ் ஆகிய நாடுகளின் விளையாட்டு அணிகள் சர்வ தேச அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று விளையாட்டு அமைப்புகளுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு பரிந்துரை செய்தது.

போரையும் வன்முறையையும் நிறுத்துங்கள் என்று பிரபல ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை அனஸ்தசியா கோரிக்கை விடுத்தார்.

அவுஸ்திரேலியா அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, அந்த அணியின் வீரர் ஆஷ்டன் அசுருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

**03.03.2023**

ரஷ்ய வீரர்கள் தடகளப் போட்டிகளில் பங் கேற்பதற்கு தடைவிதித்துள்ளதாக உலக தடகள கூட்டமைப்பு அறிவித்தது. ரஷ்ய- உக்ரேன் மோதலை அடிப்படையாக வைத்தே இந்த தடைவிதிக்கப்பட்டது.



**03.03.2023**

டென்னிஸ் போட்டியில் கிடைக்கும் பரிசுத் தொகை முழுவதையும் உக்ரேன் இராணுவத் துக்கு வழங்குவேன் என்று அந்நாட்டு வீராங் கனை எலினா ஸ்விடோ லினா அறிவித்தார். மெக்சிகோவில் நடைபெற்ற மன்டெரே மகளிர் டென்னிஸ் போட்டியில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற் பதற்கு ரஷ்யாவுக்கு தடைவிதிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் தனது 52ஆவது வயதில் காலமானார்.

**14.03.2022**

இந்தியாவின் வெல்ஸில் நடைபெற்ற டென் னிஸ் போட்டியில் 4 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற ஜப்பானின் நவாமி ஒசாகா, பார் வையாளர் ஒருவரின் வசை சொற்களால் மனமு டைந்து மைதானத்திலேயே கண்ணீர் சிந்தினார்.

**15.03.2022**

இலங்கையின் உயரம் பாய்தல் வீரரான உஷான் திவங்க பெரேரா, அமெரிக்காவின் பல்கலைக்க ழக உள்ளக மெய்வல்லுநர் விளையாட்டு விழா வின் இரண்டாவது அத்தியாயத்தில் வெற்றியீட்டி உயரம் பாய்தல் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

**16.03.2022**

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் டெல்லி கெப்பிட் டல்ஸ் அணியின் பஸ் மீது தாக்குதல் நடத்தப் பட்டது.

**18.03.2022**

உக்ரேனின் முன்னாள் டென்னிஸ் வீரர் அலெக்சாண்டார் டோல்கோபோலவ் ரஷ்யா வுக்கு எதிரான போரில் களமிறங்கினார்.

**23.03.2022**


உலகின் முதல்தர டென்னிஸ் வீராங்கனை யான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி 25 வயதில் தனது ஓய்வு முடிவை அறிவித்தார்.

மகளிர் சர்வதேச 20க்கு20 கிரிக்கெட் போட் டியில் பஹ்ரைன் அணிக்காக விளையாடிய இலங்கையின் தீபிகா ராங்கிக 161 ஓட்டங்களை பெற்று உலக சாதனை படைத்துள்ளார்.

**25.03.2022**

15ஆவது ஐ.பி.எல்.திருவிழா ஆரம்பமானது.

தந்த வீட்டில் இடம்பெற்ற கொள்ளை சம்ப வத்தில் தந்த உலகக் கிண்ண சம்பியன் பதக்கம் திருடு போனதாக பிரான்ஸ் நாட்டு கால்பந்து வீரர் போல் போக்பா தெரிவித்தார்.



# 2022 கடந்து வந்த பாதை!

# விளையாட்டு

## ஏப்ரல் மாதம்

**04.04.2022**

நாட்டில் நிலவும் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் கிரிக்கெட் வீரர்கள் பலரும் தங்களது கருத்துக்களை வெளியிட்டனர்.

நெதர்லாந்து அணிக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியோடு நியூசிலாந்து அணியின் மூத்த வீரரான ரொஸ் டெய்லர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வுபெற்றார்.

**07.04.2022**

விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்கவும் நாட்டின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கவும் நியமிக்கப்பட்ட மஹேல ஜயவர்தன தலைமையிலான தேசிய விளையாட்டு கவுன்சிலின் அதிகாரிகள் அனைவரும் தமது பதவிகளை இராஜினாமா செய்வதாக அறிவித்தனர்.

**09.04.2022**

கானாவில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் தேல்வியடைந்த 15 வயது சிறுவன் வெற்றிபெற்ற வரது கன்னத்தில் அறைந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**11.04.2022**

ஐ.பி.எல் போட்டியில் முதல்முறையாக எக்காரணமும் இல்லாமல் அடுத்த வீரர் விளையாடுவதற்காக ரிடையார்ட் ஹார்ட் முறையில் அஸ்வின் ஆட்டத்திலிருந்து விலகியது புதிய புரட்சியையும் விவாதத்தையும் உருவாக்கியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் பயிற்சியாளர்களாக வாஸ் - நவாஸ் நியமிக்கப்பட்டார்.

**19.04.2022**

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் ஜிம்னாஸ்டிக் விளையாட்டையும் சேர்க்குமாறு தெறிகாசிய விளையாட்டு சம்மேளனத்திடமும் அடுத்த ஒலிம்பிக் போட்டியை நடத்தும் பாகிஸ்தான் ஒலிம்பிக் கமிட்டியுனும் இலங்கை உள்ளிட்ட 4 நாடுகள் கேரிக்கை விடுத்துள்ளன.

**20.04.2022**

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மொஷர்ப் ஹூசைன் தனது 40ஆவது வயதில் மூளைப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார்.

ரஷ்ய வீரர்களுக்கு விம்பிள்டன் தடை

**21.04.2022**

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரராக திகழ்ந்த கெய்ரன் பொல்லார்ட் தனது 15ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

வடக்கின் பெரும் சமர் கிரிக்கெட் தொடர் ஆரம்பமானது.

**24.04.2022**

இலங்கை மகளிருக்காடி 400 மீற்றர் தடைதாண்டல் சம்பியனான கௌசல்யா மதுஷானி தற்கொலை செய்துகொண்டார்.

இங்கிலாந்தின் பயிற்சியாளர் பதவியை நிராகரித்த மஹேல ஜயவர்தன.

**29.04.2022**

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக சகலதுறை ஆட்டக்காரரான பென் ஸ்டால்ஸ் நியமிக்கப்படுவதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

## மே மாதம்

**02.05.2022**

நைஜீரிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து இலங்கை அணியின் முன்னாள் வீரரான அசங்க குருசிங்க இராஜினாமா செய்தார்.

**03.05.2022**

சம்பியன் லீக் மற்றும் பிற அனைத்து ஐரோப்பிய போட்டிகளிலும் ரஷ்ய கழக கால்பந்து அணிகள் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் உதவி பயிற் சியாளராக நியூஸிலாந்து அணியின் முன்னாள் தலை வர் டேனியல் விட்டோரியா நியமிக்கப்பட்டார்.

**07.05.2022**

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் உரிய மரியாதை கிடைக்கவில்லை என்றும் தான் சரியாக நடத்தப் படவில்லை என்றும் கிறிஸ் கெயில் தெரிவித்தார்.

**12.05.2022**

இலங்கை கால்பந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளராக இங்கிலாந்து நாட்டின் என்டி பொர்ரிஸனை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நியமித்தது.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் நியூஸிலாந்து வீரர் பிரண்டன் மெக்கலம் தெரிவுசெய்யப்பட்டார்.

**15.05.2022**

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் முன் னாள் வீரர் அண்ட்ரு சைமண்ட்ஸ் டவுன்வில்லே பகுதிக்கு வெளியெ ஏற்பட்ட கார் விபத்திர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

**19.05.2022**

தோல்வியே கண்டிராத குத்துச்சண்டை வீரர் மூசா யாமக் மூனிச்சில் நடைபெற்ற போட்டியின்போது மாரடைப்பால் மரணமடைந்தார்.

## ஜூன் மாதம்

**12.06.2022**

இந்துக்களின் பெரும்சமர் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரிக்கும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 11ஆவது கிரிக்கெட் சுற்றுப் போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது.

**13.06.2022**

சுவிற்சர்வாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற தடகள விளையாட்டு விழாவில் நீளம் பாய்தல் போட்டியில் இலங்கை வீராங்கனை சாரங்கி டி சில்வா தங்கப்பதக்கம் வென்றார்.

**15.06.2022**

ஆசிய கிண்ணக் கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியின்போது இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் வீரர்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

## ஜூலை மாதம்

**04.07.2022**

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 10 செக்கன்களில் ஓடி முடித்த முதலாவது தெற்காசிய வீரராகவும் இலங்கை வீரராகவும் யுபுன் அபேகோன் புதிய வரலாற்று சாதனையை நிலைநாட்டினார். அதேவேளை, 100 மீற்றரில் தனது சொந்த தெற்காசிய சாதனையையும் இலங்கை சாதனையையும் அவர் முறியடித்தார்.

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவின் ஆண் களுக்கான 100 மீற்றர் திறன்காண் ஓட்டப்போட்டியில் இலங்கை வீரர் யுப்புன் அபேகோன் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றார்.

## ஓகஸ்ட் மாதம்



**04.08.2022**

பொதுநலவாய விளையாட்டுப்போட்டியில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து சென்ற இரு வீரர்கள் தலைமறைவாகினர்.

பொதுநலவாய விளையாட்டுப்போட்டியின் 7ஆம் நாள் போட்டியில் இலங்கை இரண்டு வெண்கல பதக்கங்களை பெற்றுக்கொண்டது.

**11.08.2022**

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தானை வீழ்த்தி ஆசிய கிண்ணத்தை கைப்பற்றியது.

சிங்கப்பூர் ஓ.சி.பி.சி உள்ளக அரங்கில் நடைபெற்ற 13ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இலங்கை 63:52 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியன் பட்டத்தை தக்கவைத்து கொண்டது.

## செப்டெம்பர் மாதம்

**21.09.2022**

ஊக்கமருந்து உட்கொண்டதன் காரணமாக சுவாரிஸ் பிரேமச்சந்திர, நிஷாந்த பெரேரா, ஷாலிக்கா தில்ஹானி ஆகிய சைக்கிளோட்ட வீர, வீராங்கனைகள் மூவருக்கு 4 வருட காலத் தடை விதிப்பதற்கு இலங்கை ஊக்க மருந்து தடுப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

## ஒக்டோபர் மாதம்

**01.10.2022**

இலங்கை கிரிக்கெட் சம்மேளனத்தில் ஏற்பட்ட சிக்கல் நிலைமையை தீர்ப்பதற்கு மூவரடங்கிய சுயாதீன குழு நியமிக்கப்பட்டது.

ரி 20 உலகக் கிண்ண பணப்பரிசாக 199 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டது.

**01.10.2022**

மாலைத்தீவின் நடைபெற்ற 7ஆவது மகளிர் தெற்காசிய கூடைப்பந்தாட்ட சங்க சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை மகளிர் அணி சம்பியனானது.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நினைவு முத்திரை ஒன்று தபால் தலைமையகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்துக்கு காரணமானவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர், முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 39 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுப்பதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது.

## நவம்பர் மாதம்

**13.11.2022**

டி20 கிரிக்கெட் உலகக் கோப்பையை இங்கிலாந்து கிரிக்கெட் அணி வென்றது.

**20.11.2022**

2022ஆம் ஆண்டின் ஆண்கள் உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கத்தாரில் ஆரம்பமானது.



## டிசெம்பர் மாதம்

**டிசம்பர் 18**

2022ஆம் ஆண்டுக்கான கால்பந்து உலகக்கோப்பையை கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்டினா அணி வென்றது.